

கல்கி
KALKI 11.8.91
ரூ. 3.00
பொன்விழா ஆண்டு
பாண்டிச்சேரி அரசியல்
- சிறப்புக் கட்டுரை
MIDIVERB
ஆடியோ கேஸட்டுகள்:
கலைஞன் முதல் ரசிகன் வரை...

கோஷ்டிப் பூசலில் பாண்டிச்சேரி அமைச்சரவை!

'நிலையற்றது எது?' என்று பாண்டிச்சேரி மக்களிடம் கேட்டால், ''சந்தேகமென்ன, ஒவ்வொரு தேர்தலுக்குப் பின்னரும் எங்கள் ஊரில் அமைக்கப்படும் அரசுகள்தான்'' என்று டக்கென்று பதில் சொல்வார்கள். அந்த அளவுக்கு, அங்கு அடிக்கடி ஆட்சிகள் அமைவதும், கவிழ்வதும் சகஜம். பாண்டிச்சேரி அரசியலில் பெருந்தலைகள் என்று கருதப்பட்ட குபேர், வெங்கடசுப்பா ரெட்டியார் போன்றவர்கள் கூட முழுப் பதவிக் காலமும் நீடிக்க முடியவில்லை! இந்த நிலையில், இப்போது பதவியேற்றிருக்கும் வைத்தியலிங்கம் ஐந்தாண்டு காலமும் முதல்வர் பதவியில் நீடித்திருப்பாரா? பாண்டிச்சேரியில் கேட்கப்படும் முதல் கேள்வி இதுதான்! காரணம் இ. காங்கிரஸ் கட்சிக்கே உரிய கோஷ்டிப் பூசல்தான்!



♦ கண்ணன்

பாண்டிச்சேரி இ. காங்கிரஸில் பருக் - சண்முகம் கோஷ்டித் தகராறு என்பது இன்று நேற்றல்ல; பல்லாண்டுகளாகவே இருந்து வரும் ஒன்று. சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஒருவர் காலை மற்றொருவர் வாருவதும் ஒருவர் முதுகில் மற்றொருவர் குத்துவதும் வாடிக்கை. பருக்கை மாநில அரசியலில் இருந்து ஓரங்கட்டி விட வேண்டும் என்று பாண்டிச்சேரி இ. காங்கிரஸ் தலைவர் சண்முகம் கணக்குப் போட்டதால் அண்மையில் நடந்த தேர்தலில் பருக்குக்குச் சட்டமன்றத் தொகுதி கொடுக்காமல், பாராளுமன்றத் தொகுதி கொடுக்கப்பட்டது. சண்முகம், தாம் போட்டி போடக் காகக் கடை சட்டமன்றத் தொகுதியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். இங்கேதான் பிரச்னை ஆரம்பமாயிற்று.

காகக்கடை தொகுதி என்பது பருக்கின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த கண்ணனின் தொகுதி. பாண்டிச்சேரியில் காங்கிரஸ் கட்சியை வளர்த்ததில் கண்ணனுக்கும் கணிசமான பங்கு உண்டு. கூடவே சண்முகத்திற்கெதிராக ஒரு கோஷ்டியாகவும் வளர்ந்தார். இந்த நிலையில், கண்ணனுக்கு லாஸ்பேட்டை தொகுதி ஒதுக்கப்பட்டது. இது பருக் மரைக்காயரின் தொகுதி. சண்முகத்தின் நோக்கம், ஒரு புதிய தொகுதியில் நிற்க வைப்பதன் மூலம் கண்ணனைத் தோற்கடிப்பதுதான். அதாவது அரசியல் எதிரிகள் இருவரையும் தேர்தலுக்குப் பிறகு முடங்கச் செய்வதுதான் சண்முகத்தின் திட்டம். இதற்கிடையில் தேர்தல் பிரசாரங்களின் போது பருக், 'காங்கிரஸ் ஆட்சி அமைக்குமானால் கண்ணன் தான் முதல்வர்' என்று பேசி, சண்முகம் கோஷ்டியினரை வெறுப்பேற்றியிருக்கிறார். அதே சமயம் காகக்கடைத் தொகுதியில் சண்முகத்தைத் தோற்கடிப்பதற்கான முயற்சிகளும் கட்சிக்குள்ளேயே நடந்தன.

♦ சண்முகம்



♦ பருக்





"முன்னான பதவிதான் முதல்வர் பதவி!"

பாண்டிச்சேரி முதல்வர் வைத்திய லிங்கம் குடியிருக்கும் முதல் மாடிக்குச் சென்றால், எந்தவித பந்தாவும் கிடையாது. ஒரே ஒரு போலீஸ்காரரைத் தவிர வேறு பாதுகாப்புக் கிடையாது. வருகிறவர்கள் நேரடியாக முதல்வரைப் பார்க்கிறார்கள். முதல்வர் பாண்டிச்சேரி பக்கத்தில் உள்ள தெட்டப்பாக்கம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். முழங்கைக்கும் கீழே இறங்கும் கதர்ச் சட்டை. மெல்லிய குரலில் பேசுகிறார். உதட்டோடு ஒட்டியிருக்கும் புன்னகை. ''முன்னான பதவிதான் முதல்வர் பதவி'' என்று சிரித்துக் கொண்டே கூறும் முதல்வர் இரண்டு விஷயங்களில் குறியாக இருக்கிறார். அதாவது பாண்டிச்சேரிக்கு மாநில அந்தஸ்தும், பாண்டிச்சேரி நகருக்கு பி.2 அந்தஸ்தும் பெற்றுத் தர வேண்டும்.

அது என்ன மாநில அந்தஸ்து?

பாண்டியில் சட்டமன்றம், அரசு என்றெல்லாம் இருந்தாலும் அவற்றுக்கு அரசியல் அதிகாரம் ஏதும் கிடையாது. மக்கள் நலன்களுக்கு ஏற்ப அவசரச் சட்டம் எதுவும் போட முடியாது. எல்லாம் துணை நிலை ஆளுனர் கையில்தான் இருக்கின்றன. அமைச்சரவை என்பது ஆளுனருக்கு ஆலோசனைக் குழுவாக மட்டுமே செயல்பட முடியும். வருவாயைப் பெருக்க, வரிகள் போடும் உரிமையும், எவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று நிர்ணயிக்கும் உரிமையும், மத்திய அரசுக்கே உண்டு. ஆகையால்தான் தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்கள் போன்று மாநில அந்தஸ்து வேண்டும் என்ற கோரிக்கை கிளம்பியிருக்கிறது.

மக்கள் தொகைக்கேற்ப நகரங்களை ஏ, பி, ஸி, என்றெல்லாம் பிரித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பாண்டி நகரத்தை பி.2 அந்தஸ்துக்கு மாற்றினால் அரசு ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப் படி உயரும்.

ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட அனுதாப அலையில், அனைத்துக் காங்கிரஸ் வேட்பாளர்களும் கரை சேர்ந்து விடுவார்கள் என்றுதான் எல்லோரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் மாநில காங்கிரஸ் தலைவர் சண்முகம் 250 வோட்டுக்கள் வித்தியாசத்தில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட ஜனதா தள வேட்பாளர் இளங்கோவிடம் தோற்றுப் போனார்! சண்முகத்தின் தோல்வி, முழுக்க முழுக்க உட்கட்சிப் பூசல்களால்தான் நிகழ்ந்தது என்பது பாண்டிச்சேரியில் எல்லோருக்கும் தெரிந்த ரகசியம்.

இது பற்றிச் சண்முகத்திடமே கேட்டபோது, ''நான் தோல்வியடைந்தது பற்றி விடுங்கள். எங்கள் கட்சி ஆட்சி அமைந்தது. அதுவே எனக்குச் சந்தோஷம்தான்'' என்றார். ''நீங்கள் எதனால் தோல்வியடைந்தீர்கள்?'' என்று வற்புறுத்திய போது, பதில் சொல்வதற்குக் கொஞ்ச நேரம் யோசித்தார். பிறகு, ''எதிரிகளை வீழ்த்தி விடலாம்; ஆனால் முதுகில் குத்தும் துரோகிகளை என்ன செய்வது? நான் இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்திருக்கலாம்'' என்றார் சண்முகம்.

சண்முகம் இப்படிச் சொன்னாலும் ''காரைக்காலைச் சேர்ந்த சண்முகம், பாண்டிச்சேரி நகர்ப்புறத்தில் உள்ள காசுக்கடை தொகுதியில் நிற்கும்போதே பலர் எச்சரித்தார்கள். அவருக்கு அது புதுத் தொகுதி. தொகுதி மக்கள் கட்சியைப் பார்க்க மாட்டார்கள். ஆளைப் பார்த்துத்தான் வோட்டுப் போடுவார்கள் என்றெல்லாம் எச்சரிக்கை செய்தோம். துணிந்து நின்றார்; தோற்றார். மேலும் அந்தத் தொகுதியில் நன்கு அறிமுகமான கண்ணனை வைத்துப் பிரசாரம் செய்யச் சொன்னோம். கௌரவம் பார்த்தார் சண்முகம்'' என்றார் பரூக் மரக்காயரின் ஆதரவாளர் ஒருவர்.

பாண்டிச்சேரி சட்டமன்றத்தில் உள்ள முப்பது இடங்களில் காங்கிரஸ் பதினைந்து

இடங்களிலும் அ. இ. அ. தி. மு. க. ஆறு இடங்களிலும் வெற்றி பெற்றது. சண்முகம் சட்டமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த தால் தங்கள் ஆதரவாளரான கண்ணனை முதல்வர் ஆக்குவதற்கு எந்தப் பிரச்னையும் இருக்காது என்று எதிர்பார்த்தது பரூக் கோஷ்டி.

சட்டமன்றக் காங்கிரஸ் தலைவரை (அதாவது முதல்வரை)த் தேர்ந்தெடுக்க வந்தனர் மேலிட காங்கிரஸ் பார்வை யாளர்கள். கிட்டத்தட்ட ஆறு மணி நேரத் துக்கு மேல் கூட்டம் நடந்தது. 'கண்ணன் தான் முதல்வர்' என்று அவர் ஆதரவா ளர்கள் மாலையும் கையுமாக வெளியே காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் திடீ ரென்று வைத்தியலிங்கம் தேர்ந்தெடுக் கப்பட்டார் என்றதும் எல்லோருக்கும் அதிர்ச்சி! வைத்தியலிங்கம் பரூக் அமைச்ச ரவையில் கண்ணனுக்கு அடுத்த நிலையில் அமைச்சராக இருந்தவர்!

காரணம் என்ன? ''பல எம். எல். ஏ.க்கள் கண்ணன் வருவதை விரும்பி னாலும், கடைசி நிமிடத்தில் பரூக் தமது எண்ணத்தை மாற்றிக் கொண்டதால், அவ ரது ஆதரவு எம்.எல்.ஏக்களும் மாறி விட்டார்கள். கண்ணன் முதல்வராகி, அவர் தம்மை ஸ்திரப்படுத்திக் கொண்டால், உட்கட்சிப் பூசலில் அவர் பலம் மிக்கவராக மாறி விடுவார். பிறகு அவரையும் எதிர்த் துப் பாலிடிக்ஸ் பண்ண வேண்டும் என்று பரூக் கருதியிருக்கலாம். அதனால் காலை வாரி விட்டிருக்கலாம்'' என்றார் பாண்டிச் சேரியிலுள்ள மூத்த பத்திரிகையாளர் ஒருவர்.

மேலிடப் பார்வையாளர்கள் எம். எல். ஏக்களிடம் பேசிக் கொண்டிருந்தபோதே சென்னையிலிருந்தும், தில்லியில் இருந் தும் டெலிபோன்கள் வந்ததாம், 'பரூக் கோஷ்டியைச் சேர்ந்த யாரும் முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்படக் கூடாது. குறிப்பாகக் கண்ணன் கூடவே கூடாது. அப்படிச் செய் தால், அ. இ. அ. தி. மு. க. ஆதரவு கொடுக் காது' என்று! அதன் காரணமாகவே வைத்தியலிங்கம் முதல்வராகத் தேர்ந் தெடுக்கப்பட்டார் என்றும் சொல்லி னார்கள். ''இந்த நிலையில் பரூக் - சண்முகம் கோஷ்டித் தகராறில் 'பாலன்ஸ்' செய்து கொண்டு போவதில்தான் வைத்திய லிங்கத்தின் வெற்றி இருக்கிறது!'' என்றார் எந்தக் கோஷ்டியையும் சேராத காங்கிரஸ் எம். எல். ஏ. ஒருவர்.

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

ராஜீவ் கொலை புலனாய்வு:

வானளாவிய அதிகாரம் வழுக்கி விழுந்தது ஏன்?



'சபாநாயகர் என்கிற முறையில் எனக்கு வானளாவிய அதிகாரம் இருக்கிறது' என்றார் பி.ஹெச். பாண்டியன். அவர் சொன்ன மாதிரி, ஒரு சபாநாயகருக்கு இருக்கிறதோ இல்லையோ, ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக நியமிக்கப்பட்டிருக்கும் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு நிச்சயம் இருக்கும் போல் தெரிகிறது. இப்படியோர் அதிகாரம் எப்படி வந்தது?

''எல்லாம், தீவிரவாதிகள் தடுப்புச் சட்டம் கொடுக்கிற அதிகாரங்கள்தான்!'' என்கிறார், சிறப்புப் புலனாய்வுக் குழுவால் கைது செய்யப்பட்டிருக்கும் பேரறிவாளனுக்கும் புகைப்படக்காரர் சுபா சுந்தரத்திற்கும் ஜாமீன் வேண்டி மனுச் செய்து தோற்றுப்போன வழக்கறிஞர் எஸ். துரைசாமி.

''இந்தத் தீவிரவாதிகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்தால் அவர் குற்றமற்றவர் என்று நிரூபணமானால் ஒழிய, அவரை ஜாமீனில் கூட வெளியே விட வேண்டியதில்லை என்பது இந்தச் சட்டம் தரும் அதிகாரம்.

● மோகன்தாஸ் : வெவ்வேறு கோணங்கள்



''இது மாத்திரமல்ல; சாதாரணமாகக் குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்து, குற்றம் சாட்டப்படுகிற நபர், குற்றவாளிதான் என்பதற்கான ஆதாரங்களையும் சாட்சிகளையும் குற்றம் சாட்டுகிற போலீஸ்தான் தேடிக் கண்டுபிடித்து, அவர் குற்றவாளிதான் என்பதை நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும். ஆனால் இந்தத் தீவிரவாதிகள் தடுப்புச் சட்டத்திலோ எல்லாமே தலைகீழ். குற்றச்சாட்டுக்கு உள்ளான நபர்தான், தான் குற்றமற்றவர் என்பதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்து நீதிமன்றத்தில் நிரூபிக்க வேண்டும்!

''இதேபோல், குற்றவியல் சட்டத்தின்படி, குற்றம் சாட்டப்பட்ட நபர், போலீஸிடம் கொடுக்கிற வாக்கு மூலம், ஒரு சாட்சியமாக நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இதில், அதுவும் ஒரு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும்! மேலும் இச்சட்டத்தின்படி குறைந்தபட்சத் தண்டனையே ஐந்தாண்டுச் சிறை வாசம்தான்!

''இப்படி மக்களின் அடிப்படை உரிமைகளுக்கே ஒரு சவாலாக இந்தச் சட்டம் இருப்பதால்தான், 87-ல் கொண்டு வரப்பட்ட இச்சட்டத்தை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது. அந்த வழக்கு இன்னும் முடிவடையவில்லை என்பதால், 89-ல் இச்சட்டத்தை மேலும் இரண்டாண்டு



◆ சுபா - சிவராசன் : சிக்குவார்களா?



களுக்கு நீட்டித்த அரசு, இப்போது இன்னும் இரண்டாண்டுகளுக்கு நீட்டித் திருக்கிறது!

''சரி, இந்தத் தீவிரவாதிகள் சட்டப்படி யாரையெல்லாம் கைது செய்யலாம்? இச்சட்டமே கொடுக்கிற விளக்கத்தின்படி, அரசுக்கு எதிராகவோ அல்லது பொது மக்களுக்கு எதிராகவோ தீவிர வாதத்தில் ஈடுபடுகிறவர்களைத்தான் கைது செய்ய லாம்.

''ராஜீவ் காந்தி முன்னாள் பிரதமர்தானே தவிர, பிரதமர் அல்ல. ஒரு முன்னாள் பிரதமர் அல்லது ஒரு கட்சித் தலைவர் கொல்லப்பட்டதென்பது, ஒரு தனி நப ருக்கு எதிரான சதித்திட்டமே தவிர, அர சாங்கத்திற்கோ அல்லது பொது மக்க ளுக்கோ எதிரான தீவிரவாதமாகாது. எனவே, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர்களையும் அல்லது சம் பந்தப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப்படு பவர்களையும் தீவிரவாதிகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்து விசாரிக்கக் கூடாது என்பதுதான் என் தரப்பு வாதம்.

''இவை மாத்திரமல்ல; தீவிரவாதிகள் தடுப்புச்சட்டம் எங்கே அமல்படுத்தப்பட வேண்டுமென்றால், எங்கு போலீஸ்துறை முழுக்க முழுக்கச் செயலிழந்து போயிருக் கிறதோ, அங்குதான் அமல்படுத்தப்பட வேண்டும். அப்படியானால் த மி ழ க போலீஸ்துறை முழுக்க முழுக்கச் செய லிழந்து போய்விட்டதா?'' என்று கேட்கி றார் வழக்கறிஞர் துரைசாமி.



◆ துரைசாமி : ஏற்கப்படாத வாதம்.

துரைசாமியின் வாதம் ஏற்கப்பட வில்லை. சுபா சுந்தரத்துக்கும், பேரறிவாள னுக்கும் ஜாமீன் மனு ஏற்கப்படவில்லை என்பது ஒரு புறமிருக்க, ராஜீவ் படு கொலை தொடர்பான புலனாய்வு விஷ யங்களில் அரசின் அணுகுமுறை எப்படி இருக்கிறது என்பது பற்றி ஓய்வு பெற்ற உயர் போலீஸ் அதிகாரி கே. மோகன்தாஸ் என்ன கருத்துத் தெரிவிக்கிறார், பார்ப் போம் :

''முன்பு சர்க்காரியா கமிஷன் நியமிக்கப் பட்ட மாதிரி, ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் ஒரு கமிஷனை நியமித் திருக்கலாம். அது பாதுகாப்புக் குறைபாடு கள் பற்றி மட்டுமின்றி, ராஜீவ் கொலை செய்யப்பட்ட சூழ்நிலை, உள்நோக் கங்கள், யார் செய்தது, யாருடைய தூண்டு தலின் பேரில் என்பதெல்லாம் சர்வதேச நோக்கில் ஆராயலாம். அதற்கு சி.பி.ஐ., ஐ.பி. போன்ற அமைப்புகள் உதவும்படி செய்திருக்கலாம். இதை விட்டு விட்டு, ராஜீவ் காந்திக்குக் கொடுக்கப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த ஓட்டை களைக் கண்டு பிடிப்பதற்குப் போய் வர்மா கமிஷனை நியமித்திருப்பது ஆச்சரியமாக இருக்கிறது. பாதுகாப்புக் குறைபாடு களைக் கண்டறிவதற்கு மாவட்ட அளவி லான ஒரு மாஜிஸ்திரேட்டே போதும்!

''சி.பி.ஐ. என்பது என்ன? முன்பு

Special Police Establishment (SPE) என்று ஓர் அமைப்பு இருந்தது. அது பெரிய பெரிய ஆபீஸர்கள், பதவியிலிருக்கும் அரசியல் வாதிகள் ஆகியோரின் ஊழல் குற்றச்சாட்டு வழக்குகளை மட்டுமே விசாரித்து வந்தது. பிறகு, ஊழல் குற்றச்சாட்டுக்களோடு, பொருளாதாரக் குற்றங்கள், மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொலை போன்ற குற்றங்களையும் விசாரிக்கும் அமைப்பாக அது விரிவாக்கம் செய்யப்பட்டு, சி. பி. ஐ. என்று பெயர் மாற்றம் பெற்றது.

''சி. பி. ஐ.க்குக் கொலையாளிகளைக் கண்டுபிடிக்கும் அனுபவம் இருந்தாலும், அதிலிருந்து நியமிக்கப்பட்டிருக்கும் நமது 'சிறப்புப் புலனாய்வுக் குழு'வுக்கு அந்த அனுபவம் போதாது என்றே தெரிகிறது. போதிய அனுபவம் இருந்திருக்குமானால், சண்முகத்தின் மரணம் நிகழ்ந்திருக்குமா? பயணியர் மாளிகையின் பின் வாசல் பக்கமாகத் தப்பித்துச் சென்றதாகச் சொல்லப்படும் சண்முகம், பின் பக்கமாகவே தப்பித்துச் செல்வதை விட்டுவிட்டு, வேலை மெனக்கெட்டு பயணியர் மாளிகை யின் முன் பக்க மிருக்கும் மரத்தில் வந்து தூக்குப் போட்டுக் கொண்டு சாவது சாத்தியமா? அது தற்கொலை இல்லையானால் கொலையா? விடுதலைப் புலிகள் வந்து சண்முகத்தைக் கொன்று மரத்தில் கட்டித் தொங்கவிட்டு விட்டிருப்பார்களோ என்கிற கோணத்தில் பார்த்தாலும், சிறப்புப் புலனாய்வுக் குழுவின் ஏகப்பட்ட பாதுகாப்புகளையும் மீறியா, விடுதலைப்புலிகள் அப்படிச் செய்திருக்க முடியும்? இதையெல்லாம் நோக்க இந்தச் சிறப்புப் புலனாய்வுக் குழுவுக்கு இது போன்ற விஷயங்களில் அனுபவம் போதாது என்று ஆகிவிட்டதே!'' என்கிறார் மோகன்தாஸ்.

இவற்றோடு, ராஜீவ் காந்தி கொலை வழக்கைப் பல கோணங்களிலும் விசாரிக்க வேண்டும் என்கிறார் மோகன்தாஸ்.

''அனைவருமே இந்தக் கொலையில் விடுதலைப் புலிகளின் தொடர்பைத்தான் உறுதியாகப் பார்க்கிறார்கள். அப்படிப் பார்ப்பது தவறு என்று நான் சொல்லவில்லை. ஆனால், புலனாய்வு என்பது ஒரு கோணத்தில் மட்டுமே பார்ப்பது அல்ல. ராஜீவ் காந்தியின் இறுதிச்சடங்குக்கு வந்திருந்த யாசர் அராஃபத், ராஜீவுக்கு ஏற்படப் போகும் அபாயம் பற்றி முன்னதாகவே ராஜீவிடம் தாம் எச்சரிக்கை செய்ததாக அன்றைய பிரதமர் சந்திரசேகரிடம் கூறியிருக்கிறார். இதை சந்திரசேகரே ஒரு சந்தர்ப்பத்தில் வெளியிட்டிருக்கிறார்.

''ராஜீவ் காந்திக்கு ஏற்படப் போகும் ஆபத்து பற்றி எங்கோ இருக்கும் யாசர் அராஃபத்துக்கு முன்பே தெரிந்திருக்கிறதென்றால், நம்மவர்களுக்கு எப்படித் தெரியாமல் போயிருக்கும்? ராஜீவின் கொலை, விடுதலைப் புலிகளின் தனிப்பட்ட கொலைத்திட்டம் என்றால் அராஃபத்துக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

''இலங்கை அரசுடன் விடுதலைப் புலிகள் நடத்திக் கொண்டிருக்கும் சண்டையில், ஏராளமான ஆயுதங்களை விடுதலைப் புலிகள் இழந்து, அவர்களுக்கு ஆயுதப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கக் கூடும். இந்த நிலையில் 'வேறு யாரோ' விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் சப்ளை செய்வதாகவும், அதற்குப் பிரதியுபகாரமாக இதைச் செய்து கொடுங்கள் என்றும் சொல்லி, இந்தக் கொலைக்கு விடுதலைப் புலிகளை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கக் கூடும்! ஏன் இருக்கக் கூடாது? விடுதலைப் புலிகளிடம் மிக நவீனமான விமான எதிர்ப்பு பீரங்கிகள் வந்து சேர்ந்திருக்கின்றன என்பது இந்தக் கருத்துக்கு வலிமை சேர்க்கிறது.''

சரி, ஒற்றைக் கண்ணனும் சுபாவும் அகப்படுவார்களா? ''ராஜீவ் காந்தியைப் படுகொலை செய்யும் ஒரு மிகப் பெரிய சதித்திட்டம் போட்டவர்கள், தாங்கள் தப்பிப்பதற்கும் ஒரு 'மாஸ்டர் பிளான்' போட்டிருக்க மாட்டார்கள் என்று எப்படி நம்ப முடியும்? இப்படிப் பல கோணங்களிலும் விசாரணை செய்ய வேண்டும்'' என்கிறார் மோகன்தாஸ்.

சந்திப்பு : இளங்கோவன்



- கபிஸ்தலம்
ஏ. கே. ஆனந்தப்ரியா

வடக்கு வாசல்

சக்தி ஸ்தலம் என்றால் என்னவென்று புதுதில்லி விஜயம் செய்த எல்லோருக்கும் தெரியும். (தெரியாதவர்கள் கடைசி வரை படிக்க). புதுதில்லியையே சக்திஸ்தலம் என அழைக்கலாம் என்பது இந்த வடக்கு வாசல் பகுதியை எழுதும் இமயவரம்ப னின் (இனிமேல் இ.வ.ன்) அபிப்பிராயம் - இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ண யிக்கிற நகரமல்லவா? பாந்தப்படாத மாநில அரசை படக்கென்று கவிழ்க்க, வருடம் தவறாமல் யோசித்துப் புதுசுபுது சாய் வரி விதிக்க, ஜனவரி இருபத்தா றானால் குடியரசுத் தலைவருக்கு சல்யூட் அடித்துச் செல்லும் பீரங்கி வண்டிகளின் சங்கிலித் தடத்தில் பள்ளிச் சிறாரைப் பட்டுப் பூச்சிகளாய் ஆட விட்டு வேடிக்கை பார்க்க, இன்னும் எத்தனையோ கற்பனைக் கெட்டாதவற்றையெல்லாம் அநாயாச மாய்ச் செய்யவல்லதாயிருக்கிறது இந்த நகரம். அரசியல் சக்தியின் மையஸ்தானம்.

இந்தச் சக்தி நாடகத்தில் வேஷம் கட்டி யவர்களையும், பின்னாலிருந்து ஆட்டி வைப்பவர்களின் அகடவிகடங்களையும், வசனகர்த்தாக்களின் சொல் விளையாட்டுக் களையும் வடக்கு வாசல் வழியே இனி மேல் நீங்கள் பார்க்கலாம்.



அதற்காக இ.வ.னை வெறும் அரசியல் பிராணியென்று நினைத்து விடாதீர்கள். கொஞ்சம் பேராசையுடன் கலை, இலக் கியம், கவிதை, வெளிநாட்டு நடப்பு என்று எல்லாமும் அலசத் தொடங்கி விடுவான், ஒரு தமிழனின் பார்வையாக! சினிமா மோகமும் இல்லாமலில்லை.

வாருங்கள், இதோ திறக்கிறது -
வடக்கு வாசல்...

பிரதமரின் பாசம்

பிள்ளையார் சுழியிலிருந்து எதையும் தொடங்கும் பக்தர்கள் போல், பிரதமரிட மிருந்தே அரசியல் விஷமத்தை, மன்னிக்க வும் - விஷயத்தைத் தொடங்குவது நல்ல சம்பிரதாயம் அல்லவா. இதோ, பிரதமரை வம்புக்கிழுக்கிறோம்.

ரஷியன், கோபால் உட்பட (அது யார் கோபால் என்று கேட்காதீர்கள்; அது கம்ப் யூட்டர் பாஷை) ஒன்பது பாஷைகள் தெரிந் தாலும் பமுலபர்த்தி வெங்கட நரசிம்ம ராவ்காருவுக்குத் தெலுங்கின் மேல்தான் அதிக அபிமானமென்றால் தப்பில்லை. ஒரு நாள் திடீரென்று "எல்லா மாநிலங்களும் என்னிடம் சமநீதியை எதிர்பார்க்கலாம். அனைத்து மாநிலங்களிடமும் எனக்கு ஒரே அளவு பாசம்உண்டு" என்றார்.

முதலில் சந்தோஷமாக இருந்தாலும், யாருடைய அப்பா ஏன் குதிருக்குள் இல்லை என்று இ.வ.னுக்குச் சந்தேகமும் முளைத்தது.

கொஞ்சம் குடைந்தபின் வெளிவந்த விவரம் : பிரதமரின் அலுவலகத்தில் பொது ஜனப் புகார்ப் பகுதியில், ஆந்திரத்திலிருந்து வரும் புகார்களை மட்டும் முக்கியமாகக் கவனிக்க ஒரு விசேஷ அதிகாரி நியமிக்கப் பட்டிருக்கிறாராம். ஒரு எம்.பி.யோ, எம். எல். ஏ.யோ தனது தொகுதியை ஊட்டி வளர்ப்பது வரவேற்கத் தகுந்ததுதான். ஆனால் நரசிம்மராவின் விஷயம் அப்படி இல்லையே. பிரதமராவதற்கு முன்பு நான்கு முறை அவரைப் பாராளுமன்றத் துக்கு அனுப்பியவர் மராட்டியர். அவர்க ளுக்கு இரண்டு வகை ஏமாற்றம் : பாவரும் பவருக்கு வரவில்லை. ராவும் தத்துப் புத்திரன்தான் என்று நிரூபித்து விட்டார்.

தலைசுற்ற ஓர் உணவகம்

உயரமான டவரின் உச்சிக் குடுமியில் ஒரு சுழலும் ரெஸ்டாரெண்ட் இருப்பது மேல் நாடுகளில் சகஜம். போக ஆசையும் உண்டு. ஆனால் 'ப' வைட்டமின் யாரிடம் இருக்கிறது? 'கவலை ஏன்? தில்லியி லேயே திறந்தாகி விட்டதே பரிக்ரமா' என்று ஆவலோடுதான் போனான் இ.வ.ன்.



தலைநகரின் வியாபார மையமான கன்னாட் பிளேஸின் கஸ்தூரிபா காந்தி சாலையில் 'அந்தரிக்ஷ பவனின்' உச்சியிலிருக்கிறது பரிக்ரமா.

சுவர்களும், ஜன்னல் வழியே உலகமும் அப்படியே இருக்க, உங்களையும் மேஜை நாற்காலிகளையும் சுமந்து தரை மட்டும் மெல்லச் சுற்றும். ஒரு முழுச் சுற்றுக்கு 90 நிமிடங்கள். ஒரே சமயத்தில் நூற்றுப் பத்துப் பேர் உட்கார்ந்து சாப்பிடும் கொள்ளளவு.

மதுபானம் பரிமாற இன்னும் அனுமதி இல்லை. வந்து விடுமாம். அப்புறம் அதிக வேகமாகவே சுற்றுவது போல் இருக்குமோ என்னவோ!

இதற்கு முன்பும் 'பாம்பே பாலஸ் டவர்ஸ்' என்ற பெயரில் ஒரு சுழல் உணவகம் இருந்தது. ஏசியாட் - 1982 ஐ ஒட்டி உருவாகிய ஆசிய விளையாட்டு கிராமத்தில் ஒரு பிரத்தியேக டவரின் உச்சியில் இது அமைந்திருந்தது. விருந்தினரைக் கூரை முகட்டுக்கு ஏற்ற அசாத்திய மின்சாரச் செலவாகவே உணவகம் மூடிப் போனது. அந்தரிக்ஷ பவனில் அந்த நிலை வராது. செலவில் பங்கு கொள்ள நிறைய வியாபார நிறுவனங்கள் இருக்கின்றன.

ஏதோ வேடிக்கையாய் மேலே போய் ஒரு காப்பி சாப்பிட்டு வரலாம் என்று நினைக்கும் கூட்டத்தை அணை போட ஒரு யுக்தி செய்தது பரிக்ரமா நிர்வாகம். மேலே போக லிப்டில் ஏறுவதற்கு முன்னமேயே உணவுக்குச் சீட்டு வாங்க வேண்டும்.

சரி, சீட்டுத்தான் வாங்கிப் போகலாமே என்று விலையைக் கேட்ட இ.வ.னுக்குத் தரைமட்டத்திலேயே தலையைச் சுற்றியது.

ஒரு சாப்பாட்டின் விலை ரூ 140.

கீழே இருந்தபடியே கன்னத்தில் போட்டுக் கொண்டு வந்து சேர்ந்தான்! ரூ 140க்கே அஞ்சுபவனுக்கு மேல்நாடுகள் போக வேறு ஆசை! கூரை ஏறிக் கோழி பிடிக்கத் தெரியாதவன் வ ா னி வேறி வைகுண் டத்தைக் காட்டு வேன் எ ன் ற ா னாம்!

இளங்கொலை வல்லுநர்

பதினைந்து வயதிலிருந்து இருபதுக்குள் இருக்கும் இளைஞர் (சிறுவர்?) கொலை செய்வது தில்லியில் அண்மைக் காலச் சிறப்பு. நோக்கம் : விரைந்து பணக்காரராதல்.

லாட்டரி மோகத்தைக் கூட மன்னித்து விடலாம்.

ந ன் ற ா க த் தெரிந்தவர்களின் வீடு நுழைந்து கொன்று விட்டு, நகை மற்றும் பணத்தை எடுத்துச் செல்கிறார்கள். ஆனால் மாட்டிக் கொண்டு விடுகிறார்கள். அனுபவக் குறைவு.

வியப்பு என்னவென்றால், இவர்களெல்லாம் நல்ல(!) குடும்பத்திலிருந்து வரும் பணமும் படிப்புமுள்ளவர்கள். தந்தை தாய் போலீஸ் இன்ஸ்பெக்டரிலிருந்து புரொபஸர் வரை உத்தியோகம்.

இதைச் சமூக உளவியல் ரீதியாக யாராவது விளக்கினால் (புரியும் வார்த்தைகளில்) இ.வ.ன் நன்றிக் கடன் படுவான்.

நிஜம் சொன்ன நிதி மந்திரி

''ஒரு நிதி மந்திரியின் செயல்முறை இடர்ப்பாடுகள் கட்சித் தேர்தல் அறிக்கைக்குத் தெரியாது'' என்று மனசில் பட்ட நிஜத்தைப் பட்டென்று சொல்லி விட்டார் டாக்டர் மன்மோகன் சிங்.

அவல் கிடைத்தது நிருபர்கள் வாய்க்கு.


நேராகப் போய்ப் பிரதம மந்திரியிடம் கேட்டார்கள் : ''இதென்ன இப்படிச் சொல்லி விட்டாரே! நீங்களும் ஒப்புக் கொள்கிறீர்களா?'' என்று.

''ஊஹூ ஊஹூம்'' என்று மறுத்தார் நரசிம்மராவ். ''தேர்தல் கொள்கை விளக்கம் எமது கலங்கரை விளக்கம்'' என்றார். பழுத்த அரசியல்வாதி ஆயிற்றே. குட்டித் தலைகளும் சந்தடி சாக்கில் நிதி அமைச்சருக்கு ஆளுக்கு ஒரு தர்ம அடி கொடுத்தனர் கட்சியின் பேரால்.

நூறே நாட்களில் ஒரு வருடத்திற்கு முன்பிருந்த விலைவாசி மட்டத்துக்குக் குறைக்க எந்தக் கொம்பனாலும் முடியாது என்பதை நாணயமாக ஏன் ஒப்புக் கொண்டு விடக் கூடாது?

சக்தி ஸ்தலம் தில்லியில் இந்திரா காந்தியின் சமாதி இருக்குமிடம் என்பதைக் கூறி, இப்போதைக்கு வடக்கு வாசலை மெல்ல அடைப்பவன்...

– இமய வரம்பன்



♦ கேஸட்டுகளாக மாறும் டேப்புகள்...

ஆடியோ கேஸட்டுகள்:

கலைஞன் முதல் ரசிகன் வரை...

பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னால் கேஸட்டுகள் பிரபலமாக இல்லை. அப்போது கிராமபோன் ரெக்கார்டு விற்பனை செய்யும் ஏவி.எம். நிறுவனமான சரஸ்வதி ஸ்டோர்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்தார் ஓர் இளைஞர். விற்பனை சம்பந்தமாக வெளியூர்களில் பயணம் செய்யும் போது, சிலர் பிரபல பாட்டுக்களை கிராமபோன் ரெக்கார்டுகளிலிருந்து கேஸட்டில் பதிவு செய்து தருமாறு கடைகளில் கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்தார். ஏன் முன் அனுமதி பெற்று, சட்ட ரீதியாக, நேரிடையாக கேஸட்டுகளாகவே தயாரிக்கக் கூடாது என்று அவருக்குத் தோன்றியது. ஆனால் நிதி வசதிக்கு எங்கே போவது?

இந்தச் சமயத்தில் இளைஞரின் நண்பரான, கன்னட சினிமா பாடல் ஆசிரியர் உதயசங்கர், சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரை அறிமுகம் செய்து வைத்தார். தாம் கேஸட் துறையில் பிரவேசிக்க வேண்டும் என்றால் இவர்கள் இருவரின் முழு ஒத்துழைப்பும் தேவை என்று இளைஞர் சொன்னாரோ இல்லையோ, ராஜ்குமாரின் வீட்டிலேயே இளைஞருக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டது. உடனே செயலில் இறங்கினார்.


முதலில் இளைஞரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. வடக்கே எச். எம். வி. காஸட்டுகள் வெளியிட்டதை முன்னுதாரணம் காட்டி இளைஞர் மறுபடி முயன்றார். விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதோடு ஜப்பானிலிருந்து இயந்திரம் இறக்குமதி செய்யவும் அனுமதி கிடைத்தது!

அந்த இளைஞர்தான் இன்று மாஸ்டர் ரெக்கார்டிங் (சங்கீதா கேஸட்) கம்பெனியின் அதிபர் மகேஷ்.

மாஸ்டர் ரெக்கார்டிங் கம்பெனியின் தியேட்டருக்குள் நுழையும் எவரையும் அதன் தனிப்பட்ட அமைப்பும், வசதிகளும் பிரமிக்க வைக்கும். தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்ததாக இப்படி ஒரு ஸ்டுடியோ இங்கே இருப்பது பலருக்கும் தெரிய வாய்ப்பில்லை. வெளியுலக அதிர்வுகள் எதுவும் பாதிக்காமல் இருக்குமாறு பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருக்கிறது. சுவர்களும், கதவுகளும் மிகவும் கனமானவை. வெளியே மின்னலும், இடியும் மழையும் முழங்கினால் கூட, உள்ளே பதிவு அறையில் அதன் பாதிப்பு துளியும் இராது. வாய்ஸ் ரூம், இன்ஸ்ட்ருமென்ட்ஸ் ரூம் எல்லாமே, ஒலி மிகத் துல்லியமாகக்

கேட்பதற்கென்றே விசேஷமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ஏர் கண்டிஷன் குழாய்களின் முணுமுணுப்புச் சத்தத்தைக் கூட, கூரையிலிருந்து பிரமிட் வடிவத்தில் தொங்கும் ஆரஞ்சு நிற போர்டுகள் உறிஞ்சிக் கொண்டு விடுகின்றன! பாடல் பதிவு அறைகளில், சுவர் முழுதும் ஃபோம் பதிக்கப்பட்டிருக்கிறது, எதிரொலியைத் தவிர்ப்பதற்கு.

கேஸட் பிரதிகள் எடுக்கும் நவீன இயந்திரம் டென்மார்க்கிலிருந்து வந்திருக்கிறது. இதை BINLOOP SYSTEM என்கி



◆ மகேஷ்



◆ கிருஷ்ணன்

றார்கள். கம்ப்யூட்டரால் இயங்குகிறது. ஒலிப்பதிவு செய்த மாஸ்டர் நாடாவைப் பொருத்தி விட்டு, 'பான்கேக்' எனப்படும் மாக்னடிக் நாடாவை ஆறு இடங்களில் சுழல விட்டால், 'A' பகுதி எது, 'B' பகுதி எது என்று அதுவாகவே பிரித்துக் கொண்டு சமர்த்தாகப் பதிவு செய்யத் தொடங்குகிறது. ஒரு 'பான்கேக்'கில் 25 முதல் 27, அறுபது நிமிட கேஸட்டுகள் தயாரிக்கலாம். அறுபது நிமிட கேஸட்டைப் பதிவு செய்ய இது எடுத்துக் கொள்ளும் நேரம் 25 செகண்டுகளே!

பதிவு செய்யப்பட்ட ஒலி நாடாவின் இரு முனைகளையும் 24 அங்குல, வெள்ளை நிற, 'லீடர் டேப்' இணைக்கிறது. இது இல்லை என்றால் ஒலி நாடா பட்டென்று அறுந்து விடும்.

எல்லாமே தானியங்கு முறையில் நடைபெற ''களக், களக்'' என்று கேஸட்டை உதிர்க்கிறது இயந்திரம். டேப்பில், அல்லது லீடர் டேப்பில், குறை இருந்தால், மேலே உள்ள டிஸ்ப்ளே தகட்டில் அது அழகாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

டேப் நடுவில் தொய்ந்து போகாமல், சீரான முறையில், ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை வரை செல்லவும், அழுக்கோ தூசியோ, ஒட்டிக் கொண்டிருந்தால், தானாகவே அதைச் சுத்தப்படுத்தவும் வசதி படைத்தது இந்த BINLOOP இயந்திரம்!

இந்த இயந்திரங்களின் செயல்பாட்டை விளக்கிய சுப்பிரமணியம், பிற கேஸட் தயாரிப்பாளர்களும் இங்கே தமது

◆ மாஸ்டர் ரெக்கார்டிங்கும்....



கேஸட்டுகளைக் கொடுத்து, தரம் சரியாக இருக்கிறதா என்று பரிசோதித்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிறார்கள் - என்றார்.

''என்னுடைய நோக்கம், மிகச் சிறந்த தரத்தில் கேஸட்டுகளை வெளியிட வேண்டும் என்பதுதான். 'சங்கீதா' என்றால் அதன் தரம் திருப்திகரமாய் இருக்கும் என்ற நம்பிக்கையை ரசிகர்கள் பெற்றிருப்பதற்கு இதுதான் காரணம்'' என்கிறார் மகேஷ். புத்தக விமர்சனங்கள் போலவே, கேஸட்டுகளைப் பற்றிய விமர்சனங்களும் வெளிவிடப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கும் மகேஷ், கேஸட்டின் எதிர்காலம் பிரகாசமாக இருப்பதாகவே சொல்லுகிறார்.

'சங்கீதா'வின் கேஸட் பட்டியலில் 2,000 தாண்டி விட்டதையும், பட்டியல் மட்டுமே சுமார் அறுபது பக்கங்களைத் தாண்டி விட்டதையும் நிர்வாகி கிருஷ்ணன் சுட்டிக்



◆ பின்லூப் ஆட்டோமாடிக் ரெக்கார்டர்

காட்டினார்.

'சங்கீதா மியூசிக் அகாடமி டிரஸ்ட்'டில் 2,000 ரூபாய் செலுத்தி உறுப்பினராகும் எவருக்கும், அவரது ஆயுட் காலம் வரைக்கும், மாதம் ஒரு கேஸட் அவர் விருப்பப்படி தபாலில் அனுப்பி வைக்கப் படுகிறது. திட்டத்திலிருந்து விலகிக் கொள்ள விரும்பினால், மூன்றே மாத அவகாசத்தில் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். மூன்று மாதங்கள் ஏன்? அதற்குள் முடிவை மாற்றிக் கொண்டு விடுகிற சாத்தியக் கூறு இருக்கிறதல்லவா?

மாக்னடிக் டேப்புகள் எனப்படும் இந்த கேஸட் டேப்புகள் எப்படித் தயாராகின்றன?

'ஆடியோ ஃபைன்' கேஸட்டுகள் தயாரிக்கும் ஆடியோ எலக்ட்ரானிக் பிரைவேட் லிமிடெட்டின் தலைவரும், நிர்வாக இயக்குநருமான வி. டி. வி. சர்மாவைச் சந்தித்தோம்.

அம்பத்தூரை அடுத்த அயனம்பாக்கத்தில் உள்ளது தொழிற்சாலை. தென்னிந்தியாவில் கேஸட் நாடாக்கள் தயாரிக்கும் ஒரே தனியார் நிறுவனம் இதுதான்.

''இதற்குத் தேவையான கச்சாப் பொருள்கள் என்னென்ன?''

''பாலியஸ்டர் பிலிம், மாக்னடிக் ஆக்சைடு, சில விசேஷ ரசாயனப் பொருள்கள். இவை எல்லாமே கொரியா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இவை தவிர உள்நாட்டிலேயே தயாராகும் சில கச்சாப் பொருள்கள்.''

''இப்போது எத்தனை டேப்புகள் தயாரிக்கிறீர்கள்?''

''ஒரு மாதத்துக்கு ஐந்து முதல் ஆறு லட்சம் டேப்புகள்!''

ஒரு நாளைக்கு ஒரு லட்சம் டேப்புகள் தயாரிக்கவும் வசதி இருக்கிறது என்கிறார். உலகிலேயே அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக, இந்தியாதான் அதிகபட்ச கேஸட் டேப்புகளைத் தயாரிக்கிறது.

கச்சாப் பொருட்கள் எல்லாம் வெறும் பொடியாகத்தான் இருக்கின்றன ஆரம்ப நிலையில். இதுவே ஒலி நாடாவாகத் தயாராகி வருகிறது! மிலியன் கணக்கில் மாக்னடிக் துகள்கள் இழைந்த இந்த ஒலி நாடாவில் மின் ஒலிப்பதிவு அதிர்ச்சி காரணமாக ஒலி, பதிவு செய்யப்படுகிறது. இதை அனலாக் மெஷர்மெண்ட் என்கிறார்கள். சில வருடங்களில் இந்த ஆடியோ கேஸட்டுகள் போய், லேசர் உதவியுடன் காம்பாக்ட் டிஸ்க் முறையில் தயாராகும் தட்டுக்கள் வந்து விடும்!

நிறைய பக்திப் பாடல்களும், திரைப் படப் பாடல்களும் வெளியிட ஆரம்பித்திருக்கும் 'ஆடியோஃபைன்', சிவசங்கரியின் சிறுகதைகளை அவரே வாசிக்க

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ : 17

''நேற்று வரை நந்தவனம்'' தொடர் கதையைக் கவனமாகப் படித்து, இந்த வாரம் நாங்கள் வேண்டுமென்றே செய்துள்ள தவறு என்ன என்று கண்டுபிடியுங்கள். தவறையும் திருத்தத்தையும் கீழே எழுதி, கூப்பனைக் கத்திரித்து வைத்துக் கொள்ளுங்கள். இவ்வாறே ஒவ்வொரு வாரமும் கூப்பன் சேகரித்து, கதை முடியும் வாரம் 5 - 10 வரி விமர்சனத்துடன் சேர்த்து, எல்லாக் கூப்பன்களையும் அனுப்பி வையுங்கள். மிக அதிகமான தவறுகளைச் சரியானபடி சுட்டிக்காட்டியவருக்கு ஃபிரிஜ் பரிசு! ஒருவருக்கு மேல் அதிகபட்சத் தவறுகளைச் சுட்டிக் காட்டியிருந்தால் குலுக்கலில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார். ஆறுதல் பரிசுகளும் உண்டு!

தவறு : ______________________

திருத்தம் : ______________________

ஒலிப்பதிவு செய்து, கேஸட்டாக வெளியிட்டிருக்கிறது.

"உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?"

"ஆடியோ கேஸட்டில் செய்திப் பத்திரிகை கொண்டு வருவது. இரவு எடிட் செய்து வாசித்துக் கொடுத்து விட்டால், மறுநாள் காலையில் குறிப்பிட்ட பத்து இடங்களில் அதன் பிரதிகளைத் தேவையான அளவு எடுத்து விநியோகம் செய்ய முடியும். கண் பார்வையற்றோர், வயதானவர்கள் எல்லாருக்குமே இது சௌகரியமாக இருக்கும். ஆரம்பத்தில் ஒரு பக்திப் பாடலும் சேர்த்துக் கொள்ளலாம். எந்தச் செய்திப் பத்திரிகை நிறுவனமாவது இதை சீரியஸ்ஸாக எடுத்துக் கொண்டு எங்களுடன் ஒத்துழைக்கத் தீர்மானித்தால் இது நிச்சயம் சாத்தியம்."

"விலை?"

"இரண்டே ரூபாயில் தருகிறேன்!" என்கிறார் சர்மா.

சரி. கேஸெட் மார்க்கெட் எப்படி இருக்கிறது?

முக்கியமான, கேஸெட் கடைகளில் விசாரித்தோம்.

சினிமாப் பாடல்கள், படம் வெளியாகிற சமயத்தில் மட்டுமே அதிகமாக விற்பனை ஆகும். பிறகு மெல்ல மெல்லக் குறைந்து விடும். பக்திப் பாடல்கள், பத்து வருடம் கழித்தும் கூடப் போகும். சினிமாப் பாட்டு என்றால் அது ஹிட் ஆனால்தான் போகும்!

வைரமுத்துவின் க வி தை க ள் கேஸெட்டை அவர் ரசிகர்கள் மட்டுமே வந்து கேட்டு வாங்கிப் போகிறார்கள். பாலகுமாரனின் 'ஒரு பேனாவின் குரல்' இன்னும் பிக்-அப் ஆகவில்லையாம்.

கர்நாடக இசைப் பாடல் கேஸெட்டுகளில் பாடகரைப் பொறுத்துத்தான் விற்பனை. அதே போல்தான் வாத்திய இசையிலும்.

ஒரு டீ இன் ஒன்னும் கேஸெட்டுகளும் இன்று வீட்டுக்கு வீடு இன்றியமையாததாகி விட்டன. அவரவருக்கும் பிடித்த பாட்டைப் போட்டுக் கேட்டு ரசிக்கச் சாமானியருக்கும் வாய்ப்பளிக்கின்றன. எளியோரின் இந்த மன மகிழ் சாதனத்துக்கும் வரியை எக்கச்சக்கமாக உயர்த்தி விட்டதே பட்ஜெட், அதைச் சொல்லுங்கள்!

- சாருகேசி

அட்டை வண்ணப்படத்தில் பாடல் பதிவு : ராஜ்குமார் பாரதி


வண்ணப்படம், படங்கள் : யோகா



நெருடல்

மூட்டையில் அரிசியும்
பண்டக அறையில்
புளி, உப்பு, பருப்பு வகையறாவும்
குளிர்பதனத்தில்
கொஞ்சம் காய்கறியும்
சமைத்துப் போட மனைவியும்
பொழுது போக்க
நூலகத்தில் வாங்கி வந்த கேஸட்டுகளும்
அவசரத்துக்கு வெளியே போக
பெட்ரோல் நிரம்பிய ஸ்கூட்டரும்
அளிக்கும் பாதுகாப்பில்
சம்பளத்துடன் வரும்
'பந்த்' விடுமுறையைக்
கழிப்பது தனி சுகம்தான்.
ஆனாலும்
தினக்கூலிப் புருஷனுக்கு
'பந்த்'தினால் வேலை இல்லாமையால்
அன்றைய காய்ச்சலுக்குக்
கடனாக,
வேலைக்காரி
சம்பளத்தில் முன்பணம்
கேட்பதுதான் சங்கடம்.

- பி. ஆர். எஸ்.



மேட்டூர்
காவேரி
ஏம்ப்பா, அந்த ஆளுக்கு ஹீரோ மேக்கப் போடு... இவங்க ரெண்டு பேருக்கும் துரோகி மேக்கப்பு... அதோ, அவருதான் வில்லன்.....
'காவேரி கொண்டுவந்த புரட்சித் தலைவி'... சீன் ஒன்... டேக் ஒன்...
DIRECTOR
சரி.. சரி... எனக்கு ஒரு ரோல்...
அதிலே தடுக்கி விழுந்து, இதிலே தடுக்கி விழுந்து... இன்னும் எத்தனை தடவை தடுக்கி விழணுமோ?



கல்கி



1991
ஆகஸ்டு 11
மலர் : 50
இதழ் : 2
பிரஜோத்பத்தி
ஆடி 26

ஆயிரம் காலப் பயிர்!

மனிதர்களுடைய சின்ன புத்திகளை அடிக்கோடிட்டுக் காட்ட விரும்புவது போல் காவிரியில் நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. கிருஷ்ணராஜ சாகர் நிறைந்து மேட்டூருக்கும் ஏகப்பட்ட நீர் வந்து கொண்டிருக்கிறது. ஆடிப் பெருக்கு இவ்வாண்டு உண்மையாகியுள்ளது. தஞ்சை விவசாயி தாற்காலிகமாக நிம்மதிப் பெருமூச்சு விடுகிறான்.

இதில் திருப்தி அடைய முடியாது. நிரந்தரத் தீர்வு அவசியம். ஒவ்வொரு ஆண்டும் இதே போல் இயற்கை கருணை காட்டும் என்று நம்புவதற்கில்லை. அப்போது கர்நாடக முதல்வர் கருணை காட்டவும் செய்யலாம்; அல்லது இப்போது பங்காரப்பா பண்ணுவது மாதிரி அடாவடித்தனம் பண்ணவும் செய்யலாம்.

நிரந்தரத் தீர்வுக்கு வழி என்ன என்பதில்தான் கருத்து மாறுபாடு, மோதல் நடவடிக்கை, ராஜினாமா நாடகம், துரோகிகள் பட்டம் முதலியன எல்லாம். பந்த்களினால் ஒரு பயனும் இல்லை; நாட்டுக்கு நஷ்டம்தான் என்றாலும் வேறு விதங்களில் போராடத்தான் வேண்டும்.

நடுவர் மன்றம் அமைந்ததே உச்சநீதி மன்றத்தின் ஆணைப்படிதான். அது அளித்த இடைக்காலத் தீர்ப்பை மதிக்க மாட்டேன் என்று பங்காரப்பா சொல்வது அசம்பாவத்தின் உச்சம். உச்சநீதி மன்றத்தையே மதிக்க மாட்டோம் என்றால், அதுவும் ஒரு மாநில அரசே இப்படி நடந்து கொண்டால், அப்புறம் சட்டமாவது நீதியாவது? தலைக்குத் தலை நாட்டாண்மைதான். அராஜகம்தான். கர்நாடக அரசு பிறப்பித்துள்ள அவசரச் சட்டம், தனது அத்து மீறலை நியாயப்படுத்த ஓர் அதர்மச் சட்டமே தவிர, நீதியுமல்ல, நேர்மையுமல்ல.

நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை உடனே அமுல்படுத்துமாறு ஆணையிடாது மத்திய அரசு தடுமாற, அந்தத் தாமதத்தைக் கர்நாடக முதல்வர் பயன்படுத்திக் கொண்டு விட்டார்.

இப்போது கர்நாடக அரசின் அவசரச் சட்டம் செல்லுமா என்று தெரிந்து கொள்ள மத்திய அரசு மறுபடி உச்சநீதி மன்றத்தையே நாடியிருக்கிறது. இதற்காக மத்திய அரசைக் குறை கூறிய தமிழக அரசு, தானும் உச்சநீதி மன்றத்துக்கே வழக்கை எடுத்துப் போயிருக்கிறது. கர்நாடக அரசும் தன் தரப்புக்கு உச்சநீதி மன்றத்தைத் தனது வாதங்களால் கவரப் பார்க்கிறது.

இதற்கிடையில் வாழப்பாடியார் ராஜினாமா நாடகம் போட்டு, ஜெயலலிதாவிடம் பாராட்டும், ஹீரோ பட்டமும் பெற்று விட்டார்! முதலில் பேசப்பட்டது அனைத்துத் தமிழக காங்கிரஸ் எம்.பி.க்கள் ராஜினாமா; அப்புறம், தமிழக அமைச்சர்களின் ராஜினாமா; இப்போது வாழப்பாடியார் மட்டும் விலகிக் கொண்டு ஹீரோவாகி, மற்றவர்களைத் துரோகிகளாகச் சித்திரிக்க வாய்ப்பளித்திருக்கிறார். 'மற்றவர்களையும் ராஜினாமா செய்யுமாறு கூற மாட்டேன்; ஆட்சி கவிழ வழி வகுக்க மாட்டேன்' என்று இப்போது கூறும் வாழப்பாடியார் முன்னர், அனைத்து எம்.பி.க்கள் ராஜினாமா' என்று பேசிய போது ஆட்சி கவிழும் என்பதை மறந்து போனாரா? கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக, ஒருவர் விலகிக் கொண்டால் போதும், மக்களிடமும் மதிப்பு, ஆட்சி கவிழும் அபாயமும் இல்லை என்று ராஜினாமா நாடகத்துக்குக் கதை - வசனம் எழுதியிருக்கிறார்கள்.

கர்நாடக முதல்வரும் சரி, தமிழக முதல்வரும் சரி இத்தனை அமர்க்களம் பண்ணக் காரணம், மத்தியிலே இருப்பது மைனாரிடி அரசு என்பதுதான். இல்லாது போனால் குரல் இத்தனை சத்தமாக எழும்பாது!

இவர்களுடைய ஆர்ப்பாட்ட அரசியல் எப்படியோ போகட்டும்; தஞ்சையில் காவிரி நீரைப் பயன்படுத்தும் உரிமை என்பது ஆயிரங்காலப் பயிர், அதைப் பறித்துக் கொள்ள யாருக்குமே உரிமை கிடையாது என்பதை நிலைநாட்டும் வண்ணம், உச்சநீதிமன்றம் நடந்து கொள்ளும் என்றும், தனது மதிப்பைத் தானே நிச்சயம் குறைத்துக் கொள்ளாது என்றும் உறுதியாக நம்புகிறோம்.


காலை உணவிற்கு சாக்லேட்!



பானி மிக்ஸ் சாக்லேட்


சுவையான காலை உணவிற்கு ஒரு வழி.

உங்கள் குழந்தை விரும்பி உண்ணும் பானி மிக்ஸ் சாக்லேட்டை காலை உணவிற்கு கொடுங்கள். இது தானியங்கள், பழங்கள் முந்திரியோடு சாக்லெட்டும் கலந்த பாரிட்ஜ்.



எளிதில் தயாரிக்கலாம்

சமைக்கத் தேவையில்லை. ஒரு கிண்ணத்தில் தேவையான அளவு பானி மிக்ஸை போடவும். முன்னமே கொதிக்க வைத்த பாலைச் சேர்க்கவும். மிருதுவான பாரிட்ஜ் கிடைக்க மெதுவாக கலக்கவும்.



பானி மிக்ஸ்®

உடனடியாக தயாரிக்கக்கூடிய பாரிட்ஜ்

இரு வகைகளில்:

நாச்சரல் * சாக்லேட்

உடல் நலத்தின் உறைவிடம் க்ளாக்ஸோ

GL/C/1/89/TAM

மலைச்சாரல்

1. நட்சத்திரங்களே இல்லாமல் ஒரு திரைப்படம் எடுக்கும் போது அது எந்த வகையில் உதவுகிறது?

படத்தின் வெற்றிக்கு நட்சத்திரச் செல்வாக்கை நம்பியிராமல் இயங்கும்போது திரைக்கதையும் ஃபார்முலாவிலிருந்து விடுபட்டு விடுகிறது. செயற்கையான திருப்பங்கள் இல்லாமல், இயல்பாக மேற்கொள்ள வேண்டிய பாதையில் விவரித்துச் செல்ல முடிகிறது.

2. அதனால் ஏற்படும் இதர பலன்கள் என்ன?

இமேஜைக் கட்டிக் காக்க வேண்டிய 'முன்னணி முகம்' இல்லாததால் நிகழ்ச்சிகள், நடையுடை பாவனைகள் எல்லாமே நடைமுறை வாழ்வைப் பிரதிபலிப்பதாக அமைத்து விடுகின்றன.

3. 'மலைச்சாரல்' படத்தில் அவை எவ்வாறு இடம் பெற்றுள்ளன?

வெளியுலகிலிருந்து ஒதுங்கி ஒரு சிறிய கிராமத்தில் வாழும் மலைவாழ் இனத்தவர், அவர்களுடைய பழக்க வழக்கங்கள் - நம்பிக்கைகள் - கட்டுத்திட்டங்கள் ஆகியவற்றைத் தெளிவாகப் புரிந்து கொண்டு, அவற்றிலிருந்து சற்றும் விலகிச் செல்லாமல் திரைக்கதையை அமைத்துக் கொள்ள இயக்குனரால் முடிந்திருக்கிறது.



4. அது மட்டும் போதுமா?

போதாதுதான். படப்பிடிப்பும் இதற்குத் துணை போயிருக்கிறது. 'க்ளோஸ்அப்' புகளைக் கூடியவரை தவிர்த்து, இயற்கையின் வனப்புக்கு முக்கியத்துவம் தந்து, படப்பிடிப்புக் கோணங்களை அமைத்திருப்பதால் பல ஃப்ரேம்கள் வண்ண ஓவியங்களாகக் காட்சி தருகின்றன. 'அட, நம் ஊரிலா இத்தகைய எழில் மிகு வனப்பிரதேசங்கள்!' என்று வியக்க வைக்கின்றன. இசை இன்னொரு பாராட்டுக்குரிய அம்சம். முராரிக்கு ஒரு ஷொட்டு.

5. நடிப்பெல்லாம் எப்படி?

நமக்குத் தெரிந்தவர்கள் நாலுபேர் - சரத் பாபு, ஸீதா, காந்திமதி, பூர்ணம். வரையறுக்கப்பட்ட வட்டத்துக்குள் கச்சிதம். கதாநாயகன் புதுமுகம். சில கோணங்களில் நாற்பது வருடங்களுக்கு முந்தைய ஜெமினி கணேஷ். இயக்குனரே ஒரு இதமான பாத்திரத்தில்.

6. முடிவாக?

அறிமுகக் காட்சிகளில் பச்சா.... அதன்பின் அச்சா!

- சி. ஆர். கே.

நேற்றுவரை

‘‘சௌக்கியமா?’’

இப்படிக் கேட்ட பிறகுதான், மீரா தனக்குத்தானே மானசீகமாய்க் குட்டிக் கொண்டாள்.

‘‘இப்படியா கேட்கறது.. பிள்ளையைப் பறிகொடுத்துட்டு நிக்கறவளைப் பார்த்து...’’

அவள், அதற்கு மேல் என்ன பேசுவது என்றே தெரியாமல், வாசற்படியிலேயே நிற்க, கீர்த்தியின் தாய் ஒரு கணத்தில் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, தலையசைத்து அவளை அழைத்தாள்.

‘‘வா...’’

‘‘பரவாயில்லே... நான் இப்படியே உட்கார்றேன். உங்களைப் பார்த்துப் பேசணும் போல இருந்தது.. அதான்... கையை அலம்பிட்டு வாங்களேன்...’’

‘‘உள்ளே வரக் கூடாதுன்னு யார் சொன்னது? நானாவா... அவன்தான் உன்னைப் பார்த்ததாச் சொன்னான். அவனுக்குத்தான் இந்த மாதிரி அசட்டு நம்பிக்கை எல்லாம் உண்டு. கேட்டா என் பேருல பழியப் போடுவான். எதையும் தானாச் சொல்ற தைரியம் கிடையாது.. நீ உள்ளே வா...’’

மீராவுக்கு அப்பொழுதும் தயக்கம் தான். அவள் கண்கள் சுற்று முற்றும் பாட்டியைத் தேட, கீர்த்தியின் தாய் புரிந்து கொண்டாற்போல விரக்தியாய்ப் புன்னகை செய்தாள்.

‘‘யாரைத் தேடறே... பாட்டியையா?’’

‘‘உம்...’’

‘‘ஒரு மாசமா ஆஸ்பத்திரியில கிடக்கா. இங்கே இருந்த வரைக்கும், பச்சைக் குழந்தை மேல பட்டாக் கூட குளிக்க ஓடுவா.. இப்ப ஒரு மாசமாக் குளியலே இல்லே.. பூஜை இல்லே. மூக்குல குழாய் செருகி, கஞ்சியும், பாலும் ஊத்தறது..அதுவும் அந்த நேரத்துல யார் பக்கத்துல இருக்காங்களோ அவங்க ஊத்தறதுதான். எல்லாத்தையும் பார்த்தாச்சு. இன்னமும் எதுக்காக இப்படி அந்தப் பிராணன் அவஸ்தைப்படறதோ தெரியலை.. நீ உள்ளே வா..’’

அனுராதா ரமணன்

மீரா, நடுங்கும் பாதங்களை, மிகச் சிரமப்பட்டு நகர்த்தி, வீட்டுக்குள் அடியெடுத்து வைத்தாள். அவளுக்கு முன்னால், தளர்ந்து போன நிலையில் பரிதாபமாய்க் கீர்த்தியின் தாய்...

திருமணமாகி அந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைத்த போது கூட, இப்படித் தான் கீர்த்தியின் தாயும், சித்தியுமாய் ஆரத்தி கரைத்துச் சுற்றி விட்டு அவர்களுக்கு முன்னால் போனார்கள்.

அப்பொழுது இந்த அம்மாள் பருத்து வளர்ந்த கண்ணாடி வாழை மாதிரி நிகுநிகுவென இருந்தாள். வெள்ளை ஃபுல் வாயில் ரவிக்கைக்கும், புடைவைக்கும் இடைப்பட்ட பின் முதுகு, மஞ்சள் பூச்சுடன் வெள்ளரிப் பழம் போல மின்னியது..

ஒரு வருஷத்துக்குள் இத்தனை மாற்றமா?

‘‘எங்கள் வீட்டுக்குள் இன்னும் மெட்ராஸ் நாகரிகம் எட்டிப் பார்க்கலே மீரா... இந்த ஃபேமிலி லேடீஸ் எல்லாரையும் பாரு... தேவையான அளவு சதையோட ஆரோக்கியமாகவே இருப்பாங்க.. சாப்பாட்டைக் குறைச்சிட்டு, ஹெல்த் க்ளப்புக்குப் போற வழக்கம் எதுவும் இல்லே. நல்ல சாப்பாடு. நிறைய வேலை. மனசுல எந்தவிதக் கலக்கமும் இல்லே. எங்கம்மாவைப் பார்த்தே இல்லே... அம்பத்தியாறு வயசுக்கும் கன்னத்தைப் பாரு.. நறுக்கி வச்ச மாம்பழக் கதுப்பு மாதிரி... நீ கூட அப்படித்தான் இருக்கணும்...’’

மீராவின் கண்களை நீர் திரையிட்டது.

ரேழி நடையைத் தாண்டி, உள் கூடம் இருளடைந்திருந்தது. வெளி வெளிச்சம் வருவதற்கு வழியாயிருந்த பெரிய ஜன்னல் மூடி வைக்கப்பட்டிருந்தது.

கூடத்து இருட்டில், கட்டிலோடு போர்வைச் சுருளுக்குள்.. யாரது...

கீர்த்தியின் அப்பா...

எதிரே டபரா தம்ளரில் ஈ மொய்த்துக்

நந்தவனம் 18

கொண்டிருக்க, கலகலவெனப் பேகம் சித்தப்பாதான் இவளைப் பார்த்ததும் புருவத்தை உயர்த்தினார்.

''அட, வாம்மா...''


''யாருடா...''

போர்வைச் சுருள் வினவியது..

சித்தப்பா, தாம் இடுப்பில் சவாரி செய்து கொண்டிருந்த மூன்று வயசுச் சிறுமியைக் கீழே இறக்கி விட்டு விட்டுத் தலையைச் சொறிந்தார்.

''யாருடா...''

இதற்குள் கீர்த்தியின் தாயே குரல்





''எங்க ஆபீஸ்ல எனக்கு முன்னாடி இருந்தவர் கிளாரே வெட்டாமல் ஐயாயிரம் சாப்பிட்டு விட்டார்!''

''அடடா... அப்புறம் எப்படிச் சரி செய்தீங்க?''

''அது பொதுமக்களுக்கு இடைஞ்சலா இருக்கு. மூடிடணும்'னு ஐயாயிரம் எடுத்துட்டுத்தான் சரி செய்தேன்.''

- எஸ். கந்தசாமி.

கொடுத்தான்.

''வர வர உங்க பாட்டி மாதிரியே நச்சரிக்க ஆரம்பிச்சாச்சு நீங்களும். ரூமுக்குள்ள இருந்தா மனுஷாளைப் பார்க்க முடியலை. ஹால்லே கொண்டு வந்து கட்டிலைப் போடுன்னு சொன்னீங்க.. இருக்கற அரை குறைக் கண்ணால யாரைப் பார்க்க முடியறது...''

''குரலையாவது கேட்கலாம் இல்லையாடீ?''

''கேட்டு . என்ன ஆகப் போறதுன்னேன். கை, கால் வரல்லே. வெளி வெளிச்சம் கண்ணை உறுத்தறது. ஜன்னலைச் சாத்தி, கூடத்தையே இருட்டாக்கியாச்சு. பெட்பான் வைக்க உங்க தம்பி பக்கத்துலேயே இருக்கார். பிடிவாதமாக் கட்டிலைப் பிடிச்சிண்டு நடந்து கொல்லைப் பக்கம் போவேன்னு அடம்பிடிக்க, மண்டைய உடைச்சு.. தையல் போட்டாச்சு... டாக்டரானா, பிளட் பிரஷர் ஏறக் கூடாது. ஹார்ட்டுக்கு ஆகாதுங்கறார்... எதையாவது கேட்டாத்தானே.. ஹால்லே சந்தைக் கடை மாதிரி போக்குவரத்து... சித்த தூங்க முடியறதா.. யார் வந்தாலும் 'யாரு யாரு'ன்னு இதே ஸ்மரணை...''

மீரா, தன் மாமியாரையே கண் கொட்டாமல் பார்த்தாள்.

திருமணமான புதிதில் பத்து நாட்கள் கீர்த்தியுடன் அந்த வீட்டில் தங்கியிருந்த போது அவள் பார்த்த மாமியாரே வேறு.

அதிர்ந்து பேச மாட்டாள். கணவரிடம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றாலும், அங்குமிங்கும் ஓடும் மைத்துனர் குழந்தைகள் மூலமோ, நாத்தி மூலமோதான் சொல்லி அனுப்புவாள்.

'இந்தாடா கோபு, உங்க பெரியப்பா இப்ப சாப்பிட வர்றாரா... இல்லே, இன்னொரு டோஸ் காப்பி குடிக்கிறாரான்னு கேளு....'

அப்படிப்பட்டவள், கணவரை - அவர் கையாலாகாது போய் விட்டதினாலேயே இந்த விரட்டு விரட்டுகிறாளே...

மீரா ஏதோ பேச எண்ணி வாய் திறக்க, கீர்த்தியின் தாய் - 'எதுவும் பேசாதே' என்று ஜாடை காட்டினாள்.

மனிதர், மனைவி இத்தனை பேசியும் விடாமல் கேட்டார்.

''ஏன்டீ, யாரோ புதுசா வந்தாப்பல இருக்கே, யாருன்னுதானே கேட்டேன்; அதுக்கு இத்தனை பேசணுமா...''

''எதிர்வீட்டு நடேசன் பொண்ணு பட்டணத்துல படிச்சிட்டிருந்தா. இல்லையா... லீவுக்கு வந்திருக்கா. 'மாமி, உங்க வீட்டுப் புழக்கடையில் மருதாணி இருக்குமே.. பறிச்சுக்கட்டுமா'ன்னு கேட்டா... ஆகா, வாயேன்னு சொன்னேன்.. வந்திருக்கா. போறுமா?''

''போறும்... போறும்...''

அவர், சுவரைப் பார்க்கத் திரும்பிப் படுத்தார். அந்த அம்மாள், மீராவின் கையைப் பிடித்து இழுக்காத குறையாய் அழைத்துக் கொண்டு, பின்கட்டுச் சமையலறைக்குப் போனாள்.

சமையற்கட்டில் தேங்காய் துருவிக் கொண்டிருந்த சித்தி, இவளைக் கண்டதும் பதைத்துப் போய் எழுந்தாள்.

அந்த ஒரு நிமிஷத்துக்குள் சின்னதும் பெரிசுமாய் அந்த வீட்டு அங்கத்தினர்கள் அத்தனை பேரும்...

சித்தப்பா கூட, மௌனமாய் இவர்களைப் பின் தொடர்ந்து வந்து, சமையலறை வாசற்படியில் இரு கைகளையும் ஊன்றியபடி அவளையே பார்த்தார்.

''நீ இங்கே வந்திருக்கறதா நாகு சொன்னான். ஏன், நேரே இங்கே வந்து தங்க... ஆனா முடியாது. பார்த்தியோ இல்லையோ.. கீர்த்தி விஷயம் கேட்டு அடி அறுத்த மரம் மாதிரி விழுந்தவர்தான். ஹார்ட் அட்டாக், பிளட் பிரஷர், ஸ்டிரோக்... என்னென்னமோ பேர் சொல்றா.. ஒண்ணும் புரிய மாட்டேங்கறது. படுத்த வாக்கிலேயே எல்லாம் நடக்கறது... கண்ணும் போச்சு.. பேசாம ரூமுக்குள்ள படுத்திருக்கலாம். அங்கே இருந்தா, அவன் நினைப்பு அதிகமாறதாம். ஹால்லே படுத்தாக் குழந்தைகள், பேச்சுப் பராக்குல கொஞ்சம் பொழுது போறது...''

இதற்குள் - சித்தப்பா இடைமறித்தார்.

''நான் கூட ஒரு நிமிஷம் ஆடிப்

நான் ஒரு தனியார் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கிறேன். பள்ளியில் தமிழ் மீடியத்தில் படித்ததனால் இங்கிலீஷ் கிராமர் என்றால் எனக்கு கொஞ்சம் அலர்ஜி.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைக்குத் தேவையான இங்கிலீஷ் சம்மரிகளைப் படித்து, மனப்பாடம் செய்து, பரீட்சைகளில் எப்படியோ பாஸ் செய்து விட்டேன். ஆனால்...



படிப்பை முடித்து விட்டு, வேலைக்குச் சென்றபோதுதான் ஆங்கிலத்தின் அவசியத்தை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

எங்களது ஹெட் ஆபீஸிலிருந்து வரும் அதிகாரிகள் ஆங்கிலத்தில் கேட்கும் கேள்விகளுக்கு ஆங்கிலத்தில் பதில் பேச முடியவில்லையே என்று பல சமயங்களில் வேதனைப்பட்டதுண்டு.

மேலும் அலுவலகத் தொடர்பான கடிதங்கள் எழுத அடுத்தவர்களது உதவியை நாடும் போது, இத்தனை வருஷம் சர்வீஸ் ஆகிறது இது கூடத் தெரியவில்லையே" என்று அவர்கள் ஏளனமாகப் பேசுவதைக் கேட்கும் போது, எனக்கு அழுகையே வந்துவிடும்.

என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாக விவேகானந்தா கல்வி நிலையத்தின் விளம்பரம் கண்ணில் பட்டது.

இது என்னை நாடி வந்துள்ள நல்ல வாய்ப்பு என்ற நம்பிக்கையுடன் விவேகானந்தா கல்வி நிலையம் நடத்தும் தபால் முறைப் பயிற்சியில் சேர்ந்தேன். என் நம்பிக்கை வீண் போகவில்லை. ஆம்...

ஆங்கில இலக்கணத்தை அனைவருக்கும் புரியும் வகையில் அறிமுகப்படுத்தி, வாக்கியங்களை அமைக்கும் முறை பற்றி எளிய முறையில் சொல்லிக் கொடுத்து, தவறாகப் பேசி விடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச பல பயிற்சிகளைத் தொகுத்து வழங்கி, ஓர் ஆசிரியர் நம்மிடம் நேரில் உரையாடுவதைப் போல பயிற்சி முறை மிகவும் எளிய முறையில் அமைக்கபபட்டுள்ளது.

ஆர்வமுடன் இப்பயிற்சியை மேற்கொண்டதன் பலனாய் இப்பொழுது

நாடி வந்த நல் வாய்ப்பு!...

என்னால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேச முடிகிறது. இலக்கணப் பிழை ஏற்பட்டு விடுமோ என்ற பயமின்றி கடிதங்கள் எழுத முடிகிறது.

மிகக் குறுகிய காலத்தில் என்னை ஆங்கில மொழியில் புலமை பெறச் செய்த விவேகானந்தா கல்வி நிலையத்திற்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

Mrs. S. விசாலாட்சி

நீங்களும் வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் தபால் மூலம் ஆங்கிலப் பயிற்சி பெறலாம். நேர்முகப் பயிற்சியும் உண்டு.

விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியில் உடனே தொடர்பு கொண்டு பயன் பெறுங்கள்.

விவேகானந்தா கல்வி நிலையம்
தபால் பெட்டி எண்: 4986
9, நடேசன் தெரு, தி. நகர்,
சென்னை-600 017.

NAGA

போயிட்டேன் மன்னி. மீரா வாய் திறந்து பேசியிருந்தா அண்ணா, 'ஹோ'ன்னு கிளம்பியிருப்பார். பிழைக்க வச்ச பாட்டுல - மறுபடியும் விபரீதமா ஏதாவது ஆச்சுன்னா என்ன செய்யறது.. நல்ல வேளை... நீங்க, அவளைப் பேசவே விடல்லே... மேலே மேலே பேசிட்டே போய் உள்ளே அழைச்சிட்டு வந்துட்டீங்க...''

அந்த அம்மாள், பெருகிய கண்ணீரைப் புடைவைத் தலைப்பால் ஒற்றி எடுத்தாள்.

இதற்குள் யாரோ காப்பி கலந்து கொண்டு வந்து வைக்க, சித்தி, கொஞ்சமே தெரிந்த இவளுடைய கணுக்கால் பொசுங்கலை, புடைவை விளிம்பை, சற்றே விலக்கிப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள்.

''அப்புறம் சொல்லு மீரா... இங்கே என்ன விஷயமா...''

கீர்த்தியின் தாய், மீராவின் முன் நெற்றி கேசச் சுருளை ஒதுக்கி விட்டாள்.

மீரா, ஒருவித தர்மசங்கடத்துடன் சுற்றி நின்ற இரண்டுங்கெட்டான்களைப் பார்த்தாள்.

சித்தியின் பெரிய பெண், பாத்திரங்களைத் தேய்த்துக் கொண்டு வந்த தோட்டக்காரனிடம் சொல்லிக் கொண்டிருந்தாள் :

''புது மன்னி செல்லம்... கொஞ்ச நாள் முந்தி கல்யாணமாச்சு.. கீர்த்தி அண்ணா பெண்டாட்டி... நீ அப்ப, பிரசவத்துக்குப் போயிருந்தே...''

மீராவின் முகத்தைப் பார்த்தே, அவளது கஷ்டத்தை ஊகித்த சித்தி, குழந்தைகளை விரட்டினாள்.

''ஏய், என்ன வம்பு அங்கே? எல்லாருக்கும் ஸ்கூல் இருக்கு இல்லே? மளமளன்னு ரெண்டு வாய் அள்ளிப் போட்டுண்டு கிளம்புங்கோ... வாசப் பக்கம் போய் எதுவும் மூச்சு விடக் கூடாது. ஏற்கனவே பெரியப்பாவுக்கு உடம்பு சரியில்லே... அங்கே போய், கிடைச்ச சரக்கை அவிழ்க்க வேண்டாம். தெரியறதா.. முதல்லே, பெரிசுகளுக்குத்தான் சொல்லணும்...''

அத்தனையும் சொல்லி வைத்தாற் போல - ரயில் பெட்டியின் அடுக்குத் தொடராய்ச் சமையலறையை ஒட்டிய முற்றத்து வராந்தாவில் தட்டைப் போட்டுக் கொண்டு உட்கார, சித்தியின் பெரிய பெண் பன்னிரண்டு வயசு நாராயணி மட்டும், மீராவின் காதருகே கிசுகிசுத்து விட்டுப் போனாள்.

''புது மன்னி, நீங்க இனிமே எங்க கூடத்தானே இருப்பீங்க?''

மீரா, சட்டெனத் தலை குனிந்தாள்.

இதே பெண்ணுக்குத் தலை பின்னி விடப் போய், கீர்த்தியிடம் செல்லமாய்த் திட்டு வாங்கியது நினைவுக்கு வந்தது.

'என்ன கரிசனம்? நீ வந்து தலை பின்னி விடற வரைக்கும் அவ, விரிச்ச தலையும், கையில் சீப்புமாக் காத்துட்டிருந்தாளா.. அட பின்னத்தான் பின்னினியே... சட்டுப் புட்டுனு ஒத்தைப் பின்னலா - முடிஞ்சு விட மாட்டே? பெரிய ஹேர் டிரஸ்ஸர் மாதிரி.. சரி.. இங்கே வா...'

'என்ன வேணும்.. இங்கேயே நிக்கறேன். சொல்லுங்களேன்...'

'என் கழுத்து மூணு அடி தூரத்துக்கு நீளாது...'

'புரியலை...'

'இன்னுமா புரியலை?'

'ச்சீ, போங்க...'


மீரா குலுங்கி நிமிர்ந்தாள்.

எதிரே, வற்றிப் போன கன்னமும், குழி விழுந்த கண்களுமாய்க் கீர்த்தியின் தாய்.

இவளிடம், தான் வந்த விஷயத்தை எப்படிச் சொல்வது?

மீரா திகைத்துப் போய் நின்றாள்.

(தொடரும்)





புலி ராஜா

(சென்ற இதழ் தொடர்ச்சி)

4

மகாராஜா ஒரு நாள் திவானைக் கூப்பிட்டார். ''திவான் சாகிப், இன்னும் முப்பது புலி இந்தத் துப்பாக்கிக்கு இரையாகித் தீர வேண்டுமென்று உமக்குத் தெரியுமோ, இல்லையோ?'' என்று கேட்டார்.

திவான் துப்பாக்கியைப் பார்த்து நடு நடுங்கிக் கொண்டே, ''மகாராஜா! நான் புலியில்லை.....'' என்றார்.

''நீர் புலி என்று எந்த முட்டாள் சொன்னது?''

''இல்லை, நான் துப்பாக்கி இல்லை'' என்றார் திவான்.

''நீர் புலியுமில்லை, துப்பாக்கியுமில்லை, திவான்சாகிப்! உம்மைக் கூப்பிட்ட காரணம் வேறு. நான் கல்யாணம் செய்து கொள்வதென்று தீர்மானித்து விட்டேன்'' என்றார் மகாராஜா.

திவானுக்கு உளறல் இன்னும் அதிகமாகி விட்டது. ''மகாராஜா! ஏற்கெனவே எனக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்; உங்களையும் கல்யாணம் செய்து கொண்டு.....''

''சட்! என்னங்காணும் உளறுகிறீர்? உம்மை எதற்காக நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்? எனக்கு வேண்டியது புலி....''

''மகாராஜா! வேண்டாம், யோசனை செய்யுங்கள். உங்கள் குலத்து முன்னோர்கள் கத்தியைக் கல்யாணம் செய்து கொண்டார்கள். நீங்கள் வேணுமானால் துப்பாக்கியைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள். இந்த சமஸ்தானத்துக்குப் புலி ராஜா இருப்பது போதும்; புலி ராணி வேறே வேண்டாம்!''

இதைக் கேட்ட மகாராஜா குபீரென்று சிரித்து விட்டு, ''புலியுமில்லை, துப்பாக்கியுமில்லை. மனுஷப் பெண்ணைத்தான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன். தற்சமயம் எந்தெந்த சமஸ்தானத்தில் புலி இருக்கிறதென்று முதலில் கணக்குத் தயார் செய்யும். பிறகு, புலி இருக்கிற சமஸ்தானத்தில் ராஜ வம்சத்தில் கல்யாணத்துக்குப் பெண் இருக்கிறதா என்று பாரும்'' என்றார்.

திவான் அப்படியே பார்த்தார். கடைசியில், மகாராஜாவின் விருப்பத்தின் படியே புலிகள் நிறைய உள்ள சமஸ்தானத்தில் பெண் பார்த்துக் கல்யாணமும் செய்து வைத்தார்.

மகாராஜா ஜங்ஜங் பகதூர் ஒவ்வொரு தடவை மாமனார் வீடு சென்ற போதும் ஐந்தாறு புலிகளைக் கொன்று எடுத்துக்கொண்டு வந்தார். இப்படியாக மகாராஜா கொன்ற எல்லாப் புலிகளின் தோலும் - சரியாக 99 தோல் - அரண்மனை ஆஸ்தான மண்டபத்தின் சுவர்களை அலங்கரித்தன.

5

கடைசியில் நூற்றுக்கு இன்னும் ஒரு புலிதான் பாக்கி என்ற நிலைமை ஏற்பட்டதும் மகாராஜாவின் பரபரப்பு மிகவும் அதிகமாயிற்று. பகலில் அதே நினைவு; இரவில் அதே கனவு. இதற்குள்ளே, மாமனார் சமஸ்தானத்திலும் புலிப் பண்ணை வறண்டு போய்விட்ட படியால், புலிகள் அகப்படுவது மிகவும் பிரயாசையாய்ப் போயிருந்தது. ஆனாலும், இன்னும் ஒன்றே ஒன்றுதானே? இன்னும் ஒரு புலியை மட்டும் கொன்று விட்டால், அப்புறம் பயமே இல்லை. புலி வேட்டையையே விட்டு விடலாம்.

ஆனால், இந்தக் கடைசிப் புலி விஷயத்தில் வெகு ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். காலஞ் சென்ற தலைமை ஜோசியர் என்ன சொன்னார்? ''99 புலிகளை மகாராஜா கொன்றபோதிலும் 100-வது புலி விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்!'' - உண்மைதான்; புலி பொல்லாத மிருகம். ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும் - ஆனால், அந்த நூறாவது புலிக்கு எங்கே போகிறது? புலி கிடைப்பது புலிப் பால் கிடைப்பதை விடக் கஷ்டமாகி

அமரர் கல்கி

விட்டதே!

மகாராஜா இப்படிப்பட்ட கவலையில் ஆழ்ந்திருந்தபோது, அந்தக் கவலையைப் போக்கக்கூடிய ஓர் அருமையான சந்தோஷச் செய்தி வந்தது. அந்த சமஸ்தானத்திலேயே மலைக் கிராமம் ஒன்றில் திடீர் திடீரென்று சில ஆடுகள் காணாமல் போய் வந்தன. 'முழு ஆடு விழுங்கிகள்' என்று பெயர் பெற்ற காதர்மியான் சாகிபுவையும், வீராஸாமி நாயக்கரையும் விசாரித்து, அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று தெரிய வந்ததும், புலிதான் வந்திருக்க வேண்டுமென்று நிச்சயமாயிற்று. கிராம வாசிகள் ஓடிப் போய் மகாராஜாவிடம் தெரிவித்தார்கள். அந்த கிராமத்துக்கு மூன்று வருஷம் வரி, வாய்தா, குவிட் ரெண்ட், ஜமாபந்தி, புறம்போக்குப் பட்டி ஒன்றுமே கிடையாது என்று மகாராஜா தெரிவித்து விட்டு, உடனே வேட்டைக்குக் கிளம்பினார்.

புலி இலேசில் அகப்படவில்லை. வேண்டுமென்று, மகாராஜா கையில் அகப் படக் கூடாதென்றே, அது ஒளிந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. மகாராஜாவோ, புலி அகப்பட்டாலொழியக் காட்டை விட்டு வரமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தார். அதோடு, நாளாக ஆக மகாராஜாவின் கோபமும் பிடிவாதமும் அதிகமாகி வந்தன. அதன் பயனால் அநேக உத்தியோகஸ்தர்களுக்கு வேலை போய் விட்டது.

ஒரு நாள் ரொம்பக் கோபம் வந்த போது மகாராஜா திவானைக் கூப்பிட்டு, ''சமஸ்தானத்தில் நிலவரியை உடனே இரண்டு பங்கு செய்யுங்கள்'' என்றார். திவான், ''பிரஜைகளுக்கு அதிருப்தி உண்டாகும், மகாராஜா! அப்புறம் நம் சமஸ்தானத்திலும் ஸ்டேட் காங்கிரஸ் ஏற்பட்டு விடும்!'' என்றார். ''அப்படியானால், உம்முடைய வேலையை ராஜினாமா செய்து விட்டுப் போம்!'' என்றார் மகாராஜா.

இதற்குமேல் மகாராஜாவுக்குப் புலி அகப்படாதிருந்தால் விபரீதந்தான் என்று தீர்மானித்துக் கொண்டு வீட்டுக்குப் போனார் திவான். அங்கே சென்னை பீபிள்ஸ் பார்க்கிலிருந்து வாங்கிக் கொண்டு வந்து இரகசியமாய் வைத்திருந்த புலியைப் பார்த்ததுந்தான் அவருக்கு உயிர் வந்தது.

அன்று இரவு நடு நிசியில் ஊரெல்லாம் அடங்கிய பிறகு, திவானும் அவருடைய வயது முதிர்ந்த மனைவியும் மேற்படி புலியை இழுத்துக் கொண்டு வந்து மோட்டாரில் ஏற்றினார்கள். திவான் தாமே மோட்டாரை ஓட்டிக் கொண்டுபோய், மகாராஜா வேட்டையாடிக் கொண்டிருந்த காட்டுக்குப் பக்கத்தில் புலியை இறக்கினார்! மோட்டாரிலிருந்து இ ற ங் க மா ட் டே னென்று சத்தியாக்கிரஹம் செய்த அந்தப் புலியைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளுவதற்குள் திவானுக்கு மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கி விட்டது!

மறு நாள் மகாராஜாவின் முன்னால் மேற்படி கிழப் புலியானது வந்து, ''ஏஜமானே! என்ன ஆக்ஞை?'' என்று கேட்பது போல் நின்றது. மகாராஜா அளவிறந்த உற்சாகத்துடன் துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்துச் சுட்டார். உடனே, புலி சுருண்டு விழுந்தது.

''நூறாவது புலியைக் கொன்று விட்டோம்; விரதம் நிறைவேறிவிட்டது!'' என்ற மகத்தான குதூகலம் மகாராஜாவின் மனத்தில் தோன்றிற்று. அந்த நூறாவது புலியை, தமது தலைநகரில் ஊர்வலமாகக் கொண்டு வரும்படி கட்டளையிட்டுவிட்டு, மகாராஜா மோட்டாரில் ஏறி விரைந்து முன்னால் சென்றார்.

அவர் போன பிறகு, மற்ற வேட்டைக்காரர்கள் புலியின் அருகில் சென்று பார்த்தார்கள். புலியும் கண்களைப் பேந்தப் பேந்த விழித்து அவர்களைப் பார்த்தது! புலி சாகவில்லையென்றும், அதன்மேல் குண்டே பாயவில்லையென்றும் அவர்கள் கண்டார்கள். குண்டு சமீபத்தில் போன அதிர்ச்சியினாலேயே அது அப்படி மூர்ச்சையாகி விழுந்திருந்தது! வேட்டைக்காரர்கள் யோசனை செய்தார்கள். குண்டு குறி தவறிப் போன செய்தி மகாராஜாவுக்குத் தெரியக்கூடாது, தெரிந்தால் தங்களுடைய உத்தியோகத்துக்கு ஆபத்து என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களில் ஒருவன் புலிக்கு ஓர் அடி தூரத்திலிருந்து குறி தவறாமல் சுட்டு அதைக் கொன்று தீர்த்தான்.

பிறகு, மகாராஜாவின் கட்டளையின்படி, அந்தச் செத்த புலியை நகரில் ஊர்வலம் விட்டுக்கொண்டு போய்க் கடைசியில் அதைப் புதைத்து, சமாதியும் எழுப்பினார்கள்.

6

மேற்கூறிய விசேஷ சம்பவம் நடந்து சில தினங்களுக்குப் பிறகு மகாராஜாவின் குமாரனுக்கு மூன்றாவது பிறந்த தினக் கொண்டாட்டம் நடந்தது. இது வரையில் புலி வேட்டையிலேயே கவனமாயிருந்த மகாராஜா பட்டத்து இளவரசனைப் பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. இப்போது அவருடைய கவனம் குழந்தையின் மீது சென்றது. பிறந்த தினத்தன்று குழந்தைக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமென்று



ஆசைப்பட்டார். பிரதிபந்தபுரம் கடைத் தெருவுக்குப் போனார். கடை கடையாகத் தேடியும் அவருக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. கடைசியில், ஒரு பொம்மைக் கடையில் ஒரு சின்ன மரப் புலியைப் பார்த்தார். ''இதுதான் சரியான பரிசு'' என்று உடனே தீர்மானித்து விட்டார்.

அந்த மரப் புலியின் விலை இரண்டே காலணாத்தான். ஆனால், மகாராஜா கேட்கும்போது அவ்வளவு குறைந்த விலை சொன்னால் நிச்சயம் அவசரச் சட்டத்தின் கீழ் தண்டனை கிடைக்குமென்று தெரிந்த கடைக்காரன், ''மகாராஜா! இது ரொம்ப ரொம்பக் கலைத் திறமை பொருந்திய பொம்மை; விலை முந்நூறு ரூபாய்தான்!'' என்றான்.

''ரொம்ப சந்தோஷம்! யுவ ராஜாவின் பிறந்த தினக் கொண்டாட்டத்துக்கு இது உன்னுடைய காணிக்கையாயிருக்கட்டும்'' என்று சொல்லிவிட்டு, மகாராஜா அதை எடுத்துச் சென்றார்.

யுவராஜாவின் பிறந்த தினத்தன்று, தகப்பனாரும் குழந்தையும் அந்தச் சின்னஞ் சிறு மரப் புலியை வைத்துக் கொண்டு விளையாடினார்கள். யாரோ பட்டிக்காட்டுத் தச்சன் செய்த பொம்மை அது. ஆகையால், அதன் மேலெல்லாம் சிலாம்பு சிலாம்பாய் நின்றது. மகாராஜா அதைக் கையில் வைத்துக் கொண்டு விளையாடும்போது, வலது கையில் ஒரு சிலாம்பு குத்தியது. இடது கையால் சிலாம்பைத் தட்டி எறிந்துவிட்டு, மகாராஜா மேலும் விளையாடிக் கொண்டிருந்தார்.

சிலாம்பு குத்திய இடத்தில் மறுநாள் சின்னக் கொப்புளம் புறப்பட்டது.

இரண்டு நாளையில் அது பெரிய சிரங்காயிற்று. நாலு நாளைக்கெல்லாம் கை முழுவதும் புரையேறிவிட்டது.

சென்னைப் பட்டணத்திலிருந்து பெரிய ஸர்ஜன்கள் மூன்றுபேர் வரவழைக்கப்பட்டார்கள்.

அவர்கள் கூடி ஆலோசித்து, ''ஆபரேஷன் செய்ய வேண்டியதுதான்'' என்று தீர்மானித்தார்கள்.

ஆபரேஷன் நடந்தது.

மூன்று ஸர்ஜன்களும் ஆபரேஷன் செய்து விட்டு வெளியில் வந்து, பின் வரும் செய்தியைத் தெரிவித்தார்கள் : ''ஆபரேஷன் வெற்றிகரமாய் நடந்தது; மகாராஜா காலமாகி விட்டார்!''

இவ்விதமாக, நூறாவது புலியானது கடைசியில் புலி ராஜாவின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொண்டது.

கூடு

ரிஷபன்

'கதவைத் திறக்க ஏன் இவ்வளவு நேரம்?' காலிங் பெல்லை மறுபடி அழுத்தினேன். பஸ் ஸ்டாப்பிலிருந்து பதினைந்து நிமிட நடை. இன்னும் மூச்சிரைத்தது.

வீட்டினுள் 'குக்கூ' என்று அழைப்பு மணியின் சப்தம் ஒலிப்பது கேட்டது. ஆனால் அம்மாவைத்தான் இன்னும் காணோம். என்ன ஆச்சு... தூங்குகிறாளா... இல்லை...

நல்ல வேளை... என் பதற்றம் அதிகரிப்பதற்குள் அம்மா வந்துவிட்டாள். கதவைத் திறந்ததும் எரிச்சலுடன் கேட்டேன்.

''என்ன பண்ணே... இவ்வளவு நேரம்?''

''எந்தச் சத்தம்னு புரியலே... நாள் பூரா... இதுங்களோட இரைச்சல். வேற... இந்த காலிங் பெல்லும் அதே சத்தத்திலயா வாங்கணும்...''

ஹாலில் வெளிச்சமில்லை. எல்லா ஜன்னல்களும் மூடி இருட்டடித்துக் கிடந்தது.

''எதுக்கு ஜன்னலை எல்லாம் மூடி வச்சிருக்கே?''

அம்மா எனக்குக் காப்பி கலக்கச் சமையல் அறைக்குள் போய் விட்டாள். கேட்டது நிச்சயம் காதில் விழுந்திருக்காது. காது அவ்வளவு மோசமில்லை. எழுபது வயசுக்கு அம்மாவின் உடம்பு திடம்தான். இப்போதும் தொடர்கதை படிக்கிறாள். என்னுடன் இரவு படுத்துக் கொள்ளும்போது விவாதிப்பாள். காலை எட்டு மணிக்குக் கிளம்புகிறவளுக்குச் சூடாக டிபன் செய்து தருவதிலிருந்து இரவுச் சமையல் வரை அவள்தான்.

ஆண் துணை இல்லாத குடும்பம். பகல் முழுக்கத் தனிமையில், அம்மா. 'ரொம்பக் கஷ்டமா இருக்குடி...' என்றாள். வார, மாதப் புத்தகங்களை ஆபீஸ் கிளப்பில் சேர்ந்து, கொண்டு வந்தேன்.

'முடியிலைடி... மறுநாளே திருப்பி எடுத்துண்டு போறியே....'

அவளுக்காக ஒரு குறிப்பிட்ட இதழை மட்டும் சொந்தமாக வாங்கினேன். அந்த நாளிலிருந்து தரமான இதழ் அது. வாரா வாரம் தொடர்கதை படிப்பதில் அம்மாவுக்குத் தனி ஈடுபாடுதான். அது தவிர ஆபீஸ் புத்தகங்களும்.

''ஏம்மா.. இதை எடுத்துண்டு போயிடலாமா... நாளைக்கு....'' என்றேன் காப்பி கொண்டு வந்தவளிடம்.

''இன்னைக்குப் படிக்க முடியலைடி... ஜன்னலை அ டை ச் சு ட் டு.... ஒரே இருட்டு..... பவர் கட்.... புழுக்கம் வேற... தலைவலி மண்டையப் பொளக்கறது...''

''எதுக்கு ஜன்னலை மூடணும்?''

''வாய் ஓயாம சத்தம்... குருவிங்களோட தொல்லை தாங்க முடியலே.... என்னால சகிச்சுக்கவே முடியலே. நாராசமா இருக்குடி...'' என்றாள், இப்போதும் சத்தம் கேட்கிற பிரமையில் காதுகளை மூடிக் கொண்டு.

ஜன்னலைத் திறந்தேன். வாஸ்தவம் தான். பக்கத்து மரங்களில் ஏகப்பட்ட பறவைகள். அதன் இரைச்சல்கள்.

அம்மா விலகிப் போய் விட்டாள். பாவம்... வயசாகிவிட்டது. மனசுக்கு எத்தனை நாள்தான் தாங்குகிற சக்தி இருக்கும். பெற்ற மகள்.... இன்னும் சொந்தக் கூடு இன்றித் தனி மரமாய் நிற்கையில்... ஜன்னல் வழியே சுதந்திரமாய் உள்ளே பிரவேசித்து... சுவாதீனமாய்க் கூடு கட்ட முனைகிற குருவிகளிடம் அம்மாவுக்கு வெறுப்பு வருகிறதோ...

நன்றாக நினைவில் இருக்கிறது.

அன்று மாலை அலுவலகத்திலிருந்து வந்தவள்... ஹாலில் சிதறியிருந்த வைக்கோல் துண்டுகளை ஆச்சர்யமாய்ப் பார்த்தேன்.

''என்னம்மா இது... ஒரே குப்பையாக் கிடக்கு....''

''அதோ பார்.... அந்தக் கன்றாவியை....''

மேலே காட்டினாள். மேல் சுவரின் வாகான இடத்தில் செங்கலின்றி.... சிமெண்ட் இன்றி இயல்பாய்ச் சிருஷ்டித்த வீடு.... வீட்டிற்குள் பெருமையுடன் சிறகடித்தது.

''ஒரே நாள்லயா.... காலையில ஆபீஸ் போகும் போது காணோமே...''

''நாசம் பண்ணிரும். ஒட்டடைக் குச்சி யை எடுத்து.... அதைக் கலைச்சு விரட்டேன்... என்னால தாங்க முடியலே. சத்தம்...''

''பாவம்மா... அதைப் போய் எப்படிக் கலைக்கறது...''

''பாவமாவது புண்ணியமாவது... மனுஷா நிம்மதிதாண்டி முக்கியம். இங்கே இல்லேன்னா வேற எடம். கூடு கட்ட இடத்துக்கா பஞ்சம்... பேசாம நான் சொல்றதைச் செய்யி...''

எனக்குத்தான் மனம் வரவில்லை. தயங்கினேன்.

அம்மா பிரம்மாஸ்திரம் எய்தாள்.

''அந்தக் குருவியோட நல்லதுக்குத்தான்டி சொன்னேன்... எ ப் ப ப் பார்... நமக்கு ஃபேன் காத்து வேண்டியிருக்கு. அடிபட்டுச் செத்துக் கித்துத் தொலைச்சுதுன்னா... அது பரவாயில்லையா?''

கூடாது... இந்த முறை என் கை தானாக ஒட்டடைக் கம்புடன் உயர்ந்து சிதைத்தது.

'கிறீச்... கிறீச்' சென்று ரொம்ப நேரம் கத்தி விட்டுப் போனது. அன்றிரவு என்னால் வெகு நேரம் தூங்க முடியவில்லை. 'இப்படி பண்ணி விட்டாயே..' என்று அது குற்றம் சாட்டுகிற பிரமை வெகு நாட்களுக்கு இருந்தது.

இப்போதும் என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. என் குணம் அதுவல்ல. தெரிந்தே ஏமாறுகிறவள் நான். சுலபமாய் என்னைத் தங்கள் காரியங்களுக்கு உதவ வைத்து விடுகிறார்கள். போன வாரங் கூட அதுதானே பிரச்னை.....

ஃபோன் வந்தது அலுவலகத்திற்கு.

''சீக்கிரம் வருவியா இன்னைக்கு....''

நம்பிதான் பேசினான். ஹைதராபாத்திலிருந்து வந்திருக்கிறான். என்ன திடீர் விஜயம்.

''ஏன்... எதுக்கு...'' என்றேன்.

''வாயேன்... ரொம்ப அர்ஜண்ட்....''

பர்மிஷன் போட்டு விட்டுப் போனேன். அம்மா பிள்ளைப் பாசத்தில் இத்தனை நான் ஏங்கி இருந்திருக்க வேண்டும். பொல்லாத பிள்ளை. எப்பேர்ப்பட்டவன்...

'அக்கா... நீ தப்பா நினைச்சுக்காதே....' ஏதோ இந்த பாமிலிக்கு.... நீயும் செஞ்சிருக்கே. கல்யாணம் வேண்டாம்னு முடிவெடுத்தது முழுக்க முழுக்க உன் முடிவு. அதுல எங்களோட ஒபினியனே நீ கேட்கலே. இப்ப உன் சம்பளத்துல.... நீ தாராளமா அம்மாவை வச்சுக்கலாம்.... அம்மாவும் இங்கே... பழகின சூழ்நிலையில இருக்கறதைத்தான் விரும்புவா.... நான் அழைச்சுக்



கிட்டுப் போகலைன்னு நினைச்சுக்காதே...'

போய்விட்டான் அப்போது. அம்மா வுக்கு உள்ளூரக் குறை இருந்திருக்க வேண்டும். ஆனால் வெளிக் காட்ட வில்லை. எப்போதாவது உடம்பு முடியா மல் போகும் போது, புலம்புவாள். நான் லீவு போட முடியாத சூழ்நிலை என்றால் முனகல் இரட்டிப்பாகிவிடும்.

'உனக்கென்ன..... கு ழ ந் தை ய ா... குட்டியா... குடும்பமும் கி டை ய ா து. கொடுத்தால் குறைந்தா போய்விடுவாய்? என்று கோரிக்கைகளுடன் உறவினர் கூட்டம் வரும்போது எனக்கு உள்ளூர 'ச்சி' என்றாகிவிடும்.

'நீயாவது சொல்லு....' என்று அம்மா வைச் சிபாரிசு பிடிப்பார்கள்.

அம்மாவுக்கு அப்போதாவது உலகம் புரிந்திருக்க வேண்டும். அல்லது... அம்மா வும் அதே போலத்தான் நினைத்தாளோ.... 'உனக்கு முடியும்னாக் கொடு....' என்பாள் நாசூக்காய்.

அதுவும் நிச்சயமாய் அவள் பிள் ளைக்கு என்றால்... இந்த முறை என்னவாக இருக்கும் என்று வீட்டிற்கு வந்தேன்.

சம்பிரதாய உரையாடல்கள் முடிந்து சகஜ நிலை வந்தபோது அவன் வந்த நோக்கம் புரிந்தது.

''தெரியாத்தனமா... ஒரு பிளாட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்துட்டேன். எதிர் பார்த்த மாதிரி பணம் புரட்ட முடியலே.... டிலே ஆகறது... உனக்கு ஏதோ வேஜ் செட்டில்மெண்ட் எல்லாம் ஆகி... லம்ப்பா பணம் வந்திருக்குன்னு கேள்விப்பட் டேன்... சரி.... நீயாவது எனக்கு ஹெல்ப் பண்ணுவேன்னு வந்தேன்....'' என்றான் உற்றுப் பார்த்தபடி.

அம்மாவைப் பார்த்தேன். இரண்டு வாரம் முன்னாடி.. அம்மா போஸ்ட் செய் யக் கொடுத்த கடிதம் இதற்காகத்தானா....

''அவளை ஏன் பார்க்கறே..... பணம் வந்திருக்குன்னு யதார்த்தமா எழுதி யிருந்தா... எனக்கும் அதைப் பறிக்க ணும்னு ஆசை இல்லே... ஏதோ பிரச்னை.. சரி, யாராவது வெளி மனுஷாள்கிட்டே கேட்கிறதுக்கு உன்கிட்டே கேட்கலா மேன்னு வந்தேன்.....''

பேசாமலிருந்தேன். ஆயாசமாய் இருந் தது.

அக்காவைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் ஒரு முறை கூட வராதவன், பணம் காட்டிய கவர்ச்சியில் வந்திருக் கிறான்! நிஜமாகவே நான் தனிதானா... எனக்காக ஒருத்தர் கூடவா இல்லை. காலம் முழுவதும் தனிமையில் இருப்பேன் என்று நான் எடுத்த முடிவு தவறா...

'கீச் கீச்' சென்று வெளியே குருவிகள் கத்திக் கொண்டு பறந்தன.

''என்ன சொல்றே... தர முடியுமா?'' என்றான் பொறுமை துளி கூட இல்லாத வனாய்.

ஜன்னலுக்கு வெளியேதான் என் பார்வை லயித்து இருந்தது. எத்தனை குதூ கலமாய்ச் சிறகடித்து... நிச்சயம் எல்லாக் குருவிகளும் ஏதோ வகை உறவுதான். அடுத்தவரைச் சார்ந்து பணம் பிடுங்குகிற புத்தி கிடையாது. சொந்தமாய், சுய முயற்சி யில் கூடு கட்டி...

''எனக்குப் பதில் சொல்லிட்டு... அப்புறம் ரசனையை வச்சுக்க....''

திரும்பினேன். என்னுள் அளவுக்கு மீறிய நிதானம்.

''இல்லை... இப்ப என்னால தர முடி யாது... வேணுங்கிற அளவு உதவி பண்ணிட்டேன். இதுவும் என்னோட சுய நலத்துக்காக இல்லை... எங்க ரெண்டு பேருக்கும் ஒரு பாதுகாப்புக்காக....''



என்றேன்.

விருட்டென்று அம்மாவிடம் திரும்பினான்.

''எல்லாம் கேட்டீல்ல.. எப்பேர்ப்பட்ட அவமானம் பார்த்தியா எனக்கு. கிளம்பும் போதே சொன்னா... 'போகாதீங்கோ... அவளுக்கு மனசு வராது... வெறுங் கையாத் திரும்பி வருவீங்க'ன்னு... சொன்ன மாதிரியே ஆச்சு.... என்ன கேவலம்.''

அம்மா என்னைப் பார்த்தாள்.

''ஏண்டி....'' என்று ஏதோ சொல்ல முனைந்தாள்.

''வேண்டாம்மா... என்னால நீயும் அவமானப்படாதே.... உன்னையும் தூக்கி யெறிஞ்சு பேசுவா....'' என்றான்.

''அவ பேசினா என்னடா... போடா... நீயும் உன் பணமும்னு தூக்கி விசிட்டு, உன் கூட கிளம்பி வரேன்... இவளை விட்டா என்னை வச்சுக்க ஆளே இல்லையா?'' என்றாள் அம்மா தன் வழக்கமான வெகுளித்தனத்துடன்.

தம்பி சுதாரிப்பது புரிந்தது. பணமும் கிடைக்காது... இது வேறு புதுச் சோதனை.... கையெடுத்துக் கும்பிட்டான்.

''வேணாம்மா... அப்புறம் அதற்கு வேற சொல்லிக் காட்டுவா. அம்மாவையும் என் கிட்டேயிருந்து பிரிச்சுக்கிட்டு போயிட்டான்னு.... ஏதோ... உடன் பிறப்பு... உதவுவான்னு வந்தேன்... நல்ல பாடம் கிடைச்சுது.... வரேன்...''

ரோஷம் வந்த மாதிரி உடனே கிளம்பிப் போய்விட்டான். அம்மா இன்னமும் அவன் வார்த்தைகளைத்தான் நம்புகிறாள். என்னால்தான் அவன் பிள்ளையுடன் சேர்ந்து வாழ முடியவில்லை... பேரன், பேத்திகளைக் கொஞ்ச முடியவில்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள்.

அதில் எனக்குச் கவலையில்லை. போனால் தெரியும்... ஒரே வாரம்... அவன் சாயம் வெளுத்து விடும். எனக்கும் பங்கு இருக்கிறது... எனக்கும் கடமை இருக்கிறது.. வைத்துக் காப்பாற்றிவிட்டுப் போகிறேன்...

வெளியே இன்னமும் பறவைகளின் இரைச்சல்கள். கீச், கீச்சென்று உல்லாசமாய் அவை வானில் திரிகிற போது, உள்ளூரப் பொறாமை அப்பியது. எனக்கும் பறவையாய் ஜென்மம் வாய்த்திருந்தால், இந்நேரம் சொந்தமாய் ஒரு கூடு இருந்திருக்கும்... என்னைச் சுற்றியும் பறவைக் கூட்டம் சிறகடித்திருக்கும்.



- ஞா. ஞானமுத்து

சிவகாமியின் சபதம்

ஐம்பத்தோராம் அத்தியாயம்
சக்கரவர்த்தி தூதன்

குமார சக்கரவர்த்தி சபையில் கூடியிருந்தவர்களை ஒரு தடவை கண்ணோட்டமாகப் பார்த்து விட்டு, ''உங்கள் அபிப்பிராயம் என்ன? எல்லோருக்கும் சம்மதம்தானே?'' என்று கேட்டார்.

சபையில் எல்லாருடைய முகத்திலும் திகைப்பின் அறிகுறி காணப்பட்டது. சற்று நேரம் நிசப்தம் குடிகொண்டிருந்தது.



உண்மையென்னவென்றால், அங்கே கூடியிருந்தவர்கள் யாவரும் யுத்தம் சம்பந்தமாக அபிப்பிராயம் கூறுவதற்காக வரவில்லை. மகேந்திர சக்கரவர்த்தியின் விருப்பத்தையும் ஆக்ஞையையும் தெரிந்து கொள்வதற்காகவே அவர்கள் வந்திருந்தார்கள்.

ஒன்பது மாதத்துக்கு முன்னால் சக்கரவர்த்தி வடக்குப் போர்க்களம் சென்றபோது, அவர்கள் மேற்படி கொள்கையையே அனுஷ்டித்துச் சக்கரவர்த்திக்குச் சர்வாதிகாரம் அளித்தார்கள். இப்போதும் அதே உறுதியுடன்தான் சபையில் கூடியிருந்தார்கள்.

விஷயம் இப்படியிருக்க, மாமல்லர் திடீரென்று எதிர்பாராத விதமாக ஒரு பெரிய அபாயகரமான காரியத்தைச் செய்யப் போவதாகச் சொல்லி, அதைப் பற்றி அபிப்பிராயமும் கேட்கவே, எல்லாரும் மனக் குழப்பத்தில் ஆழ்ந்து, இன்னது செய்வதென்று தெரியாமல் சும்மா இருக்கும்படி நேர்ந்தது.

மாமல்லர் எல்லாருடைய முகங்களையும் ஒரு தடவை கண்ணோட்டம் செலுத்திப் பார்த்து விட்டு, ''ஏன் எல்லாரும் மறுமொழி சொல்லாமலிருக்கி

அமரர் கல்கி



தீர்கள்? இது என்ன மௌனம்? உங்கள் முன்னிலையில் சொல்லத் தகாத வார்த்தைகள் ஏதேனும் சொல்லி விட்டேனா? வீர பல்லவ குலத்துக்கு இழுக்குத் தரும் காரியம் எதையேனும் கூறினேனா?'' என்று கம்பீரமாகக் கேட்டார்.

இன்னமும் அச் சபையில் மௌனம் தான் குடிகொண்டிருந்தது. பெரியதொரு தர்மசங்கடத்தில் தாங்கள் அகப்பட்டுக் கொண்டிருப்பதாக ஒவ்வொருவரும் உணர்ந்து, வாய் திறவாமல் இருந்தார்கள்.

''நல்லது, உங்களில் ஒருவரும் ஆட்சேபியாதபடியினால், என்னுடைய யோசனையை ஒப்புக் கொள்கிறீர்கள் என்று ஏற்படுகிறது. சேனாதிபதி! அப்படித் தானே?'' என்று மாமல்லர் சேனாதிபதி கலிப்பகையாரைக் குறிப்பாகப் பார்த்துக் கேட்டார்.

சேனாதிபதி கலிப்பகையார் எழுந்து, ''குமார சக்கரவர்த்தியின் கட்டளை எதுவோ, அதன்படி நடக்க நான் கடமைப் பட்டவன். ஆனால், அது யுக்தமானது என்று என்னால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. மாமல்லர் கூறுவது சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்துக்கு மாறானது. எவ்வளவோ தீர்க்காலோசனையின் பேரில் பல்லவேந்திரர் நமது சைனியத்தைக் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்திருக்கிறார். மகேந்திர சக்கரவர்த்தி கோழை அல்ல; போருக்குப் பயந்தவர் அல்ல. சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்துக்கு மாறாக நாம் எதுவும் செய்வது உசிதமல்ல'' என்றார்.

குமார சக்கரவர்த்தியின் முகத்தில் ஆத்திரம் கொதித்தது.

''சேனாதிபதி! என்னுடைய வீரத் தந்தையைக் கோழை என்றோ பயந்தவர் என்றோ நான் சொன்னேனா? அதைக் காட்டிலும் என் நாவை அறுத்துக் கொள்வேன்! என் தந்தையின் யுத்த தந்திரம் வேறு; என்னுடைய யுத்த தந்திரம் வேறு. அவர் இல்லாத போது என்னுடைய யுத்த தந்திரத்தை அனுசரிக்க எனக்குப் பாத்தியதை உண்டு. சேனாதிபதி! பல்லவ சைனியம் நாளைச் சூரியோதயத்திற்குள் யுத்த சந்நத்தமாகக் கிளம்ப ஆயத்தம் செய்யுங்கள்!''

சேனாதிபதி கலிப்பகையார், சற்றுத் தணிந்த குரலில், ''பல்லவ குமாரரின் தந்தி



ரம் யுத்த தந்திரம் அல்ல; தற்கொலைத் தந்திரம்! வாதாபி சைனியத்தில் ஐந்து லட்சம் போர் வீரர்கள் இருக்கிறார்கள்; பல்லவ வீரர்கள் லட்சம் பேருக்கு மேல் இல்லை'' என்றார்.

மாமல்லர் கண்களில் தீப்பொறி பறக்க விழித்துக் கூறினார் :- ''சேனாதிபதி! புள்ளலூர்ப் போர்க்களத்தில் பல்லவ வீரர் எத்தனை பேர், கங்கபாடி வீரர் எத்தனை



பேர் என்பதை அறிவீரா? ஐம்பதினாயிரம் கங்க வீரர்களைப் புறங்காட்டி ஓடும்படி நமது பதினாயிரம் வீரர்கள் செய்யவில்லையா? போர்க்களத்தில் ஆட்களின் கணக்கா பெரிது? வெற்றியளிப்பது வீரமல்லவா? பல்லவ வீரன் ஒவ்வொருவனும் சளுக்க வீரர் ஒன்பது பேருக்கு ஈடானவன். கலிப்பகையாரே! இதைத் தாங்கள் இன்னும் அறிந்து கொள்ளவில்லையா?''

''வாதாபி சைனியத்தில் ஐந்து லட்சம் வீரர்கள் மட்டுமில்லை; பதினையாயிரம் போர் யானைகள் இருக்கின்றன!'' என்றார் கலிப்பகையார்.

''இருந்தால் என்ன? நமது வீரத் தளபதி பரஞ்சோதியாரின் கை வேலுக்கு அஞ்சி, மதம் பிடித்த யானை இந்தக் காஞ்சி நகரின் வீதிகளில் தெறிகெட்டு ஓடியது நமது சேனாதிபதிக்குத் தெரியாது போலிருக்கிறது. தளபதி பரஞ்சோதியைப் போன்ற ஒரு லட்சம் வீர சிம்மங்கள் பல்லவ சைனியத்தில் இருக்கும் போது, புலிகேசியின் போர் யானைகளுக்கு நாம் ஏன் அஞ்ச வேண்டும்?....''

விவாதம் இவ்விதம் முற்றிக் கொண்டிருப்பதைக் கண்ட முதல் மந்திரி சாரங்க தேவர் பெரிதும் கவலையடைந்தார். பெரியவர் எழுந்து நின்றதும் மாமல்லர் பேச்சை நிறுத்தினார்.

''ஒரு விஷயம் நாங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். சக்கரவர்த்தி இன்னமும் வந்து சேர அவகாசம் இருக்கிறதல்லவா? இந்த விஷயம் கோட்டை வாசற்காவலர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா? சக்கரவர்த்தி இன்றிரவு ஒருவேளை வந்தால், கோட்டைக் கதவைத் தாமதமின்றித் திறந்து விடக் காவலர்கள் ஆயத்தமாக இருக்கிறார்களா?'' என்று முதன் மந்திரி வினவினார்.

அப்போது தளபதி பரஞ்சோதி, ''ஆம்; அப்படித்தான் கட்டளையிட்டிருக்கிறேன். சக்கரவர்த்திப் பெருமான் ஒருவேளை தூதர்கள் மூலமாகச் செய்தி அனுப்பக்கூடுமென்று எதிர்பார்த்து, அதற்கும் தக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்'' என்றார்.

தளபதி பரஞ்சோதி இவ்விதம் சொல்லி வாய் மூடுவதற்குள்ளே, மண்டபத்தின் வாசற் காவலன் ஒருவன் விரைந்து உள்ளே வந்து, ''சக்கரவர்த்தியிடமிருந்து தூதன் ஓலை கொண்டு வந்திருக்கிறான். சிங்க இலச்சினையுடன் வந்திருக்கிறான்!'' என்று தெரிவித்தான்.

இதைக் கேட்ட மாமல்லர் திகைத்துப் போய் நின்றார். சபையில் இருந்த மற்றவர்கள் எல்லாரும், மிகவும் நெருக்கடியான சமயத்தில், தெய்வமே தங்களுடைய துணைக்கு வந்தது என்று எண்ணியவர்களாய், மனத்திற்குள் உற்சாகமடைந்தார்கள்.

ஐம்பத்திரண்டாம் அத்தியாயம்
பயங்கரச் செய்தி

சக்கரவர்த்தியின் தூதன் சபா மண்டபத்துக்குள்ளே பிரவேசித்த போது, சபையில் நிசப்தம் நிலவியது.

வந்தவன் நெடிதுயர்ந்த ஆஜானுபாகுவான தோற்றமளித்தான். போர்க்களத்திலிருந்து நேரடியாக வந்தவனாகக் காணப்பட்டான். அவனது தலையிலும் முகத்திலும் காயங்களுக்குக் கட்டுக்கள் போடப்பட்டிருந்தன. அவன் உடுத்தியிருந்த துணிகள் இரத்தக் கரையினால் சிவந்திருந்தன.

என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறானோ என்ற ஆவலானது, எல்லோருடைய மனத்திலும் குடிகொண்டு, வேறு வகை எண்ணங்களுக்கே இடம் இல்லாமல் செய்தது. சபையிலிருந்த அத்தனை பேரின் கண்களும் இமை கொட்டாமல் அத்தூதனை நோக்கின.

அப்படிப் பார்த்தவர்களில் தளபதி பரஞ்சோதியும் ஒருவர் என்று சொல்ல வேண்டியதில்லை. மற்றவர்களுடைய மனத்தில் குடிகொண்டிருந்த ஆவல், அவருடைய மனத்திலும் இருந்ததாயினும் அதோடு இன்னொரு வியப்பும் அவர் மனத்தில் ஊசலாடியது. அது இத்தூதனை எங்கேயோ பார்த்திருக்கிறோம் என்ற உணர்ச்சிதான்.

தூதன், சபையில் உள்ளவர்களையெல்லாம் ஒரு தடவை சுற்றி வளைத்துப் பார்த்தான். கடைசியில் அவனுடைய கண்கள் குமார சக்கரவர்த்தியின் முகத்திற்கு வந்து, அங்கேயே ஸ்திரமாக நின்றன.

''பல்லவ குமாரா! தங்கள் தந்தையிடமிருந்து மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன், செய்தியை இந்தச் சபையிலேயே சொல்லலாமல்லவா?'' என்று கேட்டான்.

மாமல்லர் முதன் மந்திரியின் முகத்

தைப் பார்த்தார். அந்தக் குறிப்பையறிந்த சாரங்க தேவபட்டர், ''சக்கரவர்த்தியின் செய்தியை இங்கேயுள்ளவர்கள் அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியதுதான்! இங்கேயே தாராளமாகச் சொல்லலாம்'' என்றார்.

''அப்படியானால் கேளுங்கள், நான் கொண்டு வந்திருக்கும் செய்தி மிகப் பயங்கரமானது. ஆயினும் சொல்லியே தீர வேண்டும்... பல்லவ சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி சிறைப்பட்டார்!...''

களங்கமற்ற ஆகாசத்திலிருந்து திடீரென்று பேரிடி விழுந்தது போலிருந்தது, அந்தச் சபையிலிருந்தவர்கள் அனைவருக்கும். சிலர் ''என்ன? என்ன?'' என்று அலறினார்கள். சிலர் ஆசனத்திலிருந்து குதித்து எழுந்தார்கள், சிலர் திறந்த வாய் மூடாமல் திகைத்த பார்வையுடன் தூதனைப் பார்த்தவண்ணமிருந்தார்கள்.

மாமல்லர் பயங்கரமான ஒரு சிரிப்புச் சிரித்தார். அது சபையிலிருந்த அனைவருக்கும் மயிர்க் கூச்சை உண்டாக்கிற்று.

''ச க் க ர வ ர் த் தி சிறைப்பட்டாரா? எப்படி? எப்போது? யார் சிறைப்படுத்தினார்கள்?'' என்று மாமல்லர் கர்ஜித்தார். அவருடைய கரம் தன்னையறியாமல் உடைவாளை உருவியது.

''வாதாபி சைனியத்தின் முன்னணிப் படையினால் சக்கரவர்த்தி சிறைப்படுத்தப் பட்டார். நேற்று மாலையிலேதான்! தெற்கேயிருந்து திரும்பியவர், வாதாபி சைனியத்தின் நிலையை அறிந்து கொள்ளுவதற்காக நேரே வடதிசை சென்றார். போன இடத்தில் எதிர்பாராதவிதமாக வாதாபி வீரர்களால் சிறைப்படுத்தப்பட்டார். பல்லவ குமாரா! சக்கரவர்த்தி என்னிடம் தங்களுக்குச் சொல்லியனுப்பிய செய்தி இதுதான்;- 'என் மகன் தன்னுடைய இணையில்லா வீரத்தைக் காட்ட வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டது; வாதாபி சைனியத்தை முறியடித்துப் புலிகேசியைக் கர்வ பங்கம் செய்து, என்னை விடுதலை செய்ய வேண்டிய பொறுப்பு, என் வீரப் புதல்வனைச் சேர்ந்தது! மாமல்லனுக்கு இது அசாத்தியமான காரியமல்ல!' - இந்தச் செய்தியைத்தான் தங்கள் தந்தையிடமிருந்து கொண்டு வந்தேன்'' என்று கூறி நிறுத்தினான் தூதன்.

மாமல்லர் அப்போது சபையிலிருந்தவர்கள் அனைவரையும் ஒரு தடவை கண்களில் அக்னி ஜ்வாலை எழும்படி பார்த்துவிட்டு, ''சேனாதிபதி! இப்போதாவது நமது படைகளைக் கோட்டைக்கு



அருள்வாக்கு

ஈடுபாடு, சிரத்தை இந்த இரண்டும் இரண்டு நேத்ரங்கள் மாதிரி. சிரத்தை என்றால் ரொம்பவும் அக்கறையாக, கவனமாகச் செய்வது என்று பொதுவில் அர்த்தம் செய்து கொள்கிறோம். கவனக் குறைவாக இருந்தால், 'அசிரத்தையாயிருக்கிறான்' என்கிறோம். சிரத்தை என்றால் நம்பிக்கை, Faith என்று முக்யமான அர்த்தம். புத்தி பூர்வமாக நிரூபிக்கக் கூடியவற்றிலும், பிரத்யக்ஷமாகப் பலனைத் தருவதிலும் 'நம்பிக்கை' என்ற ஒன்றுக்கு இடமில்லை. இவற்றின் கீழ் வராத அதிருஷ்ட, ஆத்மார்த்த விஷயங்களில் பெரியோர்கள் - மெய்ப் பொருளைக் கண்டுணர்ந்த முன்னோர்கள் - ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற ஆசார, அநுஷ்டானங்களில் நம்பிக்கை ரொம்பவும் அவசியம். பகவான் (கீதையில்) 'ச்ரத்தாவான் லபதே ஞானம்' - சிரத்தையுள்ளவன்தான் ஆத்மாவைப் பற்றிய அறிவு பெறுகிறான் - என்கிறார். 'ச்ராத்தம்' (ச்ரார்த்தம் என்று தப்பாக 'ர்' போட்டுச் சொல்கிறார்களே, அது) என்றாலே ச்ரத்தையோடு செய்யப்படுவது என்றுதான் அர்த்தம். காரணம் கேட்காமல், நம்பிச் செய்ய வேண்டும். ஸயன்ஸ்படி ஸரியாய் வருகிறது. மனோதத்துவத்துக்கு ஏற்றதாயிருக்கிறது. ஆரோக்யத்துக்கு உகந்ததாயிருக்கிறது என்றெல்லாம் காரணம் பார்த்துக் கொண்டு ஆசாரங்களை ஏற்பது என்றால், அநேக ஆசாரங்களுக்கு இன்று நாமுள்ள அறிவு வளர்ச்சி நிலையில் இப்படிப்பட்ட காரணங்களைக் காட்ட முடியாமலும் இருக்கும். அதனால் அவற்றைத் தள்ளி விடுவது என்றால் ஒரே அநாசாரத்தில்தான் முடியும். சிலதைப் பண்ணுவது, சிலதை விடுவது என்பது பாதிக் கிணறு தாண்டுகிற கதைதான்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



வெளியே கொண்டு போகச் சம்மதிப்பீரா? மந்திரிகளும் அமைச்சர்களும் என்ன சொல்கிறீர்கள்? கோட்டத் தலைவர்களின் அபிப்பிராயம் என்ன?'' என்று இடிமுழக்கம் போன்ற குரலில் கேட்டு விட்டு, தமக்குப் பின்னால் நின்ற தளபதி பரஞ்சோதியைத் திரும்பிப் பார்த்து, ''தளபதி! நீர்கூட ஏன் இப்படி ஸ்தம்பித்து நிற்கிறீர்? எல்லாரும் அசையாத ஜடப்பொருள்கள் ஆகி விட்டீர்களா?'' என்றார்.

அப்போது முதல் அமைச்சர் எழுந்து, ''இந்தத் தூதன் சொல்வது உண்மை என்பதற்கு என்ன ஆதாரம்?'' என்று வினவினார்.

தூதன் உடனே கையிலிருந்த சிங்க இலச்சினையைக் காட்டி, ''இதுதான் ஆதாரம்; என் முகத்திலும் உடம்பிலும் உள்ள காயங்கள்தான் அத்தாட்சி!'' என்றான்.

''ஆஹா! மகேந்திர சக்கரவர்த்தி பகைவர்களின் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறார். நீங்கள் ஆதாரம் கேட்டுக் கொண்டு காலங் கடத்துகிறீர்கள் அல்லவா! தளபதி! வாரும், நாம் போகலாம்!'' என்று மாமல்லர் பரஞ்சோதியைப் பார்த்துச் சொன்னார்.

ஆனால், தளபதி பரஞ்சோதி ஏதோ ஒரு மனக் குழப்பத்தில் ஆழ்ந்தவராய்க் காயக் கட்டுக்களுடன் நெடிதுயர்ந்து நின்ற தூதனின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

முதன் மந்திரி சாரங்கதேவபட்டர், ''இந்தத் தூதனை இதற்கு முன்னால் நம்மில் யாராவது பார்த்ததுண்டா? தூதா! நீ யார்?'' என்று கேட்க, தூதன் கூறினான்:-

''நான் யாரா? பல்லவ சக்கரவர்த்தியின் அந்தரங்க ஒற்றன். பல்லவ ஒற்றர் படையில் சத்ருக்னருக்கு அடுத்த பதவி வகிப்பவன். தளபதி பரஞ்சோதி என்னை அடிக்கடி பார்த்திருக்கிறார்! தளபதி! என்னைத் தெரியவில்லையா? இந்தக் காஞ்சி நகருக்கு உம்மை அழைத்து வந்த நாகநந்தி நான்தான் என்று தெரியவில்லையா? ஆயனரும் அவர் மகளும் தெரிந்தோ தெரியாமலோ வாதாபி அரசனுக்கு ஒற்று வேலை செய்வதாகச் சந்தேகித்துச் சக்கரவர்த்தி என்னை அவர்களுக்குக் காவலாகப் போட்டார். ஆயனர் புலிகேசிக்குக் கொடுத்த இரகசிய ஓலையை எடுத்துக் கொண்டு, நாகார்ஜுன மலைக்கு நீர் கிளம்பிச் சென்றீர். சக்கரவர்த்திக்கு அதை நான் தெரியப்படுத்தியதன் பேரில், அந்த ஓலையைச் சக்கரவர்த்தி உம்மிடமிருந்து பறித்துக் கொண்டார். தளபதி! இதெல்லாம் உண்மையா, இல்லையா?'' என்று தூதன் கம்பீரமாகக் கேட்டான்.

தளபதி பரஞ்சோதியின் தலை சுழன்றது. சிற்சில விஷயங்களை எண்ணிப் பார்க்கும் போது, ஒருவேளை அத் தூதன் கூறியது உண்மையாயிருக்கலாமென்று தோன்றியது.

தூதன் மேலும் சொன்னான் :- ''ஆயனருடன் குண்டோதரன் என்ற பெயருடன் வாதாபி ஒற்றன் ஒருவன் இருந்து வந்தான். அவன் நேற்று ஆயனருடைய செய்தியுடன் வாதாபி சைனியத்தைச் சந்திப்பதற்காகச் சென்றான். அவனைத் தடுப்பதற்காகச் சக்கரவர்த்தியும் நானும் தொடர்ந்து போன போது, எதிர்பாராதவிதமாகச் சளுக்க வீரர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டார்கள். கடவுள் அருளால் நான் தப்பி வந்தேன். அவ்வளவுதான் விஷயம்; சக்கரவர்த்தி



இன்னும் சில பணிகளை எனக்கு இட்டிருக்கிறார். அவற்றை நிறைவேற்றுவதற்கு நான் சத்ருக்னரைத் தேடிப் போக வேண்டும். விடை கொடுங்கள்! நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். நன்கு ஆலோசித்து எது உசிதமோ அவ்விதம் செய்யுங்கள்!''



இவ்வாறு கூறி விட்டு, தூதன் சபா மண்டபத்தை விட்டு வெளியே சென்றான். மேலும் அவனை ஏதேனும் கேட்கவோ, அவனைத் தடுத்து நிறுத்தவோ, யாருக்கும் தோன்றவில்லை.

சபையிலிருந்த அனைவரும் கல்லாய்ச் சமைந்திருந்தார்கள்.

மாமல்லரின் நெஞ்சில் ஆயிரந் தேள்கள் கொட்டிக் கொண்டிருந்தன. ஆகா! ஆயனரும் அவர் மகளும் வாதாபிக்கு ஒற்று வேலை செய்கிறார்களா? அப்படிப்பட்டவர்களையா நாம் வெள்ளத்திலிருந்து காப்பாற்றினோம்? அந்தச் சிவகாமியிடமா நாம் எல்லையில்லாக் காதல் வைத்தோம்? அவர்களாலேயா இப்பொழுது மகேந்திர பல்லவர் பகைவர்களிடம் சிறைப்பட்டிருக்கிறார்?...

அந்தச் சபையில் இருந்தவர்களில் அப்போது மாமல்லரின் மன வேதனையை அறிந்து கொள்ளக்கூடியவர் தளபதி பரஞ்சோதி ஒருவர்தான் இருந்தார். அவர் மாமல்லரின் கரத்தைப் பற்றிக் கொண்டு, ''இன்னும் என்ன யோசனை! வாருங்கள், போர்க்களத்துக்குப் புறப்படலாம்! அந்த வாதாபி ராட்சதர்களை முறியடித்து நிர்மூலம் செய்து விட்டுச் சக்கரவர்த்தியை மீட்டுக் கொண்டு வரலாம்! மாமல்லரே! புள்ளலூர்ச் சண்டையை நினைவு கூருங்கள்!'' என்றார்.

இதைக் கேட்ட சேனாதிபதி கலிப்பகை யாரும் பிரமையிலிருந்து விடுபட்டவராய், ''ஆம்; தளபதி கூறுவது நியாயந்தான். இனி யோசிப்பதற்கு ஒன்றும் இல்லை. படைகள் புறப்பட உடனே கட்டளையிடுகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு எழுந்தார்.

சபையிலிருந்த அத்தனை பேரும் ஏக காலத்தில் எழுந்து நின்று, ''மகேந்திர பல்லவர் வாழ்க!'' ''அரக்கன் புலிகேசி அழிக!'' என்று பலவகையான வீர கோஷங்களைச் செய்தார்கள்.

இந்த கோஷங்களுக்கிடையில் சபா மண்டபத்தின் வாசலிலும் ஏதோ குழப்பமான சப்தங்கள் எழுந்தன. குதிரையின் காலடிச் சப்தம், வேல்களும் வாள்களும் உராயும் சப்தம், அதிகாரக் குரலில் யாரோ கட்டளையிடும் சப்தம், தடதடவென்று பலர் ஓடுகிற சப்தம் - இவை எல்லாம் கலந்து வந்தன.

ஆம்; அச் சமயத்தில் சபா மண்டபத்தின் வாசலில் ஒரு முக்கியமான சம்பவம் நடந்து கொண்டுதானிருந்தது. சக்கரவர்த்தி சிறைப்பட்ட செய்தியைக் கொண்டு வந்த தூதன் மண்டபத்தின் வாசலுக்கு வந்த போது, அவ்விடம் குதிரை மீது ஆரோகணித்தவராய்ச் சாக்ஷாத் மகேந்திர பல்லவரே வந்து சேர்ந்தார். மண்டபத்தின் வாசலில் காவல் செய்த வீரர்களைப் பார்த்து, அந்தத் தூதனைப் பிடித்துச் சிறைப்படுத்தும்படி சக்கரவர்த்தி கட்டளையிட, வீரர்கள் அக்கணமே அவனை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டார்கள்!

(தொடரும்)

ஜோசியர் : ''உங்களோட ராசிக்குப் பக்கத்துத் தெருவுல, ஏழாம் நம்பர் வீட்டுப் பொண்ணு பொருத்தமா இருப்பா...''

ஜோசியம் பார்க்க வந்தவர் : ''அந்தப் பொண்ணோட அப்பா யாரு?''

ஜோசியர் : ''ஹி... ஹி... நான்தான்!''

- செங்குன்றம் ரமேஷ்ராம்.





ருசிக்குத் தக்கபடி...

அலுவலகம் விட்டு அசோக் வந்த போது, ராதா அழுது கொண்டிருந்ததைக் கவனித்தான்.

''என்ன ராதா... என்னாச்சு... உடம்பு சரியில்லையா...?'' எனப் பதற்றத்துடன் விசாரித்தான்.

அவள் அவனுக்குப் பதிலெதுவும் சொல்லாமல், குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்.

அசோக் - ராதா திருமணம் சமீபத்தில் தான் முடிந்திருந்தது. அசோக்கிற்குச் சுமா ரான வருமானம்தான். ஆனாலும் போகப் போகப் பதவி உயர்வும், வருமான உயர் வும் கிடைக்க வாய்ப்புள்ளது.

அவனுக்கு ஒரு சந்தேகம், அம்மா, அப்பா, தம்பி, தங்கைகள் என உறவைப் பிரிந்து வந்துள்ளதால், அவர்கள் ஞாபக மாய் அவள் அழுகிறாளோ என்று...!

அவன் அவளை நெருங்கி, அவள் தோளைப் பற்றினான்.

அவள் அவனை உதறினாள்.

வியப்பு மேலிட அவளை நோக்கி னான்! ''என்ன? எதுக்காக.. என் மீது உனக்கு இவ்வளவு கோபம்?'' - தவிப் புடன் கேட்டான்.

அவள் கண்ணீருடன் எழுந்து சமைய

லறைப் பக்கம் சென்று விட்டாள். விட்டுப் பிடிக்கலாம் என அவன் நினைத்தான்.

இரவு தனியறையில் கோரைப் பாயில் அவள் கூந்தலை வருடிக் கொண்டே, ''என்ன ராதா... உம் மனசுல என்ன இருக்குன்னு சொன்னாத்தானே புரியும்.. உன் விருப்பப்படிதான் நாலும் நடக்கணும்னு ஆசைப்படறேன்....'' என்றான்.

அவள் சிறிது தயக்கத்திற்குப் பிறகு, ''நம்மைச் சுத்திக் குடியிருக்கிறவங்க எல்லோருமே ரொம்ப வசதியானவங்க. எல்லார் வீட்லேயும் வீடியோ, ஃபிரிஜ், டெலிபோன்னு எல்லா வசதியும் நிரம்பி வழியுது...''

''இதோ பாரு ராதா, விரலுக்குத் தகுந்த வீக்கம் வேணும்னு பெரியவங்க சொல்வாங்க...''

''அவசரப்படுறீங்களே... முழுக்க என்னைச் சொல்ல விடுங்க...''

''சரி சொல்லு.''

''அதனால, என்னால அக்கம் பக்கத்துல நெருங்கிப் பழக முடியலை... எல்லார்கிட்டேயும் பணக்காரச் செருக்கு இருக்கு... கர்வமாப் பார்க்கிறாங்க... நட்பு முறையிலே பழக இங்கு யாரும் எனக்குக் கிடைக்கலே...''

''அது மனுஷங்க இயல்புதான் ராதா.''

''எனக்கும் புரியுது... ஆனா உறவு ஜனங்களை விட்டுட்டுத் தனியா வந்து இருக்கிற இடத்திலே, அக்கம் பக்கத்துல உள்ளவங்க நட்பா, சினேகிதமா, ஆசையாப் பழகினா எவ்வளவு சுகமாயிருக்கும்...''

''உன் நிலை எனக்குப் புரியுது... ஆனா மனிதர்கள் எங்கேயும் ஒண்ணுதான். நீ ஊரிலிருந்து தம்பி அல்லது தங்கையையாவது வந்து கொஞ்ச நாள் தங்கும்படி லெட்டர் போடு...''

''அவங்கள்ளாம் படிக்கிறாங்க... என் கூட வந்து தங்க முடியாது...''

''அப்படின்னா நீ வேணா அம்மா வீட்டுக்குப் போய்த் தங்கிட்டு வா...''

''அப்புறம் சாப்பாட்டுக்கு என்ன செய்வீங்க...? அதெல்லாம் வேணாம்...''

''சரி என்னதான் பண்றது?''

''நாம வேற இடத்துக்கு மாறிடலாங்க...''

''சரி.. பார்க்கிறேன்.''

''சாதாரணமானவங்க வசிக்கிற பகுதியிலே நாம போய்க் குடியிருந்தோம்னா அக்கம் பக்கம் உள்ளவங்க ஒரே குடும்பமா, ஒண்ணாச் சினிமாவுக்குப் போயி, ஒருத்தர் வாங்கற பத்திரிகையை அடுத்தவங்க இரவல் வாங்கிப் படிச்சிக்கிட்டு.. தனிமையில்லாம சந்தோஷமா இருக்கலாங்க...''

''சரி... வேற வீடு பார்க்கலாம்'' என்றான்.

சொன்னது போலவே சுமாரான நடுத்தரத்து ஆசாமிகள் வசிக்கிற பகுதியாகப் பார்த்து வீடு பிடித்தான்.

வீட்டை விட அக்கம் பக்கம் பிடித்துப் போயிற்று.

எல்லோருக்கும் சைக்கிளைத் தவிர வேறு வாகனமில்லை. டெலிபோன் கம்பங்கள் இன்னும் அந்தத் தெருவுக்குள்ளேயே நுழையவில்லை!

ராதா மகிழ்ந்து போனாள்.

''எதிர் வீட்டு மாலதியக்கா, பக்கத்து வீட்டுச் சுமதியக்கா, எல்லாரும் எப்போதும் நம்ம வீட்ல வந்து உட்கார்ந்து ஊர்க்கதை பேசறாங்க.. தனிமைங்கறதே என்னன்னு எனக்கு மறந்துப் போயிடுச்சு...'' என்றாள்.

எப்படியோ அவள் சந்தோஷமாக இருந்தாலே போதும் என நினைத்தான்.

அசோக்கிற்குப் பதவி உயர்வு கிடைக்கவே வருமானமும் சற்று அதிகரித்தது.

ராதா, ''ஏங்க நாமளும் கிரைண்டர் வாங்கிடலாங்க...'' என்றாள்.

தவணை முறையில் கிரைண்டர் வாங்கப்பட்டது.

ராதா மகிழ்ச்சியின் உச்சத்திலிருந்தாள். அக்கம் பக்கத்துப் பெண்கள் வந்து பார்த்தார்கள்.

சில நாட்கள் சென்றன.

அசோக் அலுவலகம் விட்டு வந்த போது ராதா அழுது கொண்டிருந்தாள்.

புரியாமல் விசாரித்தான்.

''இதோப் பாருங்க... நாம வேறிடம் போயிடலாம்...''

''என்ன ராதா என்ன பிரச்னை?''

''அக்கம் பக்கம் சினேகிதமாப் பழகினது தப்பாப் போயிடுச்சு. எல்லோரும் ஓசியிலேயே மாவரைச்சுக்கணும்னு நினைக்கிறாங்க. மறுக்கவும் முடியலை.. ஏதாவது சொன்னா, ஆமா இவ தன்கிட்டதான் இருக்குன்னு அலட்டிக்கிறான்னு என் காதுபடவே பேசறாங்க... நாம கொஞ்சம் வசதியான இடமாப் பார்த்துப் போயிடலாம். அப்பத்தான் டீ.வி., ஃபிரிஜ்ன்னு எது வாங்கினாலும் யாரும் அதைக் கண்டுக்க மாட்டாங்க...'' என்றாள்.

ஆத்மநாதா

2

சென்ற வாரம்....

மனோஜும் ஷண்பேகரும் வள்ளிக்குப்பம் என்கிற கிராமத்துக்கு, ஒரு நவீன விஞ்ஞானக் கருவியை நிறுவ, பம்பாயிலிருந்து கிளம்பு முன், மனோஜின் கல்யாணத்தை ஒத்திப் போடுவது பிரச்னையாகிறது...

''ஓடிப் போவதா? கோழைத் தனம்...'' என்றான் மனோஜ்.

''வேறு ஏதும் கல்யாணத்திலிருந்து தப்பிக்க உனக்கு உபாயம் இல்லை.''

''கல்யாணம் செய்து கொண்டு விடுவதுதான் உத்தமம் என்று தோன்றுகிறது.''

''மனோஜ், கல்யாணம் என்பது ஆரம்ப நாட்களில் ரொம்பத் தொந்தரவான, கவனம் கலைக்கும் சமாசாரம். புதுசாகக் கிடைத்த பெண்ணைப் படிப்படியாகக்



கம்ப்யூட்டர் கிராமம்

கண்டுபிடிக்கும் பரிசோதனை. உன் விழிப்புக் கணங்கள் அனைத்தையும் ஆக்கிரமிக்கும் அப்ஸெஷன். அதிகமாகக் கொஞ்ச வேண்டும். அவளையே மணிக் கணக்காகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். அடுத்த ரூமிலிருந்து கொண்டே கடிதம் எழுதிக் கொள்ள வேண்டும். அதெல்லாம் பண்ணி விட்டு ஸாட்டிலைட் எர்த் ஸ்டேஷன் நிறுவ உனக்கு எங்கே சமயம் கிட்டும்?''

மனோஜ் ஷண்பேகரை முறைத்துப் பார்த்து, ''உன்னைப் போல 'ஸினிக்'கை நான் பார்த்ததில்லை. எத்தனை கல்யாணம் செய்திருக்கிறாய்?''

''எல்லாம் புத்தக ஞானம். நாம் எல்லோருமே ஏதாவது ஒரு சினிமாவில் பார்த்ததைத்தான் திரும்ப வாழ்கிறோம் என்பது என் சித்தாந்தங்களில் ஒன்று. மேலும் நண்பர்களிடம் பார்த்த அனுபவம். எனக்கென்னவோ இந்தக் கல்யாணத் தீர்மானமே தப்பு என்பேன். இன்றைக்கெல்லாம் உனக்கு எத்தனை வயசு?''

மறுபடி போன் வந்தது. இரானி ரெஸ்டாரண்டில் இருந்து.

''போன் பேசியே வாழ்நாள் கழிந்து விடப் போகிறது'' என்று ஷண்பேகர் சொன்னதை நிராகரித்துக் கீழே போனான்.



சுஜாதா

ப்ரமிளாதான். ''மனோஜ் நாளைக்கு வெடிங் ஸாரிஸ் எல்லாம் வாங்கணும். உனக்கு ஸூட் தைக்கணும். அம்மா வரச் சொன்னா.''

''ப்ரமிளா, அப்பாகிட்ட சொன்னியா?''

''என்ன?''

''கல்யாணம் நடக்கறதைப் பத்தி?''

''அம்மா சொன்னா. ஒக்கே, சரின்னாரு.''

''உங்கப்பாவுக்கு உங்க குடும்பத்தில வாய்ஸே கிடையாதா?''

''அப்பா ஒண்ணும் சொல்லாது. அம்மாதான் எல்லாம்.''

''அம்மா பக்கத்தில இருக்காளா?''

''கிச்சன்ல இருக்கா.''

''ப்ரமிளா யோசிச்சுப் பாரு. கல்யாணத்தை மூணு மாசம் தள்ளிப் போடறது எல்லாருக்கும் நல்லது. உன் பி. எஸ்ஸி. படிப்பு முடியும்.''

''புக்ஸ் எல்லாம் எடுத்துண்டு போகச் சொன்னா.''

''எங்கே?'' என்றான் கலவரத்துடன்.

''உன்னோட கிராமத்துக்கு. நீதானே எனக்குப் பாடம் சொல்லித் தரப் போறே. பிஸிக்ஸ் படிச்சுக்கிட்டே ஹனிமூன்!''

''கல்யாணம் பண்ணிக்கிட்டு என் கூட வரப் போறியா?''

''ஆமாம். அதானே நீயும் சொன்னது.''

''நான் சொன்னது கல்யாணமே இப்ப வேண்டாம்னு.''

''இல்லை மனோஜ். கல்யாணம் நடந்தே ஆகணும். இல்லைன்னா அம்மா காதைப் புடிச்சுத் திருகிடுவா.''

''அவ்வளவுதான்னா, பரவாயில்லையே! திருகிக்கலாமே. ப்ரமிளா, கல்யாணம்ங்கறது பெரிய விஷயம். இட்ஸ் எ சீரியஸ் மேட்டர்.''

''ஆமாம்.''

''என்ன ஆமாம்?''

''மனோஜ் டு யு லைக் ப்ரு.''

முதல் முறையாக ஷண்பேகர் சொன்னதில் நியாயமிருப்பதாக - எரிச்சலாக உணர்ந்தான். தீர்மானம் தப்பு!

திரும்ப ரூமுக்கு வந்த போது, ஷண்பேகர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். சன்னல் வழியே எலக்ட்ரிக் ரயில் சப்தம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது. பம்பாய்த் தெருக்களை, ஸோடியம் நனைத்திருந்தது. ப்ளாட்பாரத்தில் தூங்குபவர் தத்தம் அட்டைப் படுக்கைகளைச் சேகரித்துக் கொண்டிருந்தார்கள்.

ஷண்பேகரின் சிகரெட் ஒன்றைப் பற்ற

வைத்துக் கொண்டான். எப்போதாவது தான் அவன் சிகரெட் பிடிப்பான். அவசரப்பட்டு விட்டோம். எல்லாமே ஒருவிதமான கண்ணி வைத்த பொறி. முதன் முதலாக ப்ரமிளாவை ஒரு பார்ட்டியில் பார்த்துத் தலைகால் தெரியாது, தேன் தடவிய கனவில் மிதப்பது போல உணர்ந்தது; அவள் அம்மா தன் புருஷனின் விசிட்டிங் கார்டைக் கொடுத்துத் தங்கள் வீட்டுக்கு வந்தே ஆக வேண்டும் என்றது; அத்தோடு வெட்டாமல், அங்கே போனது; போனதும் அவர்கள் வீட்டு நாய் டோட்டு, ப்ரமிளாவின் தம்பி அரவிந்த், ப்ரமிளாவின் அப்பா... எல்லாருக்கும் அறிமுகமான அப்புறம், ப்ரமிளாவை, முக்கியமாக அவள் இளமையையும் பழகு கலபத்தையும் பார்த்து நிமிஷத்தில் காதல் வசப்பட்டது! காதல்தானே பெயர்? இன்ஃபாச்சுவேஷன் என்பான் ஷண்பேகர். ''ஏதோ ஹார்மோன் சமாசாரம்!''

அப்புறம் தினம் எட்டு முறை போன் பண்ணியது. முதல் மாட்டினி சினிமா, முதல் தொடுகை, இருட்டில் விலக்கிய கைகள், பிக்னிக். அப்புறம் தன் அப்பா, அம்மாவுக்கு எழுதியது. அம்மா வந்து பெண் பார்க்க விரும்புகிறாள் என்ற அப்பாவின் கடுதாசி வருவதற்கு முன்பேயே நிச்சயதார்த்தம் மோதிரம். அப்பாவின் தார்மீக கோபமுள்ள கடிதம். பைத்தியம் நான்! அவசரப்பட்டுப் பொறிக்குள் நுழைந்து, நானே அதை அடைத்துக் கொண்டு விட்டேன்! ப்ரமிளாவுக்கு என்ன குறை? அழகான தோற்றமும் நடத்தையும் போதுமா? மனைவி என்பதற்கு வேறு ஏதாவது வேண்டுமா?

முதலில், மனைவியே வேண்டுமா என்கிற ஷண்பேகரின் கேள்விக்கு இன்னும் பதில் கிடைக்கவில்லை.

காலையில் எழுந்து ஷண்பேகரை வழக்கம்போல எழுப்பி, டீ போட்டுக் கொடுத்தான்.

''மைகாட் நீ கல்யாணம் செய்து கொண்டு போய் விட்டால் எனக்கு யார் டீ கொடுப்பார்கள்?''

''ஷண் எனக்கு ஒரு வழி சொல்லு.''

''காலரா வந்தால்தான் தடுக்க முடியும். லவ் இன் தி மிட்ஸ்ட் ஆஃப் காலரா என்று கார்ஸியாஷின் ஒரு பிரசித்தமான தென் அமெரிக்க நாவல் உண்டு.''

''பி ஸீரியஸ் மேன்.''

ஷண்பேகர் அவனை நிதானமாகப் பார்த்து ''இது உன் பிரச்னை. நீ தீர்க்க வேண்டியது. எல்லாவற்றையும் போட்டுக் குழப்பி விட்டு, இப்போது என்னைக் கேட்கிறாய். நீ ப்ரமிளாவுடன் அரோரா தியேட்டரில் போய் மார்னிங் ஷோ பார்த்தாயே அப்போதே உன் திருமணம் தீர்மானிக்கப் பட்டு விட்டது. பம்பாய்க் கல்யாணங்கள் தியேட்டர் இருட்டுக்களில்தான் நிர்ணயிக்கப்படுகின்றன; சொர்க்கத்தில் இல்லை.''

கொஞ்ச நேரம் அவனை வெறித்துப் பார்த்தான் மனோஜ்.

''உனக்கு வாழ்வில் புனிதமானது ஏதும் கிடையாதா?''

''டீ நன்றாக இருக்கிறது. ப்ரமிளாவிடம் சொல்ல வேண்டும். நீ நன்றாக டீ போடுவாய் என்று.''

பஸ்ஸில் பலார்ட்பியர் ஆபீசுக்கு போகும் போது யோசித்தான். பாஸ் ராமச்சந்திரமூர்த்தியைக் கேட்டு விடலாம். அவர் சொல்படி செய்யலாம்.

ராமச்சந்திரமூர்த்தி மார்னிங் மீட்டிங் முடித்து வர அரைமணி ஆகி விட்டது.

''என்ன மனோஜ் எல்லாம் தயாரா? எக்விப்மெண்ட் எல்லாம் மெட்ராஸிலிருந்து தனிப்பட்ட லாரியில் போகிறது. நீயோ அல்லது ஷண்பேகரோ கூடப் போவதும் நல்லது. எனக்கு எல். என். ஏ. ஃப்ரண்ட் எண்ட் சமாசாரங்கள் ஒழுங்காகப் போய்ச் சேர வேண்டும். ஒரு கேலியம் ஆர்ஸனைடு டயோடு எத்தனை விலை தெரியுமா?''

''எல்லாம் பார்த்துக் கொள்கிறேன் ஸார்.''

''ஏக்டிவிட்டி சார்ட் இன்னும் தர



''தாத்தா நீங்க என் கையைப் பிடிச்சிண்டு வரணும், ஓரமா நடக்கணும், ரெண்டு பக்கமும் பார்த்துண்டு ரோடை ஜாக்கிரதையா க்ராஸ் பண்ணணும், அப்பத்தான் உங்களை ஸ்கூலுக்குத் துணைக்கு அழைச்சுண்டு போவேன்.''

வில்லை நீ...''

''கொடுத்து விடுகிறேன்.''

அப்புறம் இதோ பார், ஸ்காட்டர் ப்ரொஃபைல், அந்த பிரதேசத்தின் மழை அளவு. ஆகஸ்டில் கொஞ்சம் பெய்யும்.''

''ஸார் அந்தக் கிராமம் எங்கிருக்கிறது என்றே இன்னும் தெரியவில்லை.''

''உங்களைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்க வேண்டியது பி.ஆர். விகவின் வேலை. கவலைப்படாதே.''

''ஸார் மற்றொரு விஷயம்.''

''என்ன?''

''எனக்குத் திருமணம் நிச்சயமாகி...''

''தெரியும். அதைத்தான் ஒத்திப் போட்டு விட்டாய் என்று ஷண்பேகர் சொன்னான். மூணு மாசம் பல்லைக் கடித்துக் கொண்டு...''

''பெண் வீட்டார் சம்மதிக்க மாட்டேன் என்கிறார்கள்.''

''அப்ப, கல்யாணத்தைக் கான்ஸல் பண்ணிவிடு.''

''அத்தனை சுலபம் இல்லை அது.''

''ஓக்! இது உன் ப்ராப்ளம். கல்யாணம் பண்ணிக் கொள். ஆனால் ஒரு காரியம் செய்யாதே. சைட்டுக்கு அந்தப் பெண்ணை அழைத்துச் செல்லாதே. பெரிய பிரச்னை யாகி விடும்.''

தன் சீட்டுக்கு மனோஜ் திரும்பி வந்த போது ப்ரமிளாவிடமிருந்து போன் வந்ததாகத் தகவல் வைத்திருந்தது.

ஷண்பேகர் டெர்மினலில் மும்முரமாக இருந்தான். ''ஆக்டிவிட்டி சார்ட் கேட்டாயே இதுதான்'' என்றான். ''லேசரில் அடித்துக் கொடுத்து விடுகிறேன். மூர்த்திக்குத் திருப்தியாகி விடும்.''

சார்ட்டை மிகத் திறமையாகத் தயாரித்திருந்தான் ஷண்பேகர்.

''குட், வெரி குட்.''

''இப்போதே பாஸ் போலப் பேசுகிறாய். ப்ரமோஷன் வரப் போகிறதா?''

''ஷண்பேகர், சில சமயம் நீ பேசுவது எத்தனை எரிச்சலாக வருகிறது தெரியுமா?''

''டயபடிஸ்க்கு அடுத்து எரிச்சல் தருவது, உண்மை' என்று ஒரு கிரேக்க ஞானி சொன்னார்.''

கிரேக்கர் காலத்தில் டயபடிஸ் இருந்திருக்கிறதா?''

''ஏன் இல்லை? ஒரு எகிப்திய ஃபரோவா இளவரசன் டயபடிஸில் இறந்திருக்கிறான் என்று மம்மிகளை வைத்துக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.''

ரிஸப்ஷனில் அவனைப் பார்க்க யாரோ வந்திருப்பதாகத் தகவல் வந்து



''இதுவரை பார்த்த ஏழு பெண்ணையும் எங்க அம்மாவுக்குப் பிடிக்கலை!''

''உங்க அம்மா மாதிரியே ஒரு பெண்ணைப் பார்க்கறதுதானே!''

''பார்த்தோம். எங்க அப்பாவுக்குப் பிடிக்கலை!''

- ஞா. ஞானமுத்து.

போய்ப் பார்த்தால் ப்ரமிளாவின் அம்மா.

''என்ன இங்கேயே வந்து விட்டீர்கள்?''

''அதிகம் டயம் இல்லை. கல்யாண அழைப்புக் கடிதத்துக்கு ப்ரூஃப் கொடுத்து விட்டுப் போகிறேன். அதைத் திருத்தி வை. சாயங்காலம் டிரைவரை அனுப்பி விடுகிறேன்! அப்புறம் டெரிகாட்டில் உனக்கு க்ரே ஸூட் எடுத்திருக்கிறோம். ஸ்டீல் கிரே 'சிராக்தின்' ஷர்ட் எடுத்தாகி விட்டது. மோதிரத்துக்கு நூல் அளவு வேண்டும்.''

''கல்யாணம் பண்ணுவதாக நிச்சயித்து விட்டீர்களா?''

''பின்னே?''

''நான் கல்யாணம் ஆன மறு தினமே டூர் போக வேண்டுமே?''

''இதைப் பற்றித்தான் உன் பாஸிடம் பேச வந்திருக்கிறேன்.''

''வேண்டாம் நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''கல்யாணம் ஆன மறுதினம் மகாபலேஷ்வர் போகிறீர்கள், இரண்டு பேரும். அங்கே ஒரு வாரம். கோவாவில் ஒரு வாரம். அதன்பின்தான் மறுபடி வேலையில் ஜாய்ன் பண்ணுகிறீர்கள். என் புருஷனுக்கு கமிஷனர், ஒரு ஐ. ஏ. எஸ். ஆபீசரைத் தெரியும். அவரிடம் சொல்லி உங்கள் பாஸிடம் சொல்லச் சொல்கிறேன்.''

''வேண்டாம்'' என்றான் கலவரத்துடன்.

வயிற்றில் புளியைக் கரைத்தது என்பார்களே இதுதானோ?

(தொடரும்)

அஸ்தமிக்கிற உதயங்கள்

பசேலென்று, வட்ட வடிவமாய் வேலிகளின் தலைகளின் மீது முஷ்டைக் கொடிகளின் இலைகள் படர்ந்து கிடந்தன. பார்த்துக் கொண்டேயிருக்கலாம்! அத்தனை அழகு!

ஆனால், சொரிமுத்து பார்த்துக் கொண்டிருக்கவில்லை. மிகவும் சந்தோஷத்துடன் துரட்டிக் கொம்பைப் போட்டு இழுத்து இழுத்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான்.

அவனது சந்தோஷத்தை விடவும் அதிகமான சந்தோஷமுடன் அந்தக் குட்டி ஆடு, தனது தலையை முன்னும் பின்னுமாக ஆட்டிக் கொண்டு, முஷ்டை இலைகளைச் சுவைத்துக் கொண்டிருந்தது. அது தலையை அசைக்கிறபோது, அதன் கழுத்திலே கட்டப் பெற்றிருந்த சிறிய தானசதங்கை மணியும் குலுங்கிக் குலுங்கி ஓசையை எழுப்பியது..

''மூதிக்கு முஷ்டை இலைன்னா ஏகப்பட்ட பிரியம். திங்கிறதைப் பாரு அவுக்கு, அவுக்குன்னு...'' என்று கூறிக் கொண்டே இலை பறித்துப் போட்டான்.

எல்லாம் இன்னும் நான்கு மாத



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - '91
ரூ. 1,000
இரண்டாம் பரிசுக் கதை

காலத்திற்குத்தான். அப்புறம் இவனுக்கும் இந்த ஆட்டுக் குட்டிக்கும் ஒரு பந்தமும் இல்லாமல் போய் விடும்.

அப்போது அவன் ஆறாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான்.

''ஏலே சொரிமுத்து, இன்னம் ரெண்டு வருசத்துல நீ ஐஸ்கூலு போகணுமில்லால! அதுக்கு உண்டான ரூவா வேணும்லே. நெறைய நோட்டுப் பொஸ்தவம் வாங்கணும். யூனிபார்ம் வாங்கணும், பீஸ்" கட்டணும். இதுக்கெல்லாம் ஒட்டு மொத்தமா ரூவா எடுக்க எங்கனல போறது? அதான் இந்த ஆட்டுக்குட்டியைப் பிடிச்சாந்திருக்கேண்டா. பள்ளிக்கொடம் போன நேரம் தவுந்து, மீதி நேரத்துல எலையத் தழையப் பறிச்சுப் போடுல. ரெண்டு வருசத்திலே நல்லா வளந்துரும். வித்தா நாலு பணம் கெடைக்கும். ஒனக்கு ஐஸ்கூலு போற செலவை ஈடுகட்டிரும்,'' என்றபடி அம்மா கொண்டு வந்து முற்றத்தில் கட்டிய ஆட்டுக்

உமாகல்யாணி



குட்டியைப் பரிவோடு தட்டிக் கொடுத் தான்.

அதுவும் 'ம்மே' என்று கத்தி எதிர் அன்பைத் தெரிவித்தது.

ஆயிற்று. இவனும் நல்லவிதமாய் அதைப் பேணி விட்டான்.

இப்போது எட்டாம் வகுப்பில் இருக்கி றான். அடுத்த மாதம் தேர்வு எழுத வேண்டும். ஜூன் மாதம் புதிய பள்ளிக் கூடம் போவதற்கு வசதியாக இந்த ஆட்டை விற்று விட வேண்டும் என்று அம்மா கூறியிருக்கிறாள்.

சொரிமுத்துவிற்கு இதன் மீது பிரியம் தான் என்றாலும், படிப்பு இதை விடவும் முக்கியம் என்பதால் இதை விற்று விடுவ தற்கு ஒப்பியிருக்கிறான்.

வேறு வழி இல்லையே!

தினக்கூலிக்குப் போகிற அப்பா, அடிக்கடி உடம்பு முடியாமல் படுத்துக் கொள்கிற அம்மா, இவர்களால் அவனது படிப்பிற்கென்று பைசாவும் செலவு பண்ணி விட முடியாது. மூன்று வேளையும் கஞ்சி ஊற்றுகிறதே பெரும்பாடாய் இருக் கிறது. இதில் ஸ்கூல் பீஸ், புத்தகம், யூனி பார்ம் என்று எங்கே செலவு பண்ண முடியும்?

''இப்பிடி மசமசன்னு நின்னுக்கிட் டிருந்தா என்ன காரியம் ஆகும்? போய் ஆக வேண்டியதைப் பாரும்வே'' என்று முடுக்கி னாள் ஸ்ரீ ஆண்டாள்.

மௌனமாய் நின்றான் மாசாணம்.

அவளிடம் கோபம் புறப்பட்டது.

''இ ப் பி டி நின்னுக்கிட்டேயிருந்தி ருன்னா என்ன அருத்தம்கிறேன்? அந்த மனுசி வேலை மெனக்கெட்டு ஆளனுப்பித் தகவல் சொல்லி விட்ருக்கா. நீரு, ஆருக்கு வந்த விருந்தோன்னு நிக்கிரே!'' என்று எரிச்சல் காட்டினாள்.

''என்ன செய்யச் சொல்லுத ஆண்டாளு? வெறுங்கையை வச்சு முழம் போட முடியுமா?'' - மிகவும் வருத்தம் நிரம்பிய குரலில் கூறினான்.

''நீரு வெறும்கையோட இருக்கி ருங்கிறதுக்காக ஒம்ம தங்கச்சி மக சமை யாம இருப்பாளா? குமரு சமைஞ்சால் தாய் மாமன் சீரு போகாம முடியுமா?''

''ஞாயம்தான் ஆண்டாளு. நம்மகிட்ட வேணும்ல. இப்ப எதை வச்சுச் சீர் பண்ணப் போறது? அதிலியும் அவ என்னை மனுசன்னே மதிக்க மாட்டா. ஏழைன்னா, உடன் பிறப்புக்கும் எளக்காரம்தான்.''

''அப்படி எளக்காரமா நெனைச்சா ளும், சபைக்கு விட்டுக் குடுக்கலியே. மத்த தாய்மாமன்களுக்குத் தகவல் அனுப்புன மாதிரி, ஒமக்கும் அனுப்பியிருக்காளே!''

''அதுக்கு...?''

''அவங்கல்லாம் பொன்னை வச்சுட்டுப் போகட்டும். நாம்ப பூவையாச் சும் கொண்டு வைப்போம். அதுக் குண்டான வழியைப் பாரும்.''

''எங்கன போயிப் பாக்கச் சொல்லுத? இப்ப எவன்கிட்டேப் போய் நின்னாலும் ரெண்டு கையையும் நல்லாவே விரிச்சுக் காட்டிருவான்.''

''ஒம்ம ராசி அப்படில்லா! இப்ப நாம்ப வெறும் கையை வீசிட்டு போய் நிற்க முடியுமா?''

''வேண்டாம்.''

''என்ன சொல்றீரு? போகவே வேண் டாம்னா சொல்றீரு?''


''ஆமா, அப்பிடித்தான் சொல்லுதேன். அங்கன போய் மொட்ட மொழுக்குன்னு நின்னு அவமானப்படுறதை விடவும் போகாமயே இருந்துடலாம்.''

ஸ்ரீ ஆண்டாள் அவனை முறைத்தாள். கோபப் பார்வையாய்ப் பார்த்தாள். சிவப்பு ரேகைகள் முகத்தில் தடம் பதித்தன.

''ஒம்ம அண்ணன் தம்பிமாருகல்லாம் பட்டும் பட்டாணியுமா எடுத்துட்டுப் போய்ச் சீர் வைப்பாக. நாம ஒண்ணும் அதமாதிரி எடுத்துட்டு போக வேண்டாம். என்னவோ, நம்மாலே ஏண்டது.. பாவி



- சீர்காழி வி. ரேவதி.


THE COLTS MAN
கட்டுப்படாத
கம்பீரம்!
Colts
VESTS
&BRIEFS
A Quality product from :
VIJAYAKUMAR MILLS LTD
Kalayamputhur Post, Palani, Tamil Nadu - 624 615.
Distributor for Madras : Supreme Agencies, 33, P.V. Koil Street, Madras - 600 004.
Distributor for rest of TN : Priya Agencies, 36, Saravana Street, 1st Floor, Udumalpet - 642 126.



- ஞா. ஞானமுத்து

யஸ்டர் பட்டோ என்ன எழவோ... வெல கொறைவா வந்திருக்காமே, அதுல ஒன்ன எடுத்துட்டுப் போய் வைப்போம்...! எரநூறு ரூவாய்க்குள்ளதான் இருக்கும்ன்னு மேலவீட்ல பாஞ்சாலி அக்கா சொன்னா...''

''அப்புறம் பழக்குலை, வெத்தல பாக்கு, மஞ்சக் குங்குமம், பச்சரிசி, தேங்கான்னு சும்மா போகுமா?''

''பணம் வேணும்தான். எப்படியும் தோது பண்ணணும். நாமளும் நம்ம கௌர வத்தை விட்டுக் குடுக்காம சமஞ்ச வீட்டுக் குப் போய்ச் சீர் பண்ணிட்டு வந்துற லாம்...''

''கொறச்சுப் பாத்தாலும் நானூறு ரூவா ஆயிரும் போல இருக்கே! இப்ப எவன்ட்டப் போய் நிக்கச் சொல்லுத?'' என்று எரிச்சல் பொங்கக் கேட்டான் மாசானம்.

மோசமாய்த் திட்ட எண்ணி வாய் திறந்த ஸ்ரீ ஆண்டாளின் பார்வையில், தெருக்கோடியில் ஆட்டுக் குட்டியும், தழைக்கட்டுமாக வருகிற சொரிமுத்து கண்ணில் பட்டான்.

சட்டென்று அவளிடம் ஒரு புத்து ணர்வு! ஒரு புதிய திட்டம் உடனே உரு வாயிற்று.

எவனும் தர மாட்டான்னு மூக்கால் அழுகிற புருஷனை நம்பிப் பயன் இல்லை. அதற்குப் பதிலாய் இந்த ஆட்டுக் குட்டியை நம்பலாம் என்று எண்ணினாள்.

சபை நடுவே கௌரவமாய், சீரோடு போய் நிற்பதே தனியான மதிப்பு ஆச்சே!

சொரிமுத்து குட்டியைக் கொண்டு போய்த் திண்ணையோரத்துத் தூணில் கட்டி னான். அதன் வாய்க்கெட்டும் உயரத்தில் குழையைக் கட்டி வைத்தான்.

''ஏல சொரிமுத்து, சாய்பு கடைல போய் நூறு கருப்புட்டி வாங்கியால. காப்பித் தண்ணி போடுவம்'' என்றபடி இரண்டு ரூபாய் நோட்டொன்றை அவ னிடம் எடுத்து நீட்டினாள் ஸ்ரீ ஆண்டாள்.

''ஹையா!'' என்று குதித்துக் கொண்டு ஓடினான் அவன். வருகிற போது இனுக்கு இனுக்காய்க் கருப்புக் கட்டியைத் தின்று கொண்டே வரலாம் என்கிற சந்தோஷம்.

அந்தச் சந்தோஷ வேளையில் அவனை வீழ்த்தவே ஸ்ரீ ஆண்டாள் திட்டம் போட் டாள்.

வீழ்த்தினாள்.

அத்தை வீட்டில் சடங்கு, விருந்து என் கிற அஸ்திரப் பிரயோகங்கள்!

சொரிமுத்து தலையாட்டி விட்டான். அதுதான் ஹைஸ்கூல் போக வேறு ஏதாவது பண்ணலாம் என்றிருக்கிறாளே!

திசையன் விளைக்குப் போய் அவளே எல்லாச் சாமான்களையும் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். மாடத்தி மதினி யிடம் இரவல் வாங்கிய எவர்ஸில்வர் தாம்பாளத்தில் புடைவை, பழம், தேங் காய், மஞ்சள், குங்குமம், கண்ணாடி, பவுடர், சீப்பு, சோப்பு, பூ என்று அழகாக அடுக்கி வைத்தாள்.

சும்மாவா, ரூபாய் நானூறு காலி!

ஆகாய நிறத்தில் பாலியஸ்டர் பட்டு தகதகத்தது. தன்னிடம் இருந்ததில் கிழிசல் இல்லாததாய் ஒரு புடைவையைத் தேர்வு செய்து உடுத்திருந்தாள்.

மிகவும் பெருமிதமாய் நடந்து போய், பட்டக சாலையில் வைக்கப் பெற்றிருந்த சீர்த் தட்டுகளினூடே வைத்து விட்டு நிமிர்ந்த போது, எல்லையற்ற கௌரவம் தனக்கு வந்து விட்டாற் போன்ற பூரிப்பு! ஏற்கெனவே சீர்த் தட்டுகளால் பட்டக சாலை நிரம்பி வழிந்தது.

பணக்கார இடம். கேட்கவா வேண் டும். மாசானத்தின் உடன்பிறந்தவர்கள் எல் லாம் தங்களின் சீர்த் தட்டிலே ஒரிஜினல் பட்டுப் புடைவையை வைத்திருக்க, இவள் மட்டுமே மலிவு விலைப் புடைவை!

அதைப் பார்க்கிறபோதே உடன்பிறந்த வள் முகத்தைச் சுளித்தது துல்லியமாகவே புலப்பட்டது.

''இதென்ன, யார் வீட்டுக்கோ வந்த விருந்து மாதிரி ஒதுங்கி நின்னுக்கிட்டா எப்படி? வந்தவங்களைக் கவனிக்கிறது யாராம்?''

இவ்வளவுதான் சொன்னாள் கணவ

ளின் உடன்பிறந்தாள்.

தனது தலையில் கிரீடமே ஏறி விட்ட பெருமிதம் ஸ்ரீ ஆண்டாளுக்கு.

புருஷனை, ஏன்... மகனைக் கூட விட்டு வைக்கவில்லை அவள்!

வந்திருந்த ஊரையும், உறவையும் பாந்தமாய் அமர்த்தி வைத்து, புட்டு, களி, பால் சோறு, வடை, பழம் என்று பரி மாறி...

வேலை நெட்டி வாங்கி விட்டது.

எச்சில் இலையைக் கூட மாசானமும், சொரி முத்துவும்தான் மாய்ந்து மாய்ந்து வெளியில் அள்ளிப் போட்டனர்.

மற்ற உடன்பிறப்புக்கள் எல்லாம் ஊருடனும் உறவுடனும் குசலம் விசா ரித்துக் கொண்டிருக்க, மாசானத்தின் குடும் பம் மட்டும் பம்பரமாய்ச் சுழன்று கொண்டி ருந்தது.

உடன் பிறந்திருக்கிற உரிமையை இவர் களுக்கல்லவா இன்று தாரை வார்த்திருக் கிறாள்! உடன்பிறந்திருக்கிற கௌரவம் இன்று இவர்களுக்கல்லவா தரப் பெற்றி ருக்கிறது.

புறப்படுகிற போது, தான் கொணர்ந் திருந்த சீர்த் தாம்பாளத்தைப் பார்த்தாள். அசங்காமல் இருந்தது. பூவும் கூட எடுக்கப் பெற்றிருக்கவில்லை.

புடைவையை எடுத்துச் சபை நடுவே கட்டுவதற்கு இவளென்ன ஒரிஜினல் பட்டா எடுத்து வந்திருந்தாள். ஆனால்... பூவைக் கூட எடுக்காமல்...?

ஆற்றாமையாக இருந்தது!

தானாவது அந்தப் பூவை எடுத்துப் போய் மருமகளின் தலையில் சூட்டி விடு வோம் என்கிற எண்ணமுடன், அதை எடுத் துக் கொண்டு மருமகளிடம் போனாள்.

''அதைக் கொண்டு போய் வச்சுறாதிங்க. ஏற்கெனவே ஈரத் தலையிலே ஏகப்பட்ட பூக்கள் வச்சிருக்கு. தலைவலி வந்துரும். இப்ப இதையும் வச்சா தாங்கிக்க முடியாது. வேணாம் வச்சுறாதிங்க'' என்று குறுக்கே வந்து விட்டாள் கணவனின் உடன்பிறந்தவள்.

ஆசைப்பட்டு வைத்தால் வைத்து விட்டுப் போகட்டுமே. அவள் போன பிறகு வேண்டுமானால் எடுத்து விடலாம் என்கிற நாகரிகம் கூட இல்லாமல், இப்படி வந்து தடுத்து விட்டாளே என்கிற ஆதங்கமுடன்தான் வீட்டிற்கு வந்தாள்.

தலையில் வைக்கத்தான் விடவில்லை. அப்புறமாவது சும்மா இருந்தாளா? அந்தப் பூவைக் கொண்டு போய் அவள் வீட்டில் எருமை மேய்க்கிற பெண்ணுக்கல்லவா கொடுத்தாள், வீணாகி விடும் என்று.

ஆட்டை விற்று வாங்கிய பூ அது! ஒரு வேளை, புடைவையையும் அப்படிச் செய் வாளோ?

செய்யக்கூடியவள்தான்.

'இந்த மாதிரி புடைவையை எல்லாம் எம் மக உடுத்த மாட்டா' என்று கூறிக் கொண்டு, கொடுத்தாலும் கொடுப்பாள்.

''நாமெல்லாம் ஆரு? ஒரே வீட்டுக் காரவுகதானே! இன்னிக்கி இல்லேன்னா, நாளைக்குச் செஞ்சு சாப்பிடப் போறோம். சொரிமுத்து சின்னவன். நாக்க அடக்க முடியாது. இந்தா தின்னுல'' என்று பாத்திரத்தில் அடிப்பிடித்துப் போயிருந்த களியையும், பாற்சோற்றையும் கரண்டி யால் கரண்டி, வழித்துப் போட்டவள், ஸ்ரீ ஆண்டாளுக்கும் மாசானத்துக்கும் ஒரு தம்ளர் ஆறி அவலாய்ப் போன காப்பித் தண்ணியக் கொடுத்து அனுப்பி வைத்த வடு, ஆண்டாளுக்கு நெஞ்சைக் கரித்தது.

'ஒருவேள சமஞ்ச வீட்டில் வேலை செய்ய ஆள் பத்தாதுன்னுதான் நம்பளக் கூப்ட்டு விட்ருப்பாளோ? அப்படித்தான் இருக்கணும். மதிப்பும், கௌரவமும் தார துன்னா, சீர்த் தாம்பாளத்தைச் சீண்டாம இருப்பாளா? ஓடி ஓடி எச்சிலிலை எடுக்க விடுவாளா? பண்டமெல்லாம் சீரழிஞ்சு போகயில் வெறும் காப்பித் தண்ணியோட அனுப்பி வச்சாளே! விருந்து சாப்டலாம்னு ஆசையோட போன புள்ளக்கி, அடிப்பற் றைச் சுரண்டில்லா போட்டா!'

உறவைச் சொல்லிச் சொல்லி வேலை வாங்கினாளே அல்லாமல். உறவுக்குரிய மரியாதையைத் தரவே இல்லையே!

''அம்மா நான் எட்டாப்புப் பாசாய்ட் டேன். ஐஸ்கூலு போலாம்னு எட்டாப்பு சார் சொல்லிட்டார். எப்பம்மா போக லாம்?''

உற்சாகக் குரலில் உலுக்கினான் சொரி முத்து.

ஸ்ரீ ஆண்டாள் மகனை நேர்ப் பார் வைப் பார்க்கக் கூச்சப்பட்டு, வேறுபுறம் திரும்பினாள். அங்கே, அந்த ஆட்டுக் குட்டி கட்டுகிற திண்ணையோரத் தூண்தான் 'நச்' சென்று கண் பார்வையில் விழுந்தது.

ஆட்டுக் குட்டி இல்லாத வெற்றுத் தூண்!

'கௌரவத்துக்கு ஆசைப்பட்டு, மக னின் எதிர்கால அஸ்திவாரத்தையே அழிச் சிட்டம் போலிருக்கே!'

''அம்மா சொல்லும்மா, எப்பம்மா நான் ஐஸ்கூலு போகலாம்?''

''இந்தாக்ல, பொடரில அறைஞ்சு கள்ளியங்காட்ல தள்ளி விட்ருவேன். மூதி படிச்சது போதும்ல. நம்பியாத்ல அணை கட்டுதாகளாம். ஆள் எடுக்காக. மாடத்தினி மயினி மவன் போறானாம். நீயும் போ...''

''அம்மா... ஐஸ்கூலு....''

''இந்தாக்ல அறைஞ்சம்ன்னா...''

அவளின் பார்வை அக்னி, சொரி முத்துவை வெகு தொலைவிற்கு விரட்ட, அவன் ஓடலானான்.

ஸ்ரீ ஆண்டாள் அழலானாள்.

''டாக்டர்..... டாக்டர்...! அந்தப் பதிமூணாம் நம்பர் பேஷண்ட் ரொம்ப சீரியஸாக.... இருக்கார்!''
''பயந்துட்டீங்களா, நர்ஸ்? அவர் ஒரு நாடக நடிகர்! சமயத்திலே, இப்படித் தான், ஏதாவது பண்ணுவார்!'' - ஆர். அப்துல் சலாம்.

கல்லூரி மாணவர் கட்டுரைப் போட்டி

ரூ. 50 முதல் பரிசுக் கட்டுரை

லட்சிய மனைவி


'நல்ல மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்' என்ற வரியே நூற்றுக்கு நூறு உண்மை. ஆனாலும் என் மனத்தில் நான் உருவாக்கி வைத்துள்ள லட்சிய மனைவி ஒருத்தி இருக்கவே செய்கிறாள். அவள் பாரதியாரின் புதுமைப் பெண்ணும், பாரதிதாசனின் குடும்ப விளக்கும் சரியான விகிதாச்சாரத்தில் கலந்துள்ள மனப்பாங்கு உள்ளவள்.

ஜாதகப் பொருத்தம், பொருளாதார ரீதியான பொருத்தம், கல்விப் பொருத்தம், ரசனைப் பொருத்தம்.... இனையனைத்தையும் மீறி வார்த்தைகளால் விளக்க முடியாத பொருத்தம் ஒன்று இருக்கிறது. அதுதான் மனப் பொருத்தம். 'அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்...' என்று கம்பன் கூறுவது போல் முதல் பார்வையிலேயே ஒருவர் பால் மற்றொருவர் ஈர்க்கப்பட வேண்டும். இவளைத் துணைவியாக ஏற்று வாழ்க்கைப் பாதையில் கைகோத்து நடக்கலாம் என்ற நம்பிக்கை ஏற்பட வேண்டும். ஒருவரையொருவர் அறிந்து கொண்டால்தான் அது ஏற்படும் என்ற கருத்தும் சிலருக்கு உண்டு. ஆனால் எனக்கு அதில் உடன்பாடில்லை. ஒருவரையொருவர் அறிந்து கொள்வது என்பது அவ்வளவு சுலபமானதல்ல. அது வாழ்க்கை முழுதும் நடக்கும் தொடர் வினை. ஆனால், பார்க்கும் முதல் கணத்திலேயே பாலுணர்வு ரீதியாக மட்டுமல்லாது ஒரு முழுமையான விதத்தில் அடிமனத்திலிருந்து ஓர் ஈர்ப்பு, பீறிட்டு எழ வேண்டும்.

மற்றொரு சர்ச்சைக்குரிய விஷயம் 'அழகு' என்பது. தன் மனைவி அழகியாக இருக்க வேண்டுமென்று எண்ணாத ஆண் மகனே இருக்க முடியாது. அதில் தவறுமில்லை. ஆனால் நான் விரும்பும் அழகை நிர்ணயம் செய்வது முற்றிலும் நானாகத்தான் இருக்க வேண்டும். உதாரணமாக, எனது நண்பன் ஒருவனுக்குத் திருமணம் ஆன போது அவன் என்னிடம் கேட்டான், 'என் செலக்ஷன் எப்படி?' எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. எவ்வளவுதான் நெருங்கிய நண்பனாக இருந்தாலும் தன் மனைவியின் அழகைப் பற்றி அபிப்பிராயம் கேட்பது கொச்சைத்தனமானது; காட்டுமிராண்டித்தனமானது என்பதே என் எண்ணம்.

எனது லட்சிய மனைவியிடம் நான் எதிர்பார்க்கும் முதல் பண்பு ஒளிவுமறைவற்ற தன்மைதான். கணவன் - மனைவி என்ற பந்தத்தில் அனைத்து விஷயங்களும் திறந்த புத்தகமாகத்தான் இருக்க வேண்டும். பிரியமும் பாசமும் மனத்திலிருந்தால் மட்டும் போதாது, எப்படியெல்லாம் முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் அவற்றை அள்ளித் தெளிக்க வேண்டும். இந்த உலகமே என்னை வெறுத்து ஒதுக்கி விட்டாலும் நான் தலைவைத்துப் படுக்க ஒரு மடி இருக்கிறது என்ற அசைக்க முடியாத நம்பிக்கை எனக்கு ஏற்பட வேண்டும். அதே நம்பிக்கை அவளுக்கும் உண்டாக வேண்டும். எங்களிடையே எந்தப் பிரச்னை ஏற்பட்டாலும் ஒரு மூன்றாம் மனிதரிடம் செல்லாமல், எங்களுக்குள்ளேயே பேசித் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையும் மிகவும் ஆதாரமான ஒன்று.

ஒரு நல்ல மனைவியானவள் கணவனது எல்லா முயற்சிகளிலும் பங்கு கொள்பவளாக இருத்தல் அவசியம். நான் நாடு போற்றும் எழுத்தாளனாகவோ, உலகம் போற்றும் விஞ்ஞானியாகவோ மலர்ந்தாலும் கூட, எனது மனைவி என் முதல் ரசிகையாக, எனது ஆராய்ச்சிக்கு ஆத்மபலம் தருபவளாக இல்லாவிட்டால் எனது சாதனைகள் அனைத்தும் அர்த்தமற்றவையாகப் போய் விடும். எனது அபிமான எழுத்தாளர் சுஜாதா ஒருமுறை, "NO MAN IS A HERO TO HIS WIFE" என்று கூறியுள்ளார். இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவரது கருத்தில் எனக்குச் சம்மதமில்லை. தன் மனைவியிடம் ஹீரோவாக முடியாதவன் சமுதாயத்திலும் பூஜ்ஜியம்தான்.



அதே போல எனது மனைவியாக வாய்ப்பவள் மருத்துவர், பொறியியலாளர், நாட்டியக் கலைஞர், விமான ஓட்டி... போன்ற எந்தப் பணிபுரிபவளாக இருப்பினும் அல்லது குடும்பத் தலைவியாக மட்டுமே இருக்கப் போவதாக இருந்தாலும், அவளது சின்னச் சின்ன சந்தோஷங்கள் முதலாகப் பெரும் சாதனைகள் வரை என்னிடம் பகிர்ந்து கொள்பவளாக இருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன்.

எங்கள் வீட்டருகில் ஒரு வயது முதிர்ந்த தம்பதியினர் இருக்கின்றனர். அவர்களது பிள்ளைகள் அனைவரும் வெவ்வேறு இடங்களில் வேலை கிடைத்து நன்றாக செட்டிலாகி விட்டனர். அவர்கள் அனைவரும் தங்களுடன் வந்து இருக்குமாறு வற்புறுத்தினாலும், தாங்கள் தங்கள் உழைப்பால் கட்டிய வீட்டில் இறுதிக் காலத்தைக் கழிக்க வேண்டுமென்ற உறுதியுடன், உடல் ஆரோக்கியம் அனுமதிக்கின்ற வரையில் தனித்திருக்க முடிவு செய்து, இருந்து வருகின்றனர். அந்த முதியவர் தன் வாழ்க்கைத் துணைவியுடன் வாழ்வின் இனிய நினைவுகளை அசை போட்டவண்ணம் வாழும் அந்த சுகிய இலையுதிர்காலத்தை எனக்கு அளிக்க விரும்பவளே எனது லட்சிய மனைவி.

- மு. செந்தில்,
இறுதியாண்டு,
கம்ப்யூட்டர் லையன்ஸ், மெப்கோ
பொறியியல் கல்லூரி,
ஆமத்தூர் போஸ்ட்,
சிவகாசி - 626 005.

புன்னகையே டானிக்!

அழகு மட்டும் போதாது, அறிவு, அடக்கம், பண்பு, பணம், குணம், சுற்றம் எல்லாம் வேண்டும் என்று பைத்தியக்



அடுத்த இதழில்...

OO முப்பது கோடி முகங்கள்
- வித்தியாசமாக மலரும் டி. வி. தொடர்

OO முன்னேற்றப் பாதையில் பெண் சுதந்திரம்...
- சிறப்புக் கட்டுரை

காரத்தனமாக எல்லாம் ஒருத்தியிடமே எதிர்பார்க்க மாட்டேன்.

சின்னச் சின்ன விஷயங்களில் எனக்குப் பிடித்த - அவளுக்குப் பிடிக்காத விஷயங் களில் என்னை அவள் மட்டுப் படுத்தாம லிருந்தால் சந்தோஷம். அது போல் அவ ளுக்கும் முழு சுதந்திரம். இருவர் விருப்பங் களுக்கும் பரஸ்பரம் மதிப்பளித்துக் கொள்ளும் பட்சத்தில் பல பிரச்னைகளுக்கு இடமே இல்லாமல் போய் விடும்.

தினமும் நிறைந்த புன்னகையுடன் வீட்டு வாசலில் வரவேற்றால் அதை விட வேறு 'டானிக்' வேண்டாம்.

வரதட்சணை வாங்க மாட்டேன். அவளை அவளுக்காகத் தான் திருமணம் செய்கிறேன். அவள் பணமா என்னுடன் இல்லறம் நடத்தப் போகிறது?

இலக்கியத்தரமாக வாழ்ந்து காட்ட முடியாவிட்டாலும் என்னால் முடிந்தவரை அவள் கண்கலங்காமல் காப்பேன்; என் பிரச்னைகளுக்கு விடிவு காலம் அவள் காட்டும் அன்பிலும், அறிவான ஆலோ சனையிலும், புன்னகையிலும் தான் இருக் கிறது.

அள்ளக் குறையாத அன்பே இனிக்கும் இல்லறத்தின் ரகசியம்!

- சௌ. மோகன வெங்கடாசலபதி,
எம்.பி.பி.எஸ். இரண்டாமாண்டு,
சேலம் அரசு மோகன் குமாரமங்கலம்
மருத்துவக் கல்லூரி,
சேலம் - 636 006.

கல்வி + கலாசாரம்

கல்வியறிவு பெண்ணுக்குக் கட்டா யம் வேண்டும். அதை விட பொது அறி வும், சமூகப் பழக்க வழக்கங்களில் ஆழ்ந்த பிடிப்பும், நமது கலாசாரத்தை நேசிப்பவ ளாகவும், தெய்வ நம்பிக்கை மிக்கவளாக வும் இருத்தல் வேண்டும்.

வாழ்க்கைச் சக்கரத்தில் இன்பமும் துன் பமும் மாறி மாறி வரக்கூடியன. இன்ப மான காலத்தில் நிதானமாகவும் துன்ப காலத்தில் உறுதியைக் காட்டக்கூடியவளாக வும் இருத்தல் அவசியம்.

வீண் ஆடம்பரங்களும், டாம்பீகச் செலவினங்களும் குடும்ப ஒற்றுமையைக் குலைத்து, மனநிம்மதியை இழக்கச் செய்து விடும். எனக்கு மனைவியாக வரும் பெண், வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளாக வும் எளிமையை விரும்புபவளாகவும், எதிர்கால நன்மைக்குச் சேமிப்பவளாகவும் இருத்தல் அவசியம்.

- இரா. குமார்,
வணிகவியல்,
இந்திரா காந்தி தேசிய திறந்தவெளிப்
பல்கலைக் கழகம்,
புதுச்சேரி - 8.

டாக்டரின் மனைவி

கட்டழகி வேண்டியதில்லை. காண் பவர் மதிக்கும் கண்ணியமான தோற்ற மிருந்தால் போதும். பிள்ளைகளை நன் முறையில் வளர்க்கவும், சமூகத்தில் நாலு பேரிடம் பழகும் போது நாகரிகமாக நடக்கவும் ஓரளவு படித்த பெண்ணாக இருந்தால் போதும். நான் பார்க்கப் போவது மருத்துவத் தொழில். 24 மணி நேரமும் இரவு, பகல் பாராமல் அவசரம் என்று அழைப்பவருக்கு உதவிக் கரம் நீட்டும் உன்னதமான தொழில். தன் சுகத்தை மட்டும் எண்ணாமல் தியாக மனப் பான்மையும், சேவை உணர்ச்சியும் உடைய பெண்ணாக மனைவி அமையப் பெற் றால்தான் கணவன் மருத்துவத் தொழிலைச் சிறப்பாக ஆற்றிட முடியும்.

- வ. செந்தில் குமார்,
இரண்டாம் ஆண்டு,
மதுரை மருத்துவக் கல்லூரி,
மதுரை.

('லட்சியக் கணவன்' எப்படி யிருக்க வேண்டும்? மாணவிகள் கட்டுரைகள் அடுத்த இதழில்...)

AUDIOFINE

HF 90 & HF 60 Cassettes.

இப்பொழுது விற்பனையாகிறது.

1) வாசலில் ஒரு வெண்ணிலா - இசை: தேவா
2) பாலைவன ராகங்கள் - இசை: S.A. ராஜ்குமார்
3) MGR நகர் போலீஸ் ஸ்டேஷன் - இசை: இசைஞானி இளையராஜா

விரைவில் வெளிவருகிறது.

1) உனக்காக பிறந்தேன் - இசை: தேவா
2) முன் அறிவிப்பு - இசை: தேவா
3) கவர்ன்மெண்ட் மாப்பிள்ளை - இசை: தேவா
4) கிழக்கு வெளுத்தாச்சு - இசை: தேவா
5) போக்கிரி தம்பி - இசை: தேவா

பக்தி பாடல்கள்.

1) மாரியம்மன் தரிசனம் - L.R. ஈஸ்வரி
2) சக்தி தரிசனம் - L.R. ஈஸ்வரி
3) ஸ்ரீகிருஷ்ண தரிசனம் - P. சுசீலா
4) மாரியம்மன் திருப்பள்ளி எழுச்சி - K. வீரமணி & ராதா
5) தேவி தரிசனம் - P. சுசீலா
6) அம்பிகை தரிசனம் - வாணிஜெயராம்
7) அம்மன் அருள் கீதங்கள் - B.S. சசிரேகா
8) தேவி ஸ்தோத்திரம் - சித்ரா & விஜயலட்சுமி
9) வெங்கடேச சுப்ரபாதம் & கவசம் - தமிழ் சென்னை சகோதரிகள் சித்ரா, அலமேலு

கேஸட் ஒன்றின் விலை ரூ.20

(வரிகள் உட்பட)

Stay in tune with sensational music.



- Superior quality magnetic tape manufactured in-house.
- Even the price sounds perfect.

Any music is fine. If it is Audio Fine.

AUDIOFINE

AUDIO ELECTRONIC CO. (P) LTD.

9-A, Whites Road (Empet Building)
MADRAS - 600 014. Phone 864907



கோணல் வாயன் கொட்டாவி விட்டால்...

ஒரு தடவை இந்திரா காந்தி அவர்கள் தேர்தலில் தோற்று விட்டார். உடனே பத்திரிகை நிருபர்கள் அவர் வீட்டுக்கு ஓடினார்கள். ''ஏம்மா, எதிர்க்கட்சி ஜெயிச்சதைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க?'' என்று கேட்டார்கள்.

அதற்கு அவர் சொன்னாராம், ''அவங்க ஜெயிக்கலை. நான் தோத்துட்டேன். அவ்வளவுதான். மக்கள் எனக்கு ரெஸ்ட் கொடுத்து இருக்காங்க. நான் செய்த தப்புக்களை இந்த ஓய்வு காலத்திலே யோசிச்சு, என்னைத் திருத்திக்கறதுக்கும் மறுபடியும் மக்களுக்குச் சேவை செய்ய என்னைச் சரி பண்ணிக்கறதுக்கும் கொஞ்சம் அவகாசம் கொடுத்திருக்காங்க...''

எனக்கு ரொம்பப் பிடித்த பதில்களில் ஒன்று இது. இந்திரா காந்தி மீண்டும் பதவிக்கு வராமலேயே இருந்திருந்தால் மேலே சொன்ன அவர் கருத்துக்கு மதிப்பே இல்லை. ஆனால் அவர் மக்கள் மனத்தில் மறுபடியும் நின்று, மாபெரும் வெற்றி பெற்று, அதே பிரதம மந்திரி நாற்காலியில் தூசி தட்டி உட்கார்ந்தார். அதனால் மதிப்பு ஏற்படுகிறது. மக்கள் மேல் எவ்வளவு நம்பிக்கை; எவ்வளவு தன்னம்பிக்கை என்று ஒரு மரியாதை ஏற்படுகிறது.

சரி, விஷயத்துக்கு வருகிறேன். என்னுடைய கடைசி இரண்டு படங்களும் தோல்வி அடைந்தவுடன் நான் ரெஸ்ட் எடுத்துக் கொள்வதாகத் தீர்மானித்தேன். கிட்டத்தட்ட மக்கள்தான் அந்த ரெஸ்டை கொடுத்தார்கள். ''இந்த ஆளு பன்னிரண்டு வருஷம் நாடக உலகிலே ஓடிட்டான்; பத்து வருஷம் சினிமா உலகிலே ஓடிட்டான். இப்ப இவன் ஓட்டம் கொஞ்சம் சரியில்லை. ரெஸ்ட் எடுத்துக்கட்டும்'' என்று நினைத்து விட்டார்கள். இந்திரா காந்தி அம்மாவுக்கு ரெஸ்ட் கொடுத்த மாதிரி! நானும் நன்றாக மூச்சு வாங்கி, ஆசுவாசப்படுத்திக் கொண்டேன். இப்போது மறுபடியும் ஓடுவதற்குத் தயாராக எழுந்து நிற்கலாமென்று பார்த்தால் இந்த ஒரு வருஷத்துக்குள்தான் எத்தனை மாற்றங்கள்?

மூன்று விஷயங்கள் என் மனத்தை ரொம்பவும் உறுத்துகின்றன.

1. நான் 'பட்ஜெட்'டில் ராஜா. பூஜை அன்றைக்கே படத் தயாரிப்புச் செலவை ஒரு பேப்பரில் எழுதித் தயாரிப்பாளரிடம் கொடுத்தால், அது கண்டிப்பாக ஏறாது; ஏறக் கூடாது. இப்போது இருக்கற அநியாய விலைவாசி ஏற்றத்தில் அந்த மாதிரி கொடுக்க முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. அப்படியே கொடுத்தாலும் 'பட்ஜெட்'டுக்குள் என்னால் நிற்க முடியுமா என்றும் தெரியவில்லை. அதற்காக பட்ஜெட்டை ஊதிப் பெரிதாக்கி "safe" பட்ஜெட் போடுவதை நான் விரும்பவில்லை.

2. பூஜை அன்றைக்கே ரிலீஸ் தேதியைச் சொல்ல வேண்டும். அதற்குள் படத்தை முடித்துத் தயாரிப்பாளரிடம் பெட்டியை ஒப்படைக்க வேண்டும். இப்போது Negative க்கே, Chamber வாசலில் சர்க்கரை, கெரசின் கியூவில் நிற்கிற மாதிரி நிற்க வேண்டும் போல் இருக்கிறது. Negative என்பது இறக்குமதி செய்கிற சரக்காம். அதை அந்நியச் செலாவணி கொடுத்துத்தான் வாங்க வேண்டுமாம். அந்நியச் செலாவணி, இப்போது நெருக்கடி என்பதால் ரேஷனாம்!

3. எனக்கு ரேஸைப் பத்திக் கொஞ்சம் தெரியும். காதால் கேட்டுத்தான்; கண்ணால் பார்த்து இல்லை. 'ஜாக்பாட்' அடிக்கும் என்று நினைத்து உள்ளே போகிறோம். அட, 'ஜாக்பாட்' அடிக்கவில்லையென்றாலும், அட்லீஸ்ட் ஒரு 'டிரிபிள்' ஒரு 'தெனாலா' ஒரு 'வின்' ஒரு 'பிளேஸ்' என்று இவற்றிலாவது ஒன்று அடிக்க வேண்டும். வாங்கிய டிக்கட்டை எல்லாம் கிழித்துப் போட்டு, முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வேர்கடலையைக் கொறித்துக் கொண்டு வீட்டுக்கு நடந்து

விசு



வருகிற பழக்கம் எனக்குப் பிடிக்காது. இப்போது சினிமா என்ற ரேஸ்கோர்ஸில், ஒன்று ஜாக்பாட் அடிக்கிறது, இல்லையென்றால் வேர்க்கடலைதானாம்! நடுவில் ஒன்றுமே கிடையாதாம். ஒன்று நூறு நாள்; இல்லை மூணு வாரம் என்றால் எப்படி? நடுவில் இருக்கற '50 நாள்' '75 நாள்' என்பதெல்லாம் இப்போது குறிஞ்சிப் பூவாமே?

மறுபடியும் மறுபடியும் சொல்கிறேன். சினிமா என்பது கலை என்று யாராவது சொன்னால், அந்த ஆளை என்னிடம் அனுப்புங்கள். சினிமா என்பது வியாபாரம்தான். தயாரிப்பாளரைப் பொறுத்தவரை, போட்ட துட்டு திரும்பி வர வேண்டும். கலைஞர்களைப் பொறுத்தவரை, பேசின துட்டு கரெக்டாக வர வேண்டும். எப்போது 'துட்டு' முக்கியம் என்றாகி விட்டதோ அப்போது அது வியாபாரம் தானே? எப்படிக் கலையாகும்?

பூஜையில் வியாபாரம் என்பது குறிப்பிட்ட சில நடிகர்கள் படத்தைத் தவிர வேறு யாருக்கும் இப்போது கிடையாதாம். படத்தைக் காசு செலவழித்து முழுதும் எடுக்கணுமாம். பிடித்தால் வாங்குவார்களாம். தப்பில்லை. அது அவர்கள் பணம். ஜாக்கிரதையான வியாபாரம்தான் பண்ண வேண்டும். ஆனால் எவன் முழுப் பணத்தையும் போட்டுப் படம் எடுப்பது? நாலு கைகள் சேர்ந்தால்தானே தேரை இழுக்க முடியும்?

நான் யாரையும் குற்றம் சொல்லவில்லை. சில படங்களை ரசிகர்கள் பார்ப்பதற்கே இஷ்டப்படவில்லை. ரிசல்ட்டை ரிலீஸுக்கு முன்னாடியே எழுதி விடுகிறார்கள். என்னவோ தமிழ் நாட்டிலுள்ள எல்லாரும் மொத்தமாக உட்கார்ந்து, ரகசியம் பேசி, சதித் திட்டம் தீட்டி, வஞ்சகம் பண்ணுகிற மாதிரி, ஒரு படம் ரிலீஸ் அன்றைக்கே 'உட்கார வைச்சுட்டா' எப்படி? நான் ஒரு வருஷப் படங்களோட கலெக்‌ஷனை அலசித்தான் இதை எழுதுகிறேன்.

ஒரு வாரத்துக்கு ஒரு தியேட்டரில் 28 ஷோ. அதில் வெள்ளிக் கிழமை ஒளியும் - ஒலியும் - இரண்டு ஷோ கலெக்‌ஷன் குளோஸ். ஞாயிற்றுக்கிழமை - தமிழ்ப் படம் - இரண்டு ஷோ கலெக்‌ஷன் குளோஸ். திங்கட் கிழமை படமும் - பாடலும் - இரண்டு ஷோ கலெக்‌ஷன் குளோஸ். போகிற போக்கைப் பார்த்தால், போட்ட அத்தனை பணத்தையும் செவ்வாய்க் கிழமை 'நூன் ஷோ'வில் வாரினால்தான் உண்டு என்றால் எவன் பர்ஸைத் திறப்பான்? சினிமாவில் பணத்தைப் போடுவான்?

ஏற்கெனவே அவன் கோணல் வாயன். அதில் கொட்டாவி வேறு விட்டால் எப்படி? அதே போல்தான் சினிமா உலகுக்குக் கள்ள வீடியோவும், கேபிள் டீவியும். வீடியோவும் கேபிள் டீவியும் விஞ்ஞான முன்னேற்றம். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் 'உரிமை' வாங்காத படங்களும் வீடியோவில் வருகின்றனவே அது எப்படி?

ஆக, கடலில் கொந்தளிப்பு இருக்கிறது. ஆனாலும் மீன் வேட்டை நடக்கிறது. சிலர் சுறாவோடு திரும்புகிறார்கள். சிலர் கொஞ்சம் மீனுடன் திரும்புகிறார்கள். சிலர் வெறும் வலையுடன் திரும்புகிறார்கள். இன்னும் சில பேர் கடலுடனேயே போய் விடுகிறார்கள்!

நானும் மீன் பிடிக்கக் கிளம்பி விட்டேன். வலையையும் தோளில் போட்டுக் கொண்டேன். ஆனால் கடலில் இறங்கலாமா, இல்லை ஏரி, குளத்திலே இறங்கலாமா என்றுதான் யோசித்துக் கொண்டு இருக்கிறேன். (புரிஞ்சுக்கறவங்க புரிஞ்சுக்குங்க)

ஏனென்றால் எனக்கு மீனும் கிடைக்க வேண்டும்; வலையும் திரும்ப வர வேண்டும். முக்கியமாக நானும் மீண்டு வர வேண்டும்.

நான் நீண்ட நாட்களாக 'நிழலில்' இருந்ததன் ரகசியத்தை எப்படி எப்படியெல்லாமோ நேரிலும், கடிதம் மூலமாகவும் பலர் கேட்டும் பதில் சொல்லாமல் இருந்தேன்.

இப்போது அந்த நிஜத்தை உங்கள் முன் வைத்து விட்டேன்.

(நிழல்கள் தொடரும்)

நீங்கள் கேட்டவை - தராசு

ரஜினி அ.தி.மு.க.வில் சேர்ந்தாரா?



● அ. தி. மு. க. வில் சேர்ந்தா

● பாதுர்காதர், சென்னை.

? ''அரசியலில் சேர மாட்டேன் என்று கூறிய ரஜினி, அ. தி. மு. க. வில் சேர்ந்தார்'' என்று ஒரு பத்திரிகையில் பார்த்தேனே, உண்மையா?

! 'அவர் மனைவியின் ஆஸ்ரம் பள்ளிக்கூட அழைப்பிதழை, மரியாதை நிமித்தம் நேரில் கொடுக்கச் சென்றது அரசியலாக்கப்பட்டு விட்டது' என்று கூறுகிறார் விஷயமறிந்த சினிமா நிருபர் நண்பர்.

● ஆர். கோபாலன், ஸ்ரீரங்கம்.

? தற்போது தமிழக மக்கள் 'ஸொக் லேரபேபி'யாகக் கொண்டாடும் அ.தி. மு.க. காலப்போக்கில் நன்கு வளர்ந்து சாதனை படைக்குமா, அல்லது 'லிவர் கியூர் பேபி'யாகி விடுமா?

! சத்தா, சவலையா என்பது அம்மாவின் வளர்ப்புத் திறனைப் பொருத்தது. ரொம்பச் செல்லம் கொடுக்காமலும் மிதமிஞ்சிக் கண்டிப்புக் காட்டாமலும் வளர்த்தால் உருப்படியாக வளரும்.

● போத்தனூர் புலிச்சோழன், கோவை.

? மக்கள் தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்கிறார்களே தலைவர்கள்?

! ஆமாம், ஆமாம்; இவர்களின் தியாகப் பாட்டையில்தானே அவர்கள் சொகுசுக் காரில் பவனி வர வேண்டும்!

● கி. ராமதாஸ், சென்னை.

? இம் முறையாவது அறிவிப்பின்படி செப்டம்பரில் மாநகராட்சித் தேர்தல் வருமா?

! இம்முறை காவிரிப் பிரச்னை மீது பழியைப் போட்டு ஒத்திப் போட்டு விட்டார்கள். காவிரிப் பிரச்னையில்தான் கருத்து வேற்றுமை இல்லையே? பிறகு மோதல் எங்கே? தேர்தல் நடத்த இடையூறு அதனால் என்ன? புரியவில்லை. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாக்கு! புரிகிறது!

● வண்ணை கணேசன், சென்னை - 11.

? மேக் அப் பற்றிக் கவலைப்படாமல் இருக்கும் நடிகை யார்?

! இதைப் பற்றி நீங்கள் கவலைப் பட்டுத்தான் ஆக வேண்டுமா? நான் கவலைப்படத் தயாராயில்லை. ஸாரி!

● என். சுரேஷ், சேலம்.

? ஒற்றைக் கண் சிவராசனைப் பற்றிப் புதிதாக நீங்கள் ஒரு தகவல் சொல்லுங்களேன்!

! நம் பத்திரிகைகளில் அவரைப் பற்றி வந்துள்ள பல தகவல்கள் அவருக்கே புதுசாயிருக்கும் என்பது கூடப் பழைய தகவல்தானே! அதற்காக, 'அவருக்கு நிஜமாகவே ஒற்றைக் கண் அல்ல; ஒற்றைக் கண் மாதிரி நடிக்கிறார்' என்றெல்லாம் புதுசாக ரீல் விட நான் தயாராக இல்லை!

● சிவ. சீனிவாசன், சென்னை.

? கலைஞர் அடுத்து என்ன படத்துக்குக் கதை வசனம் எழுதுகிறார்?

! தற்போது தொல்காப்பியத்துக்கு விளக்கம் எழுதி வருகிறார்.

● ஆர். சுப்பராவ், திருக்கோவலூர்.

? ஆழ்கடலில் செல்லும் ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு அமைச்சர் சரத் பவார் தாவிக் குதித் தாராமே?

! அதெல்லாம் ஒன்றுமில்லை. பத்திரமாக அமர்ந்து, கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, கயிற்றுப் பாதையில் தொங்கியபடியே ஒரு கப்பலிலிருந்து மற்றொரு கப்பலுக்குப் பயணப்பட்டிருக்கிறார், அவ்வளவுதான். ஓர் ஆபத்து சமயத்தில் தப்புவதற்காக இந்தப் பயிற்சி எல்லா மாலுமிகளுக்கும் அளிக்கப்படுவதுதான். அதில் சிரமசாத்தியமான காரியம் ஏதுமில்லை.

● எஸ். தாரம்புநாதன், கரன்டை.

? ஓர் ஏழையின் கண்ணீருக்கும் ஓர் அரசியல்வாதியின் கண்ணீருக்கும் என்ன வித்தியாசம்?

! அந்த முதலைக் கண்ணீரை நம்புவதுதான், இவன் வறுமைக் கண்ணீர் விட முக்கிய காரணம் என்பது இவனுக்குப் புரியவில்லையே!

● கே. வஸந்தன், நன்னிலம்.

? கமல் டைரக்ட் செய்வது பற்றி?

! முத்திரை பதிப்பார்.

● எச். மோகன், மன்னார்குடி

? அமைதிப் பூங்காவில் துப்பாக்கிச்

கலாசாரம் பெருக வழி வகுத்தவர்கள் யார்? யார்?

! இந்திரா காந்தி, எம். ஜி. ஆர்., ராஜீவ், கருணாநிதி, வி. பி. சிங் ஆகியவர்களும் அவர்கள் தலைமையில் நடந்த ஆட்சிகளும். இவர்கள் ஒருவர் மீது ஒருவர் பழியைப் போட்டுத் தப்பிக்கப் பார்த்தாலும் எல்லோரும் இவ் விஷயத்தில் பெருந் தவறு செய்தவர்களே.

● ப. விஜயபாலன், சென்னை - 18.

? பந்தினால் ஆய பயன்?

! வீடியோ வாடகை வியாபாரம்.

● மு. அய்யூப்கான், சத்திரம் கருப்பூர்.

? மத்திய பட்ஜெட்டை ராஜீவ்காந்திக்குச் சமர்ப்பணம் செய்வதாக நிதி அமைச்சர் கூறியது பற்றி...?

! செத்த பிறகும் கெட்ட பெயர் வாங்கித் தர வேண்டுமா, பாவம்!

● மணி, வடக்கலூர் ★

? மாவட்டங்களுக்குத் தலைவர்களின் பெயர்களை வைப்பது சரியா?

! தப்பு என்று கூற முடியாவிட்டாலும் உசிதமில்லை எனலாம். ''அண்ணா மாவட்டத்தில் இனக் கலவரம்; தேவர் மாவட்டத்தில் கடும் பஞ்சம்; திருவள்ளுவர் பஸ் கவிழ்ந்தது'' என்று செய்திகள் வரும் போது நன்றாகவா இருக்கிறது?

● ப. இராம் முருகன், சிவகங்கை

? அமைச்சர்கள், எம். பி.க்கள் வீடுகளை அழகுபடுத்த மூன்று கோடி ஒதுக்கியுள்ளார்களே?

! பின்னே, மேன்மேலும் தியாகம் புரிய மக்களுக்கு வாய்ப்புத் தர வேண்டாமா!

● மைனா முருகன், எடப்பாடி

? தங்கள் மனத்தை நெகிழ வைத்த ஒரு சம்பவம்?

! சமீபத்தில் அம்ஜத் அலிகான் - டி. என். கிருஷ்ணன் ஜுகல்பந்தி நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். முதலில் அம்ஜத், தனியே வாசித்தார். அப்போது ஒரு மினி சொற்பொழிவு நிகழ்த்தினார் : ஒரு ரிகார்டிங்குக்காக வாசித்துப் பார்த்துக் கொண்டிருந்த போது, திடீரென்று ஒரு புதிய ராகம் உள்ளத்தில் உதயமாக, வாசித்துப் பார்த்தாராம். பிடித்துப் போகவே, நண்பர்களுக்கு வாசித்துக் காட்டினாராம். நண்பர்கள் அது பக்தி உணர்வு ஊட்டுவதாக இருப்பதால் 'பக்தி' என்ற பெயரிடச் சொன்னார்களாம். ஆனால் அம்ஜத், தமக்காக நாட்டியக் கலை வாழ்க்கையைத் தியாகம் செய்து விட்டு வந்த தமது மனைவி சுபலக்ஷ்மி பெயரால் அதனை அழைக்கத் தீர்மானித்தாராம். இதைக் கூறி விட்டு, ''அவள் பிறந்தநாள் பரிசாக இதை வாசிப்பதுடன், பாரத நாட்டில் குடும்பத்துக்காக எவ்வளவோ தியாகங்களைப் புரியும் எண்ணற்ற இல்லத்தரசிகளுக்கு இந்த ராகத்தைச் சமர்ப்பிக்கிறேன்'' என்றார். மேதையின் பெருந்தன்மை, என்னை மட்டுமல்ல; அவையோர் அனைவரையும் நெகிழ்த்தி விட்டது.

● ஆர். ஸ்ரீதரன், குடந்தை.

? சமையல் எரிவாயு விலையை உயர்த்தியது குறித்துத் தாம் வருந்துவதாக மன்மோகன் சிங் கூறியுள்ளது பற்றி...?

! காங்கிரஸுக்கு வோட்டுப் போட்டதற்காக அவரை விட அதிகமாகப் பல இல்லத்தரசிகளும் குடும்பத் தலைவர்களும் வருந்திக் கொண்டிருக்கிறார்கள்!

● கோ. சௌ. பத்மநாபன், கோரணம்பட்டி.

? கலக்கல் என்றால்?

! இரு கோஷ்டிகளிடையே துப்பாக்கிச் சூடுக்கும் போலீஸ் தலையீடலுக்கும் கலகத்தில் ஈடுபட்டோரின் குடும்பத்தினர் கலக்கமடைவதற்கும் காரணமாவது!

● இரா. கிருஷ்ணன், புதுச்சேரி.


? அம்பேத்கார் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகாமி பற்றி...?


! மிரட்டலுக்கு அஞ்சாமல், 'எம்.பி.யே ஆனாலும் குற்றம் குற்றமே' என்றவர்.

★ ரூ 25 பரிசு பெறுபவர் :
மணி, வடக்கலூர் (அஞ்சல்),
அன்னூர் வழி,
கோவை மா. வ. 638 653.


★ கதை - வசனம்


★ தாயினார்?


★ முத்திரை பதிப்பார்!


★ ராஜீவுக்குச் சமர்ப்பணம்!


★ நெகிழ வைத்தார்!

காதில் போட்டுக் கொள்ளாத காரணம்!

சிரிக்க வையுங்கள்;
சிங்கப்பூர் செல்லுங்கள்!

"இன்னைக்கு எனக்கு ரெண்டு ரூபா அனாவசியச் செலவு...!"

"எப்படி...?"

"வரும் போது டிரெயின்லே செக்கிங் இருக்கும்னு நினைச்சு டிக்கெட் எடுத்தேன். செக்கிங்கே இல்லே...!"

- லட்சுமி ஆவுடைநாயகம், சென்னை - 91.

OOOOO



"ஏன்டீ, எதையுமே காதிலே போட்டுக்கறதே இல்லே?"

"போட்டுக்கற மாதிரி வைரத் தோடு வாங்கித் தந்தாக் காதிலே போட்டுக்க றேனே!"

- பி. லலிதா, மங்களூர் - 3.



OO சர்வாதிகாரி ஹிட்லர் கப்பலில் சென்று கொண்டிருந்த போது, தன் நண்பன் ஒருவனிடம் பெருமையாக, "எனது வெற்றியின் ரகசியம் என்ன தெரியுமா? எனது படை வீரர்களின் கீழ்ப்படியும் தன்மை தான்... பார்க்கிறாயா...?" என்று கூறி, கப்பலின் மேல் தளத்தில் வீரர்களை வரிசையாக நிறுத்தி, "ம்... குதியுங்கள்" என்றான். வீரர்கள் ஒவ்வொருவராக ஆழ்கடலில் குதித்தனர்.

ஆச்சரியப்பட்டுப் போன நண்பர், ஒருவனை நிறுத்தி, "எதற்காகக் குதிக்க வேண்டும் என்று ஏன் நீங்கள் யாரும் கேட்கவில்லை?" என்றார்.

"அட போப்பா, இவன்கிட்ட வேலை பார்ப்பதை விட இது எவ்வளவோ மேல்" என்று கூறியபடி பொத்தென்று கடலில் குதித்தான் வீரன்.

— அ. நந்தகுமார், ஏரல்.

OOOOO

OOOOO



- பி. கே. பாலசுப்பிரமணியன், காரைக்கால்.



OO மாணவர்கள் கட்டுரை நோட்டு வாங்கி விட்டார்களா என்று ஆசிரியர் கேட்டுக் கொண்டிருந்தார்.

''நீ கட்டுரை நோட்டு வாங்கிட்டியா?''

''இல்லே சார்.''

''ஏண்டா நீ எல்லாம் படிக்க வர்ற... பேசாமெ மண்வெட்டி வாங்கிக் கொண்டு வயலுக்குப் போக வேண்டியதுதானே!''

''என்னங்க சார்... கட்டுரை நோட்டு வாங்கவே காசு இல்ல... மண்வெட்டி எப்படி சார் வாங்குறது?'' என்று மாணவன் கேட்க, வகுப்பில் 'கலகல'. ஆசிரியர் 'கப்சிப்'

- ஆர். கே. சந்திரசேகரன், கூத்தனூர்.

OOOOO



''கல்யாணப் பத்திரிகையை வித்தியாசமா அடிச்சிருக்கீங்களா எப்படி?''

''குறைந்த மொய்யில் உயர்ந்த காலணிகளைப் பெற்றுச் செல்லுங்கள்!''

- அ. அப்துல் பரீது, திருப்பத்தூர்.

OOOOO

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி - 1991 - பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்....

1. விடியவரும் இரவுகள்
   - வெ. சுப்ரமணியபாரதி
2. பிள்ளையார் சுழி - ஷண்முக
   ப்ரியா (எஸ். ராமகிருஷ்ணன்)
3. இரண்டாவது முகம்
   - கிருஷ்ணா (நா. பாஸ்கர்)
4. நான் ஒரு இந்தியன்
   - ஆர். பி. சாரதி
5. வேண்டாம் இன்னொரு சகாரா
   - புஷ்பா ராஜ்குமார்
6. திவ்யா என்றொரு பெண்
   - உத்தமசோழன் (ஏ. செல்வராஜ்)
7. இடம் - ரிஷபன்
   (ஆர். ஸ்ரீனிவாசன்)
8. இப்போது அழுகிறேன்
   - வெ. ஹரிஹரன்
   (அறிமுக எழுத்தாளர்)
9. ஏழைமையை விரட்டுவோம்
   - புதுவை சந்திரஹரி
10. பிடிமானங்கள்
    - என். பெனிட்டோகுமார்
11. மழை விட்டுப் போச்சு
    - ஜெரா (ஜி. ஜெயராமன்)
12. நடுக்கும் நிறமிலேன்
    - திக்விஜயன்
13. எல்லோருக்குமான தேசம்
    - சுப்ரபாரதி மணியன்
14. பிச்சை புகினும்
    - எஸ். பி. வீரப்பன்
    (அறிமுக எழுத்தாளர்)
15. நிஜம் நிழலாகிறது
    - என். பெனிட்டோ குமார்
16. பிளாட்பாரம் சித்தர்
    - மிருணாளினி
17. குஞ்சு - இனியவன்
    (கா. ஷேக்தாவூது)
18. நினைவுச் சுமைகள்
    - ஷைலஜா
    (மைதிலி நாராயணன்)
19. சுரணிக்கை - ரிஷபன்
    (ஆர். ஸ்ரீனிவாசன்)

வட்டமேஜை

பொறுப்புள்ள முதல்வர் மதிப்பளிப்பார்!

O 'அழகான அட்டை; அற்புதமான தலையங்கம்; ஆபாசமில்லாத சிறுகதைகள்; கருத்து மிக்க கட்டுரைகள் என்று கொடுத்துக் கொண்டிருக்கும் கல்கியை வாங்க வெறும் 50 பைசா விலை உயர்வு ஒரு பொருட்டே அல்ல.
தக்கோலம், அ. முஸ்தபா.

O கல்கி பொன் விழா ஆண்டு மலரை 138 பக்கங்களுக்குத் தரும்போதே நினைத்தோம் விலையில் கை வைக்கப் போகிறீர்கள் என்று! எனினும் எங்கள் ஆதரவு என்றென்றும் உண்டு.
புதுதில்லி - 3,
குடியாத்தம் அரிகோபி.

O ''போகிற போக்கைப் பார்த்தால் பாலியஸ்டர், பருத்திக்கு டாட்டா காட்டி விடும் என்ற பேராசிரியர் சங்கரனின் கருத்து உண்மைதான். எளிதில் தீப்பற்றும் தன்மை, வெயில் காலங்களில் அதிகம் உபயோகப் படுத்த முடியாத தன்மை போன்ற இடைஞ்சல்கள் இருப்பினும் பாலியஸ்டர் மீதுள்ள மோகம் குறைவதாக இல்லை...!''
சிதம்பரம், பா. ஜெயவேல்.

O என்னதான் பளபளப்பு, கவர்ச்சி, பாலியஸ்டர் துணி வகைகளுக்கு இருந்தாலும், பருத்திக்கு ஈடு இணை கிடையாது என்ற குமாரசாமியின் வார்த்தைகள் அட்சர லட்சம்.
மொரட்டுப்பாளையம்,
இராஜேஸ்வரன்.

O தமிழனாய்ப் பிறந்து, தமிழன் என்று பறைசாற்றிக் கொள்வதில்தான் என்ன அர்த்தம்? தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு ஆலயம் உள்ளது என்பதை இதுவரை அறியாமல் அல்லவா இருந்து விட்டோம்! நல்லவேளை, நீங்களாவது மயிலாப்பூரில் அவருக்கு ஆலயம் உள்ளது என்பதைத் தெரியப் படுத்தினீர்களே! பாராட்டுக்கள்.
விழுப்புரம் - 1, ஜி. ஜி. கிருஷ்ணன்.

O கவனக்குறைவால் ஏற்பட்ட கடுமையான விளைவுகள் பற்றியும் இனி முதல்வர் கவனிக்க வேண்டிய பொறுப்புக்கள் குறித்தும் ஆசிரியர் பக்கத்தில் அருமையாகக் கூறியுள்ளீர்கள். பொறுப்புள்ள நமது முதல்வர் உங்கள் எழுத்துக்கு மதிப்பளிப்பார் என்று நம்புவோம்.
திருச்சி - 2, ஆர்க். எழிலன்.

O 'இது பெயர் மாற்றும் சீசன்' கார்ட்டூன், மாநில அரசையும் 'போகுது பார் ரயில் வண்டி, ஏறுது பார் விலைவாசி' தலையங்கம் மத்திய அரசையும் ஒரு கலக்குக் கலக்கி வைக்கும் விஷயங்கள்.
திருவாரூர், அ. சம்பத்.

O 'இருமுடி சுமப்பது எதற்கு?' கார்த்திகை விரதமிருந்து, மாலையணிந்து, பயபக்தியோடு வலம் வரும் ஒவ்வொரு ஐயப்ப பக்தரின் கையிலும், தவழ வேண்டிய அரிய பொக்கிஷம்!
கும்பகோணம்,
எஸ். கே. மூர்த்தி.

O 'மியூசிக் சேர்' போட்டி போல் ஒவ்வொரு பாத்திரத்தையும் கூறி அதன் நிலைமையையும் கூறித் தள்ளுபடி செய்து, இறுதியில் மண் பாத்திரத்திற்கு உமது வோட்டை அளித்துத் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்றி விட்டீர்!
சேலம், எம். கே. சக்திவேல்.

O பெண் என்பவள் இரக்கத்தின் மறு வடிவம் என்பதையும், அண்ணி என்பவள் அன்னைக்குச் சமம் என்பதையும், 'அண்ணியின் மனசு' சிறுகதை மூலம் நிரூபித்து விட்டார் 'அபிமானி'.
திருப்பரங்குன்றம்,
டி. கே. சுப்பிரமணியன்.

O நாள்தோறும் உழைத்துக் களைத்து, வயிற்றுக்காகப் போராட்டம் நடத்தும் ஒரு குடும்பப் பெண்ணின் மன இயல்புகளை அழகாகச் சித்திரித்து, 'இது கதை இல்லை; நிஜ வாழ்க்கை' என்ற உணர்வினை ஏற்படுத்திக் கதையோடு ஒன்றிப் போகச் செய்து விட்டார் 'யுகமாய் நகரும் பொழுது' சிறுகதை ஆசிரியர் மேலாண்மை பொன்னுச்சாமி.
சேலம் - 5, என். சுரேஷ்.

O தம்மிடம் படித்த மாணவன் மிகவும் களைப்பாக பஸ்ஸில் வருவதைப் பார்த்து, எங்கே தம்மைப் பார்த்தால் எழுந்து இடம் கொடுத்து விடுவானோ என்ற மனிதாபிமானத்தால் அவனைக் 'கண்டும் காணாமல்...' இருந்த கோமதி சங்கரன் சார் உண்மையிலேயே பெரிய மனிதர்தான்!
மணியக்காரன்பாளையம்,
ஏ. ஜி. கல்யாணசுந்தரம்.

O தமிழ்நாடு சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் முஸ்லிம் பெண்மணி மரியம் உல் ஆசியாவோ, ஜீனத் ஷெர்புதினோ அல்ல. நாற்பது ஆண்டுகளுக்கு முன்பே பேகம் அம்ருதீன் என்பவர் எதிர்க்கட்சி (முஸ்லீம் லீக்) எம். எல். ஏ. வாக இருந்தார்.
சிட்லபாக்கம்,
அ. ஷண்முகசுந்தரம்.

O 'நேற்று வரை நந்தவனம்' தொடர்கதையில், 'பெண்டாட்டியை இழந்த கணவனுக்கு ஏன் தமிழில் எந்தவொரு பேருமில்லை?' என்று கேட்கிறார் அனுராதா ரமணன். விதவை என்பது தமிழ்ப் பெயரல்ல. சமஸ்கிருதப் பெயர். மனைவியை இழந்த கணவனுக்கும் சமஸ்கிருதத்தில் ஒரு பெயர் உண்டு - ''விதுர.''
கல்கத்தா - 29,
சு. கிருஷ்ணமூர்த்தி.

அமெரிக்காவையும் கவரும் ஆயுர்வேத வைத்தியம்!

ஜம்ஷெட்பூரிலுள்ள 'டெல்கோ' தொழிற்சாலையில் பணிபுரியும் அதிகாரி மன்மோகன் சிங். வயது சுமார் 55 இருக்கும். ஒரு நாள் திடீரென்று பாராலிடிக் ஸ்ட்ரோக் வந்து, இடது கையும், இடது காலும் செயல் இழந்து முடங்கி விட்டன.

'கேரளத்தில், கோட்டக்கல்லுக்குப் போய் அங்கே உள்ள ஆர்ய வைத்திய சாலையில் சிகிச்சை செய்து கொள்ளுங்கள்' என்று சிலர் சொன்னார்கள். உடனே வைத்தியசாலைக்குக் கடிதம் எழுதிப் போட்டு விட்டு அறை ஒதுக்கப்படுவதற்காகக் காத்திருந்தார் மன்மோகன் சிங். அறை ஒதுக்கப் பட்ட செய்தி கிடைத்ததும், மனைவியுடன் கோட்டக்கல்லுக்கு வந்தார். அவரைச் சந்தித்தோம்.

''வந்து இருபத்தைந்து நாட்கள் ஆகின்றன. முன்பு, ஆதரவுக்காகக் கைத்தடி ஊன்றி நடந்து கொண்டிருந்தேன். இப்போது அதன் உதவி இல்லாமலே இந்த மருத்துவ மனை காம்பவுண்டுக்குள் சுற்றி வர முடிகிறது!'' என்றார் சிங்.

''இன்னும் எத்தனை நாள் இருக்க வேண்டும்?''

''இன்னும் மூன்று நாட்கள். பிறகு அவர்கள் வரச் சொல்லும் போது, மறுபடி வர வேண்டும். எதையும் நாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. வேளா வேளைக்கு அறையைச் சுத்தம் செய்து, தேவையானவற்றை அவர்களாகவே கொடுத்து விடுகிறார்கள். குற்றம் - குறை சொல்ல முடியாத ஏற்பாடுகள்'' என்றார் மிஸஸ் சிங்.

எல்லா அறைகளிலும் விதவிதமான நோயாளிகள். வட நாட்டிலிருந்து நிறையப் பேர். அமெரிக்கர்களும் வருகிறார்கள்!



ஒவ்வொரு நோயாளியாகப் பார்த்துக் கொண்டு காலை 'ரவுண்ட்ஸ்' வந்து, அறைக்குத் திரும்பிய முதன்மை மருத்துவர் பி. எஸ். வாரியரைச் சந்தித்தோம்.

முன்பெல்லாம் ஆயுர்வேத வைத்தியர்கள் சொல்லும் மருந்தை, நோயாளி தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டியிருந்ததாம்.

''1902 -ல், நோயாளிகளுக்கான மருந்தை நாமே தயாரித்துக் கொடுத்து விட்டால் என்ன? என்று தீர்மானித்தார் வைத்திய ரத்தினம் பி. எஸ். வாரியர். அந்தக் கால கட்டத்தில் இந்தியாவிலேயே அப்படிப் பட்ட ஆயுர்வேத வைத்திய முறை அவருடையது ஒன்று மட்டும்தான். அதற்குப் பிறகுதான் மற்ற ஆயுர்வேத வைத்தியர்களும் மருந்துகள் தயாரித்துக் கொடுக்கும் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள்!'' என்றார் வாரியர்.

அப்போதெல்லாம் இதுபோன்ற நர்சிங் ஹோம் வசதிகள் ஏது? அதனால் சிறு குடில்களில்தான் சிகிச்சை நடக்கும்.

''அறுவைச் சிகிச்சை கிடையாது. மகளிர் நோய் அல்லது பிரசவ கேஸ் பார்ப்பது கிடையாது. ஆனால் பாராலிஸிஸ் எனப்

◆ பி. எஸ். வாரியர்



படும் பக்கவாதம், நரம்பு நோய்ச் சிகிச்சை, சரும வைத்தியம், மனநோய்ச் சிகிச்சை, எக்ஸிமா, ஜீரணக் கோளாறுகள், அல்சர், ஹைப்பராசிடிடி எல்லாவற்றுக்கும் சிகிச்சை அளிக்கிறோம்!'' என்றார் டாக்டர் வாரியர். ஸியாடிக்கா, ஆர்த்ரைடிஸ் சிகிச்சையும் உண்டு.

வைத்தியரத்தினம் பி. எஸ். வாரியர் 1944-ல் மறைந்த பிறகு, அவர் எழுதி வைத்த உயிலின் படி, அவர் மருமான் பி. மாதவ வாரியர் மானேஜிங் டிரஸ்ட்டியாகவும், தலைமை மருத்துவராகவும் பொறுப்பு ஏற்றார். ஆனால் ஒன்பதே ஆண்டுகளில், துரதிர்ஷ்டவசமாக, பம்பாயிலிருந்து வரும் போது, டிசம்பர் 53-ல் நிகழ்ந்த விமான விபத்தில் மனைவியுடன் மரணம் அடைந்

◆ வைத்திய ரத்தினம் பி. எஸ். வாரியர்.



தார். அவரது இளைய சகோதரர் பி. கே. வாரியர்தான் தற்போதைய மானேஜிங் டிரஸ்ட்டி.

ஜனாதிபதி வி. வி. கிரி, ஜெயப்பிரகாஷ் நாராயண், மொரார்ஜி தேசாய் போன்ற தலைவர்கள் இங்கே வந்து தங்கிச் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள்.

சமீபத்தில் பாராலிஸிஸ் நோய் வந்து தாக்குண்ட கர்நாடக முன்னாள் முதல்வர் வீரேந்திர பாட்டீல் வந்திருந்து சிகிச்சை எடுத்துக் கொண்டாராம்.

''எந்த மருத்துவரும், எல்லா நோய்களுக்கும் நிரந்தர, பூரண, குணம் கொடுக்க முடியும் என்று சொல்லக் கூடாது; சொல்லவும் முடியாது. நோய் வந்து அவஸ்தைப்படும் நோயாளி எவருக்கும், கூடுமான வரை அதிகபட்ச நிவாரணம் அளிப்பது ஒன்றுதான் ஒரு மருத்துவரின் கடமையாக இருக்க வேண்டும்!'' என்கிறார் டாக்டர் வாரியர் அழுத்தமாக.

ஆயுர்வேதக் கல்லூரி ஒன்றும் நடத்துகிறார்கள், ஆர்ய வைத்தியசாலையினர். ஐந்தரை வருட கோர்ஸ். வருடத்துக்கு முப்பது மாணவர்தாம். (கேரளத்தில் நான்கு ஆயுர்வேதக் கல்லூரிகள் இருக்கின்றன.)

ஆர்யவைத்திய சாலையில் பதினான்கு மருத்துவர்கள் தற்போது பணிபுரிகிறார்கள். எதிர் வாடையில், பிரம்மாண்டமான மருந்துத் தயாரிப்புத் தொழிற்சாலை. அதில் சுமார் இரண்டு டஜன் மருத்துவர்கள் தயாரிப்பில் ஈடுபட்டிருக்கிறார்கள். மூலிகைப் பண்ணைகளும் இருக்கின்றன.

பசுமையான, இயற்கை எழில் சூழ்ந்த, குளுமையான சூழ்நிலையில் அமைந்திருக்கும் கோட்டக்கல் ஆர்ய வைத்திய சாலைக்கு நாங்கள் போயிருந்த போது, டாக்டர் ஸ்காட் ஜெர்சன் எம். டி. நியூயார்க்கிலிருந்து வந்திருந்தார். அல்லோபதி வைத்திய முறையிலிருந்து ஆயுர்வேத வைத்திய முறையில் சிகிச்சை அளிக்க, அவர் பாதை மாறிக் கொண்டிருக்கிறார்.

''அமெரிக்காவில் சிலர் கிழக்கத்திய நாடுகளின் சிகிச்சை முறையின் பக்கம் கவனத்தைத் திருப்பி வருகிறார்கள்!'' என்றார் முதன்மை மருத்துவர் பி. எஸ். வாரியர்.

— நிருபர்

புகைப்படம் : யோகா

அதிகம் பேசாத ஸ்பீக்கர்



''தில்லியில் மக்கள் சபையிலேயே ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களின் மரணம் குறித்து அஞ்சலி செலுத்தப்பட்டு விட்டது! நாமும் அவ்வாறே மௌன அஞ்சலி செலுத்தி, அவையையும் ஒத்தி வைக்கவேண்டும்'' என்றனர் பல எம். எல். ஏக்கள். அதை வன்மையாக மறுத்தார் மகாராஷ்டிர மாநில சட்டசபையின் அப்போதைய சபாநாயகரும் இன்றைய லோக் சபா சபாநாயகருமான சிவராஜ் பாடீல்!

''அதிகார பூர்வமாக எனக்கு எந்தச் செய்தியும் வரவில்லை. நீங்கள் ஜஸ்லோக் மருத்துவமனைக்கு டெலிபோன் செய்து கேளுங்கள். அதற்குப் பிறகு ஆவன செய்கிறேன்'' என்றார். அப்படி போன் செய்த போது ஜே. பி. உயிரோடு இருப்பது தெரிந்தது! மத்தியில் மக்கள் சபை செய்த இமாலயத் தவறை மகாராஷ்டிர சட்ட மன்றம் செய்யவில்லை! காரணம், பாடீலின் முன் ஜாக்கிரதை மிக்க செயல்பாடு!

அளவாகப் பேசி நிதானத்தைக் கடைப்பிடிப்பவர் பாடீல். அதனால்தான் எப்போது சில எம். பிக்கள் சேர்ந்து மகஜர் தயாரித்துக் கையெழுத்து வேட்டையில் இறங்கினாலும் இவர் அதில் சேருவதில்லை. இதனால் இன்று இவர் யாருக்கும் விரோதியல்ல. எஸ். பி. சாவான் தாம் இவரது அரசியல் குரு. இவரை முதன் முதல் மகாராஷ்டிர மாநிலத்தில் துணை மந்திரி ஆக்கியவர் அவர்தாம். பவாருக்கும் இவர் நெருங்கிய நண்பர்.

மகாராஷ்டிரத்தில் லாத்தூர் மாவட்டத்தில் வக்கீலாகப் பணியாற்றிய சிவராஜ் பாடீல் ஒரு நல்ல வழக்கறிஞர்; பண்பான பேச்சாளர். பணக்காரக் குடும்பத்தில் பிறந்த இவர், மாஸ்டர் ஆஃப் லா பட்டத்துடன் மேலும் பல பட்டங்கள் பெற்றவர். 56 வயதான இவர் உண்மையில் ஒரு கன்னடத்துக்காரர். 'லிங்காயத்' வகுப்பைச் சேர்ந்தவர். ஒரு தலைசிறந்த அரசியல்வாதி என்றில்லாவிடினும், கடினமான உழைப்பாளி என்று பெயர் பெற்றவர்.

பாடீல் தமது உடைகளில் அதிக கவனம் செலுத்துபவர். என்றும் சலவை செய்யப்பட்ட மடிப்புக்கலையா உடைகள் அணிபவர். பல பட்டன்களோடு கூடிய, முழுக்கை கோட்டுடன் அதன் வண்ணத்துக்கேற்ற காலணி அணிவது இவருக்குப் பிடிக்கும். நேருஜி போல் ஒரு ரோஜா மலரையும் தமது கோட்டில் அணிந்து கொள்வார். ''பேசும்போது கை, கால்களை அசைக்கும் விதத்தில் அவர் ஒரு 'கதக்' நாட்டியக்காரர் போலக் காணப்படுகிறார்'' என்பார்கள் அவரது நண்பர்கள்! அவரது நடத்தையில் என்றும் நாகரிகம் மிளிரும். இப்போதைய லோக் சபாவில் பல சக்திகள் பல திசைகளில் இழுக்கும்; அவர் திறமைக்கு நிறையவே சவால்கள் இருக்கும். அவற்றைத் தமக்கேயுரிய நாகரிகத்துடனும் சாமர்த்தியத்துடனும் ஏற்றுச் சமாளிப்பார் என்று எதிர்பார்க்கலாம்.

– ராஜீவி நரசிம்மன்

படம் - நன்றி : வீக்லி

பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2344145; சர்க்குலேஷன் மானேஜர் : 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு: ரூ. 156/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால் ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு: ரூ. 78/-; வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 150/- விமானத் தபால்: ரூ. 350/-.

நினைவிருக்கட்டும், ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு இல்லாவிட்டால், உங்கள் குழந்தை எடை அதிகரிப்பதற்குத் தேவையான புரோட்டீனைப் பெறமுடியாது.

"ஆகவேதான் என் குழந்தைக்கு செரிலாக் தருகிறேன்."

உங்கள் டாக்டரைக் கேளுங்கள். அவர் இரண்டு உண்மைகளை உங்களுக்குத் தெரிவிப்பார். ஒன்று, குழந்தையின் தசை, திசு, ரத்தம் ஆகியவைவற்றைப்பேணி வளர்த்திட புரோட்டீன் உதவுகிறது. இரண்டு, சரியான புரோட்டீன்களைப் பெற, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள உணவு குழந்தைக்குத் தேவை. ஒவ்வொரு வேளையும் ஒவ்வொரு நாளும்.

வழக்கமான உணவுகள் மூலமாக இதைச் சமாளிப்பது பெரும்பாலான தாய்மார்களுக்கு எளிதல்ல.

இதற்குத் தீர்வு?

செரிலாக் காரணம், செரிலாக்கில் பால் மற்றும் கோதுமை உள்ளன. இவற்றில் புரோட்டீன் மிகுந்து இருக்கிறது. மேலும், செரிலாக்கில் கார்போஹைட்ரேட்கள், விட்டமின்கள், மினரல்கள், கொழுப்பு, இரும்பு மற்றும் கால்ஷியம் சத்துகள் சரியான விகிதத்தில் உள்ளன. நான்கு மாதம் முதல் குழந்தைக்கு வெறும் பால் உணவு மட்டும் போதாது. ஆகவே அப்போதிலிருந்து, கொடுக்கக்கூடியது, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள திட உணவு செரிலாக். இது மிகுந்த சுவை உள்ளதாக இருப்பதால், குழந்தைகள் மிகவும் விரும்புகிறார்கள்.

ஆகவே, ஊட்டச்சத்துகள் சமச்சீராக உள்ள செரிலாக்கின் அனைத்து அனுகூலங்களையும் உங்கள் குழந்தைக்கு அளியுங்கள். குழந்தைக்கு 6 மாதம் ஆனதும் வீட்-ஆப்பிள், வீட்-ஆரஞ்சு மற்றும் வீட்-வெஜிடபிள் ஆகியவற்றின் கூடுதல் அனுகூலத்தையும் அளியுங்கள்.

பேக்கின் மீதுள்ள விதிமுறைகளைப் பின்பற்றுக.

இலவசம் செரிலாக் பேபி கேர் புத்தகம்

எழுதுங்கள்: செரிலாக், போஸ்ட் பேக் நம்பர் -21, புது தில்லி-110 029

நெஸ்லேயின் ஒரு தரமான தயாரிப்பு





Mudra D: NES: 0020 TAM

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் செரிலாக்.

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka